
www.tamilarangam.net

மார்ச் 1997

# பாலம்







## புலம்பெயர் வழி மரணங்கள்



## புதுச்சேரி வரலாற்றில் துய்ப்ளேக்ஸ்

## துணைக்கண்டத்தின் பாதுகாப்புக் கவசம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ் வாழ் தமிழீழ மக்களின் பேராதரவுடன்
புதுப் பொலிவில் கோலாகலமாகத் திறக்கப்பட்டுள்ளது

சூரிச் நகரில் கடந்த 2 மாதங்களாக
தாய்நாட்டின் அறுசுவை உணவுகளை
தயாரித்து அளித்த உணவகம் புதிய
முகவரியில், புதுப் பொலிவுடன்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது

# தமிழினி உணவகம்

MILTAR STRASSE 91, 8005 ZURICH. Tel: 01/242 57 07

In middle of
zürich city

Restaurant
THAMILINI

தாயகத்தின் சுவைகுன்றாத பல்வேறு
உணவு வகைகளும் தேர்ச்சிபெற்ற
சமையற் கலை வல்லுனர்களால்
சமைத்து வழங்கப்படும்

பல்வேறு வகைப்பட்ட பிரியாணி,
கொத்துரொட்டி, பிட்டு, இடியப்பம்,
அப்பம், தோசை, ஒடியற் கூழ் மற்றும்
றோள்ஸ், கட்லற், வடை

சுவிஸ், இத்தாலி, பிரெஞ்சு வகை
சுவையான உணவு வகைகள்
அனைத்தும் ஒரே இடத்தில்

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து விழாக்களுக்குமான சகல
உணவு வகைகளும் குறித்த நேரத்தில்
செய்து தரப்படும்

www.tamilarangam.net





துணைக்கண்டத்தின் பாதுகாப்புக் கவசம்

- பக்கம் 5



புதுச்சேரி வரலாற்றில் துய்ப்ளேக்ஸ்

- பக்கம் 17



பிரான்ஸ்:
அகதிகளுக்கு புதிய நெருக்கடி

- பக்கம் 9



புலம்பெயர் வழி மரணங்கள்

- பக்கம் 12



ஆசியாவை ஆள நினைக்கும் ரஷ்யா!

- பக்கம் 42



வளர்ந்துவரும் நாசிகளின் நெருக்கடி

- பக்கம் 25

## பாலம்

★ மேற்குலகிற்கு சவால்விடும் சீனா - பக்கம் 14

★ 'முகம்கொள்' - சிறுகதை - பக்கம் 27

★ பயம் - மதம் x பகுத்தறிவு - பரிமாணம் - பக்கம் 32

★ புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி - பக்கம் 36

★ தீமோர் பிரச்சினையும் நோபல் பரிசும் - பக்கம் 40

## சிரித்திரன்

தமிழீழத்தின் தலைசிறந்த கேலிச்சித்திர ஓவியரும் சிரித்திரன் பத்திரிகை ஆசிரியரும் சிறந்த சிந்தனையாளருமான திரு. சுந்தர் அவர்கள் மறைந்த ஒரு வருட நினைவையொட்டி, சிரித்திரன் பத்திரிகையில் வெளிவந்த அவரது சில ஆக்கங்களை அப்படியே தருகிறோம்.

தமிழீழத்தில் அரசின் பொருளாதாரத்தடை காரணமாக பத்திரிகைத் தாளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் கூட அப்பியாசக் கொப்பிக்குப் பயன்படுத்தப்படும் தாள்களில் தனது பத்திரிகையை அச்சிட்டு தனது இன உணர்வை வெளிப்படுத்தியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


LUNE

# எமது புதிய CD Video வெளியீடுகளில் சில







உள்ளத்தை அள்ளித்தா, காதல் கோட்டை, காதல் தேசம், தளபதி, ரோஜா, மன்னன், புன்னகை மன்னன், சிந்து பைரவி, 16 வயதினிலே, செந்தமிழ்ப்பாட்டு, கிழக்குச் சீமையிலே, ஸ்ரீராக வேந்தர், ஆசை, இந்தியன், கர்ணன், அம்மன், சலங்கை ஒலி, மேட்டுக்குடி, கல்கி, அவ்வை சண்முகி, சேனாதிபதி, அலெக்ஸாண்டர், கோகிலத்தில் சீதை, M.R. ரோமியோ, Mega Hits Vol: 2, Mega Hits Vol: 3, Mega Hits Vol: 4, A.R. Rahman's Greatest Hits Vo -1, A.R. Rahman's Greatest Hits Vo -2, A.R. Rahman's Greatest Hits Vo -3, Enchanting Duets of S.P.Bala

**5, Rue Perdonnet, 75010 Paris. (M°: La Chapelle ou Gare du Nord) Tel: 01 42 09 21 43**

# சகலவிதமான அச்சுத்தேவைகளுக்கும்

# தமிழ் அச்சகம்

**60, Rue Louis Blanc, 75010 Paris. (M°: La Chapelle ou Gare du Nord) Tel: 01 42 09 60 64**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# PAALAM

Magazine Tamoul mensuel
Impression:
Vasan Litho Printer (London)

# பாலம்

சமூக – அரசியல் – கலை
இலக்கிய சஞ்சிகை

மாதம் ஒருமுறை



முகவரி

Paalam

B.P 234
75921 Paris
Cedex 19
Tel: 40 37 63 63
Fax: 40 37 64 64



மார்ச் 1997


**தனிப்பிரதி - ஆண்டுக்கான சந்தா பற்றிய விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பிரான்ஸ்: | தனிப்பிரதி | - 10 FF |
| | 12 மாதம் | - 180 FF |
| சுவிஸ்: | தனிப்பிரதி | - 3 SF |
| | 12 மாதம் | - 48 SF |
| ஜெர்மனி: | தனிப்பிரதி | - 3 DM |
| | 12 மாதம் | - 48 DM |
| இங்கிலாந்து: | தனிப்பிரதி | - 1£ |
| | 12 மாதம் | - 18 £ |
| நோர்வே: | தனிப்பிரதி | - 12 NOK |
| | 12 மாதம் | - 180 NOK |
| டென்மார்க்: | தனிப்பிரதி | - 12 DKr |
| | 12 மாதம் | - 180 DKr |
| கனடா: | தனிப்பிரதி | - 2.50 C$ |
| | 12 மாதம் | - 45 C$ |

# நீங்களும் துணைவர வேண்டுகிறோம்

இது பாலத்தின் நாலாவது இதழ் வழமைக்கு மாறாக மிகமிகத் தாமதமாக மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னரே வெளிவருகிறது.

அதற்கு காரணம் நீங்கள் அறிந்ததே. எங்கள் கஜனினதும் நாதனினதும் இழப்பே அதுவாகும்.

1996-ம் ஆண்டு தை மாதம், ஈழமுரசு குடும்பத்திலிருந்து ஒரு தரமான சஞ்சிகை ஒன்றை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் கஜனுக்கு ஏற்பட்டது. இலக்கியம், அரசியல், சமூகம், என்ற ஓரளவுக்கு ஆழமான விடயங்களை தேடல் பார்வையோடு ஆய்வு செய்து எழுதி வெளிக்கொணர வேண்டும் என்று அவர் விரும்பினார்.

கஜனது இந்த விருப்பத்திற்கு தூண்டு கோலாக அமைந்தவர் நாதன் என்பது பலருக்குத் தெரியாது. நாட்டிலே யுத்தகாலச் சூழ்நிலை இருந்தும் நல்ல தரமான சஞ்சிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இங்கே ஐரோப்பாவில் நல்ல வசதிகள் இருந்தும் அதையெல்லாம் பயன்படுத்தாமல் இருக்கிறோமே நாங்கள். முயற்சித்தால், நல்ல ஒரு தரமான சஞ்சிகையை இங்கு வெளியிட முடியும், நல்ல விடயங்களை நாங்கள் தமிழுக்கு அறிமுகம் செய்யமுடியும் என்று நாதன் சொன்ன ஆலோசனைதான் கஜனுக்கு பாலத்தை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியது.

ஏறத்தாழ 1996-ம் ஆண்டின் பிற்பகுதிவரை இந்தச் சஞ்சிகைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்ற தேடல் நடந்தது. கஜன் பலரிடமும், இது பற்றி ஆலோசனை கேட்டிருந்தார்.

முதலில் 'பதிவு' என்றே பெயர் வைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பின்பு கஜன், 'பாலம்' என்ற பெயரை வைக்கலாம் என்று முடிவு செய்தார். ஏற்கனவே இந்தப் பெயரில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு சஞ்சிகை தமிழகத்திலிருந்து வந்ததால், சம்பந்தப்பட்டவர்களிடம் அனுமதி பெற்று பாலம் வெளியிடப் பெற்றது.

ஏற்கனவே வெளிவந்த பாலம் இதழ்கள் மூன்றும் கஜனது மேற்பார்வையிலேயே வெளிவந்தது. அதைப் பதிப்பித்துக் கொடுப்பதில் நாதனது பங்களிப்பு இருந்தது.

இந்த நான்காவது இதழ் உங்கள் கைகளுக்கு வரும் இந்த நேரத்தில் அந்த இருவருமே இன்று எங்களுடன் இல்லை. மாவீரர்களாகிவிட்ட அந்த இருவரின் நினைவுகளுடன், அவர்கள் தொடங்கிவிட்ட பணியை, அவர்கள் வழியில் தொடர்ந்து நடைபோடும் எங்களுடன், பாலம் வாசகர்களே நீங்கள் துணைவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உதய காலங்கள்

சின்னச் சின்ன
நிலவுகள் கூட
ஆயுதம் ஏந்துகின்றன
இனி
அமாவாசை இருள்களுக்கு
அஞ்சாத வாதம்தான்



நடுக்கடல் சூறாவளியில்
கட்டு மரங்களில்
எம்மை
தவிக்க விட்டுவிட்டு
தொலைதூரத் தரைகளில்
எங்கோ
தப்பித்துக் கொண்டனர்
மீகாமன்கள்

வேர்கள் எரிகையில்
இவர்கள்
கிளைகளுக்கு
பூச்சூட்டிக் கொண்டிருந்தனர்

தேர்தல் காலத்
திருவிழாக்களில்
இவர்கள்
சட்டைப்பைகளில்
அள்ளக்குறையாத
அட்ஷய பாத்திர வாக்குறுதிகள்

எங்கள் கைகளில்
என்றைக்குமே
பிச்சைப்பாத்திரங்கள்தான்

இந்த
முகமில்லாத மனிதர்கள்
காலத்துக்கு ஒன்றாய்
மேடைக்கு ஒன்றாய்
ஆளுக்கொன்றாய்
வேஷம் போடும் — இவர்கள்
முகமில்லாத மனிதர்கள்

அந்த
மேடை வானங்களின்
வார்த்தை மழைகளில்
எங்கள் மன வயல்கள்
நனைந்ததென்னவோ
உண்மைதான்
பின்னர்தான் தெரிந்தது
அது — வெறும்
கானல் மழையென்று

இதனால்தான் — இன்று
சின்னச் சின்ன நிலவுகள் கூட
ஆயுதம் ஏந்துகின்றன.
இனி,
அமாவாசை இருள்களுக்கு
அஞ்ஞாத வாசம்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துணைக்கண்டத்தின் பாதுகாப்புக் கவசம்?

- க. குறிஞ்சி -

ஈழச் சிக்கலை எதிர்கொள்வதில் தமிழகத்தின் மனோநிலை நேர் கோட்டுத்தன்மையில் இல்லை என்பது கண்கூடு. எழுச்சியும், வீழ்ச்சியுமான இதன் எல்லைகள், இச் சிக்கலுக்குச் சம்பந்தமில்லாத காரணங்களால் தீர்மானிக்கப்படுவது மிகப் பெரிய அவலம். ஓர் அரசியல் கட்சியின் தேசபக்தியோடு ஈழச்சிக்கல் முடிச்சுப் போடப்படுவது, தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகிப் போனதும் வேதனைக்குரியதே!

சராசரி தமிழனின் எதிர்வினையும், அரசியல் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றமடைவதும் வழக்கமாகி விட்டது. 1983-ல் கண்டது போலல்லாமல், ஈழமக்களின் மீதான அக்கறை திடுமென சுயநலச் சேற்றில் மூழ்கி மூச்சொழிந்து விட்டதோ என்ற ஐயம் ஒருகணம் மின்னி மறையலாம். ஆனால், ஆங்காங்கே அமைப்பாகவும் தன்னெழுச்சியாகவும் ஈழமக்களின் அவலங்கள் குறித்தும், அகதிகள் குறித்தும் பீறிடும் கரிசனம் இச் சித்திரத்தின் இன்னொரு பக்கமாக முகங்காட்டுகிறது.

காவிரிப் பிரச்சனையில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது அவர்களுக்கு ஆதரவாக எழுந்த ஆதரவுப் பேரலையும் ஈழ ஆதரவுப் பேரலையும் சமதன்மையோடு ஓங்கிநின்றது. தமிழரின் அந்தரங்கத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது. பூகோளக் கோடுகள் சகோதரவாஞ்சையை முறித்து விடுவதில்லை. உலக வரலாற்றில் இது ஒன்றும் புதிதுமல்ல!

அண்மைக்கால நட்புகள் சிலவற்றை பருந்துப் பார்வையில் நோக்கினாலும் இந்த உண்மை விளங்கிவிடும். (அமெரிக்க இளைஞன் ஒருவன் சிங்கப்பூரிலுள்ள வாகனங்களின் மீது ஆபாசமான வாசகங்களை எழுதியதற்காக, அந்நாட்டு அரசு அவனுக்குப் பிரம்படி தண்டனையைப் பரிந்துரை செய்தது. இச்செய்தி அமெரிக்காவிற்கு எட்டியவுடன், அந்த அமெரிக்க இளைஞனுக்கு ஆதரவாக எண்ணற்ற அமெரிக்கர்கள் திரண்டனர். பிரம்படி தண்டனையை இரத்து செய்யும்படி அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனுக்கு நெருக்கடி தந்தனர். அதே போல், தாய்லாந்து நாட்டைச் சார்ந்த பெண்ணொருத்தி சவுதி அரேபியாவில் பணிப்பெண்ணாக பணியாற்றிவந்தாள். வேலைசெய்த குடும்பத்தைச் சார்ந்த குழந்தையை அவள் கொன்றுவிட்டாள். அதனால் அவள் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், அப்பெண், தங்கள் நாட்டைச் சார்ந்தவள் என்ற ஒரே காரணத்திற்காக எண்ணற்றோர், அவளுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் எனக் கோரி தாய்லாந்தில் பேரணி நடத்தினர்.



இன்னுமொரு நிகழ்ச்சி! அமெரிக்கப் போர்வீரன் ஒருவன் ஜப்பானியப் பெண் ஒருத்தியைப் பாலியல் வன்முறைக்குட்படுத்திவிட்டான் என்பதற்காக, ஜப்பானில் அந்த அமெரிக்கப் போர்வீரனுக்கு கடுந்தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அவன் அமெரிக்கன் என்ற ஒரே காரணத்திற்காக அமெரிக்கர்கள் பலர் திரண்டெழுந்து அவனுக்கு ஆதரவுக் குரல் எழுப்பினர்.

இவை எல்லாம் உணர்த்துவது என்ன?

தன் நாட்டைச் சார்ந்தவன் - தன் இனத்தைச் சார்ந்தவன் என்ற ஒரே காரணத்திற்காக அவன் செய்த கொடும் குற்றங்களைக் கூடப் பொருட்படுத்தாது அவனுக்கு ஆதரவாக மக்கள் திரண்டெழுவதை மிக அடிக்கடி பல்வேறு நாடுகளிலும் காணமுடிகிறது.

ஆனால், தமிழகத்தோடு தொப்புள்கொடி உறவு கொண்டிருக்கும் ஈழத்தமிழர் படும் அவதிகளை வார்த்தைகளால் விவரிக்கமுடியுமோ? எவ்விதத் தவறும் புரியாத அப்பாவி மக்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், சிங்களக் காடையர்களாலும், சிங்கள இராணுவத்தாலும் பச்சைப் படுகொலை செய்யப்படுவதை ஊமைச் சாட்சிகளாக நின்று பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா? கொலைக்காரன், கற்பழிப்புச் செய்தவன் இவர்களையெல்லாம் ஆதரிக்கும் போக்கு உலக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரங்கில் ஒருபுறம். ஆனால் தவறே செய்யாத அப்பாவிமக்கள் மீது கொடுந் தாக்குதல் நடத்தும் பெருந் தேசிய சிங்கள இராணுவம் இதே அரசாங்கத்தில் மற்றோர்புறம். அண்மையில் செத்துமடிந்த ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்தின் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியபோது சொன்னதென்ன? "யாழ்ப்பாணத் தமிழர் உயிர் பற்றியோ, அவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ எமக்குக் கிஞ்சித்துக் கவலையில்லை" என்ற ஜெயவர்த்தனாவின் அகம்பாவ வாசகம், இன்றையவரை சிங்கள அரசின் கோட்பாடாகவே இருப்பதை யார்தான் மறுத்துவிட முடியும்?

வரலாற்றில் இதைப் போன்ற சகிக்கமுடியாத அநியாயங்கள் நிகழும் பொழுது, மனச்சாட்சி உடைய எவனும் கைகளைக் கட்டிக்கொண்டு வாளாதிருக்க முடியாது. இதைப் போன்ற அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் நிகழும்போது, நல்லவர்கள் செயலற்றிருப்பது எதிரியின் கொடுமையைவிட மோசமானது. மார்ட்டின் நீமொல்லரின் கவிதை இதைத்தான் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

## ஜெர்மனியில் நாஷிகள்

"முதலில் கம்யூனிஸ்டுகளைப் பிடித்துக்கொண்டு போகவந்தனர். நான் வாயைத் திறக்கவில்லை.

ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் அல்ல!

பிறகு அவர்கள் யூதர்களைப் பிடித்துக் கொண்டு போக வந்தனர். நான் ஏதும் பேசவில்லை.

ஏனெனில் நான் யூதனல்ல!

பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளைத் தேடிக் கொண்டுவந்தனர். நான் ஏதும் பேசவில்லை.

ஏனெனில் நான் தொழிற்சங்கவாதியல்ல!

பிறகு அவர்கள் கத்தோலிக்கரைத் தேடிக்கொண்டு வந்தனர்.

நான் ஒரு புரொடெஸ்டெண்ட் எனவே நான் ஏதும் பேசவில்லை!

பிறகு அவர்கள் என்னைப் பிடிக்க வந்தனர்

அப்போது எனக்காகப் பேசுவதற்கு யாருமே இல்லை!"

எனவே ஈழத்தில் நடைபெறும் கொடூரங்களை கண்டிக்க நாம் தவறினால், நாளை நம்மீது பாயும் அடக்குமுறையைக் கண்டிக்க ஆளில்லாமல் போய்விடும் என்பதைத் தமிழக மக்கள் உணர்ந்தேயுள்ளனர்.



"வியட்நாம் விடுதலைப்போர்" நடைபெற்ற பொழுது அவர்களுக்கு உதவுவதற்காக சீனா தனது எல்லைகளைத் திறந்துவிட்டது. வியட்நாமியர் எப்பொழுது வேண்டுமானாலும் தங்கள் நாட்டிற்குள் வந்து தங்கிக் கொள்ளலாம் என செஞ் சீனா பிரகடனப்படுத்தியது. இந்த ஒளிமிக்க உதாரணத்தைப் பின்பற்றி, இன்னலுறும் ஈழ மக்களுக்குத் தமிழகம் அடைக்கலத் தரவேண்டுமா?

ஈழமக்கள் செய்த குற்றம்தான் என்ன? தங்களது பாரம்பரிய தாய் மண்ணை அவர்கள் இழக்கமுடியுமா?

ஆஸ்திரேலிய கான்பராவில் நடைபெற்ற நீதியோடு கூடிய சமாதானம் எனும் பன்னாட்டு மாநாட்டின் இறுதி தீர்மானமும் இதைத் தானே சுட்டிக்காட்டுகிறது?

"ஈழச்சிக்கலுக்கு தீர்வு இரண்டு நடப்பியல் உண்மைகளை அங்கீகரிப்பதில் அடங்கி உள்ளது.

அ) இலங்கைத் தீவில் தமிழ், சிங்கள தேசிய இனங்கள் உள்ளன.

ஆ) இவ்விரு தேசிய இனங்கட்கும் வரலாற்றுரீதியாக வரையறுக்கப்பட்ட பாரம்பரியப் பகுதிகள் உள்ளன"

ஆனால் 'புத்தம் சரணம் கச்சாமி' என உச்சாடனம் செய்து கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாத அரசு இந்த நியாயத்தை அங்கீகரிக்கப் போகிறதா? ஒருக்காலும் இல்லை!

அப்பட்டமான சுயநல வேட்கையோடுதான் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துகிறது இலங்கை. இந் நடவடிக்கைகள் இரு முகங்களைக் கொண்டிருப்பதை எவரும் எளிதில் அவதானிக்கமுடியும். இலங்கையின் இராணுவ வலிமையைப் பெருக்குவது என்பது ஒன்று. தன் எதிர் காலத்திற்கு அமெரிக்காவைச் சார்ந்திருப்பது என்பது மற்றொன்று. இந்த இரண்டாவது அம்சம், இந்தியத் துணைக்கண்டத்தின் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும். எனவே, தமிழர் இது குறித்து மிக்க இராஜதந்திரத்தோடு நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

திருகோணமலையைத் தன் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருக்கிறது. ஏனெனில் இன்றைய அரசியல் - புவியியல் சூழலில், திருகோணமலையின் இராணுவ முக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யத்துவம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். "திருகோணமலையை தன் ஆதிக்கத்தில் வைத்திருப்பவர்கள் தென்கிழக்கு ஆசியாவையே ஆளலாம்" எனக் குறிப்பிட்டார் வின்சன்ற் சர்ச்சில். அப்படிப்பட்ட மையமான இடத்தில்தான் அமெரிக்கா தன் செய்தி ஊடகங்கட்கான இடத்தைத் தெரிவு செய்கிறது. இதற்குக் கைம்மாறாக, இலங்கைக்கு நேரடியாக அமெரிக்கா ஆயுத விற்பனை செய்கிறது. தன் "நட்பு" நாடுகள் மூலமும் மறைமுகமாக ஆயுத உதவி அளிக்கிறது.

தன் கட்டுப்பாட்டிலுள்ள பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவியளிக்கிறது. ஈழமக்களின் மீதான அநீதியான போருக்கு முதுகெலும்பாகத் திகழ்வது இந்நிதி உதவிதான் என்பது சொல்லாமலே விளங்கும். (அமெரிக்க இராணுவத்திலுள்ள "பச்சைத் தொப்பிகள்" எனும் சிறப்புப் படைப் பிரிவினர் தேர்ந்தெடுத்த இலங்கை இராணுவத்தினருக்கு விஷேசப் போர்ப் பயிற்சி தருகின்றனர். மேலும் ஈழத்தில் சிங்கள இராணுவம் கொலைவெறியாட்டம் நடத்தி மனித உரிமைகளை காலில் போட்டு மிதித்தழிக்கின்றனர். இதுபற்றி மூச்சு விடாத அமெரிக்கா, தமிழர் மீது மட்டும் அடிக்கடி தன் கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

தன் நாட்டில் நெருக்கடி நேரும் பொழுதெல்லாம், இந்திய அரசின் துணையை நாடிப் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை இலங்கை அரசு. ஆனால் அண்மையில் வல்லரசு நாடுகளால் முன்வைக்கப்பட்ட அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தில் (Ctbt) இந்தியாவிற்கு ஆதரவளிக்காமல் வல்லரசு நாடுகட்கு ஆதரவாக முதலிலேயே கையெழுத்திட்டது இலங்கை அரசு. இவையெல்லாம், இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

எனவே ஜனநாயகத்தை நேசிப்பவர்கள், இலங்கை மென்மேலும் ஆயுதபாணியாக மாறுவதைத் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இலங்கைக்குப் பிறநாடுகள், முக்கியமாக அமெரிக்கா, ஆயுதம் வழங்குவதைத் தடுப்பதற்கான நெருக்கடியையும் உருவாக்க வேண்டும். அதே போல் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறலைக் கண்டித்து அனைவரும் குரலெழுப்ப வேண்டும். நாற்பது நாடுகளிலுள்ள எட்டுக் கோடித் தமிழர்கள் இதில் முன்னணியில் நிற்க வேண்டியது வரலாற்றுக் கடமையாகும்.

என் தாய்நாட்டிற்காகக் கொடுப்பதற்கு என்னிடம் ஒரே ஒரு உயிர் தானே இருக்கிறது என வேதனைப்பட்ட நாதன் ஹேலின் ஏக்கம், நமக்கோர் ஆதர்சமாக இருக்கிறது. இதையே நெருப்புவரிகளால் எழுதிக் காட்டினான் அப்துல் ரவூஃப்.

ஈழத்தமிழர் எப்பொழுதுமே முன்னோடும் பிள்ளைகள்!

அதனால்தான், பாரதிதாசனும்

"தென்றிசையைப் பார்க்கிறேன்; என் சொல்வேன் என்றன் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடா!"

என இலங்கைத் தமிழரைப் பார்த்துப் பூரிப்படைந்தார்.

ஈழத்தின் விடியல், நம் வைகறைக்குக் கட்டியங்கூறும். ★

# ஐரோப்பாவிலும் வறுமை



செல்வம் கொழிக்கும் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளிலும் வறுமையில் வாடும் மக்கள் நிறையவே இருக்கிறார்கள்.

குடும்பங்கள் என்ற அடிப்பையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஆகக்கூடிய மக்களைக் கொண்ட நாடாக இங்கிலாந்து விளங்குகிறது. அங்கு 43 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளன. பிரான்சில் 29 இலட்சத்து 10 ஆயிரம் குடும்பங்களும், ஜேர்மனியில் 23 இலட்சத்து 10 ஆயிரம் குடும்பங்களும், டென்மார்க்கில் 1 இலட்சத்து 70 ஆயிரம் குடும்பங்களும், ஒல்லாந்தில் 4 இலட்சம் குடும்பங்களும், போர்த்துக்களில் 9 இலட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மக்கள் தொகை வீகிதாசார அடிப்படையில் போர்த்துக்கல்லே வறுமைக் கோட்டில் முதலிடம் வகிக்கிறது. அங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 31.7 வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாடுகின்றனர். அடுத்த இடத்தை இங்கிலாந்து பெறுகிறது. அங்குள்ள மொத்த மக்கள் தொகையில் 21.7 வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர். ஆகக் குறைந்த இடத்தை ஒல்லாந்து பெறுகிறது. அங்குள்ள மக்கள் தொகையில் 7.9 வீதமானவர்களே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இணைதல்

S. RASALINGAM
DORNACHE Str - 79
4053, BASEL, SWISS.

அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு,

இன்று எமது கைகளில் தவழுகின்ற சஞ்சிகைகளில், எமது மக்களின் விழிப்புணர்வுகளுக்காகவும், போராட்டத்தின் பக்கபலமாகவும், பணியாற்றும் பாலம் சஞ்சிகை ஆசிரியராகிய தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் 'முரண்பாடுகள்' விவாதக் கட்டுரைத் தொடரை படித்தேன், விவாதங்கள் மூலமாக அறிவை வளர்த்துக் கொள்ள அதிகமான வாய்ப்புக்கள் உண்டெனக் கருதுகிறேன். ஏன் என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கை இல்லை, தவறுகள் சுட்டிக் காட்டாமல் விடுவது, அறிவியலுக்கு நாம் செய்யும் துரோகமாகக் கருதப்படுகிறது.

"நன்றேதரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே ஒழியவிடல்" என்கின்ற வள்ளுவன் கூற்றுக்கு அமைய, வாதங்களும், பிரதிவாதங்களும் நியாயப்படுத்தப்பட்ட நியாயங்களாக இல்லாமல், உண்மை விளக்கத்துக்கு முரண்படாமல், வெறும் மறுப்புக்கருத்தாக இல்லாமல், மாற்றுக்கருத்தாக, வாசகர்களை "பார்வை அற்றவர்கள் ஆராய்ந்த யானையின் கதையாக ஆக்காமல்" ஆசிரியர் சொல்வது போல் நானும், மற்றவர்களும் பயன்படும் வகையில் ஆராயப்படும் விவாதக்கட்டுரைகளை படிக்க ஆர்வமுடைய நானும், என் பங்குக்கு என் கருத்தையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பியே இதை எழுதுகிறேன்.

விஞ்ஞானத்தின் வேகம், மேற்கத்திய நாகரீகத்தின் வளர்ச்சி, தொழில் நுட்பரீதியான புதிய கண்டுபிடிப்புகள் என்று வேகமாக வளர்ந்து நகர்ந்து செல்லும் சமூகம், இன்பங்களை மட்டும் அனுபவிக்க ஆர்வமுடையவர்களாக, ஈடுகொடுக்கும் வகையில் மிக விரைவாக பணம் சம்பாதிக்கவும், வட்டி, சுரண்டல், தொள்ளை இலாபம், சீட்டு, கொலை, ஆட்கடத்தல், மது, மாது, போலிமதங்களின் கவர்ச்சி என்று தர்மத்துக்கெதிராக முரண்பட்டு சிறப்பான குணங்களை மறந்து "விறைப்பான வாழ்க்கை" நடத்துகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறுவிதமான நிலைப் பாடுகளை கொண்டுள்ளான். அவலங்களும், வேதனைகளும், புறக்கணிப்புகளும், இதயத்தை இம்சிக்கும் நிலையில் தடுமாறுகிறான், சிந்தனை பொறுமைக்கு இடங்கொடாத துயரநிலை எல்லா இடங்களிலும், எல்லார் உள்ளங்களிலும் வியாபித்துக்கொள்ளும் போது, முரண்பாடுகள் அரக்க குணத்தோடு இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன.

தனிமனிதனுக்குள்ளே உதயமாகும் முரண்பாடுகள். அங்குதான் நாம் அஸ்தமனத்தையும் எதிர்பார்க்கமுடியும். ஒவ்வொரு தனிமனிதனின் அனுபவங்களால் எழுகின்ற எண்ணங்களின் வேறுபாடே முரண்பாடுகளுக்கு வித்திடுகின்றன. எமது சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடுகள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும் போது, வெளியிலிருந்து நாம் அதை எதிர் பார்ப்பது ஏற்புடையதல்ல. குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல் இவைகளில் எழுகின்ற முரண்பாடுகள் சர்ச்சைக்குரியதாய் விவாதிக்கப்படுகிற பொழுது, தனிமனிதன் எண்ணங்கள், பேச்சுகள், செயல்கள் வேறுபட்டுத் தனக்குத்தானே முரண்பாடுடையவனாக இருப்பதை தெளிந்து உணர மறுக்கிறான்.

கொள்கையின் மாறுபாடு, எண்ணங்களின் தன்மை கட்டுப்பாடற்ற அசைவின் வளர்ச்சி, தெளிவற்ற சிந்தனை, தான் தோன்றித்தனமான முடிவு, இவற்றின் வெளிப்பாடே முரண்பாடு, பொதுவாக முரண்பாடற்றவர்கள் என்று கணிப்பிட மனித சமுதாயம் ஒன்றிருப்பதாக நான் கருதவில்லை. அப்படி தோற்றமளிக்கும் வகையில் செயல்படுகின்ற ஒரு உறவோ, தொடர்போ, ஏதோ ஒன்றுக்காக விட்டுக்கொடுத்து இடத்தைப் பிடிக்கிறது. "இருக்கலாம்" என்கிற ஒரு வார்த்தை மூலம் முரண்பாட்டின் பலத்தை குறைத்து ஒரு சமரச நிலையை அடைய வாய்ப்பு இருந்தாலும், அவை நிரந்தரமான ஒரு தீர்வாகாது. பிடிபட்டால்தான் திருடன். ஒரு உண்மை தெரிகிறவரை அது பொய்தான், எந்த ஒரு முரண்பாடும் தெளிநிலை அடைய அதற்குரிய காலம்வரை காத்துக்கிடக்க வேண்டும்.

**உதாரணமாக:-** மனித விலங்குகளின் ஈடேற்றத்திற்கு முன் இருந்த ஒரு உயிரின் வளர்ச்சிப் போக்கே மனித குல தோற்றத்திற்கே வழிவகுத்ததென, விஞ்ஞான பூர்வ ஆய்வான "மனிதன் தோற்றம் பற்றிய பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை" டார்வின் என்ற விஞ்ஞானி கூறியதை விஞ்ஞான உலகம் ஏற்றுக்கொண்டபோதும், ஆண்டவன் மனிதனைப் படைத்தான் என்ற மதக் கொள்கைக்கு இந்த பரிணாம வளர்ச்சித் தத்துவம் முரணாக இருந்ததால் மதபீடங்கள் இத்தத்துவத்தை புறக்கணித்தன. 137 ஆண்டுகளின் பின் அதே மனித தோற்றம் பற்றிய பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை விஞ்ஞானிகள் சபையில் பாப்பரசரே வரவேற்று உபசரித்திருக்கிறார்.

உணர்வின் உணர்ச்சிகள் உடலின் உணர்வையே மாற்றுகின்றன. இதன் முரண்பட்ட நிலையால் ஏற்படும் இடர்பாடுகள் ஏராளம். சாக்கிரட்டிசின் வாக்குத்திறமையும், இயேசுவின் அன்பு அறிவுரைகளும், ஆபிரகாம்லிங்கனின் அடிமைப்புர்ட்சியும் அவர்களின் உயிருக்கு காரணமாகவில்லையா?

முரண்பாடுகள் ஒரு வகையில் ஒரு உண்மையின் வெளிப்பாடாக, மூட நம்பிக்கையின் அஸ்தமனமாக, விழிப்புணர்வின் வடிகால்களாக இருப்பது அடிப்படை உண்மையாக இருந்தாலும், நடைமுறையில் சமுதாய சீரழிவையே பகிர்கின்றன. ஆகவே முதலில் எமக்குள் எழுகின்ற எண்ணங்கள் தெளிநிலையில் வெளிப்பட்டு செயல்முறையில், நடைமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, எமக்குள் தோன்றி மறையும் முரண்பாடுகள் துடைத்தெறியப்படும் வரை "மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில்" கதையாகவே இருக்குமென சொல்லி முடிக்கிறேன்.

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட் கோட்டம் இன்மை பெறின்"

தங்கள் அன்பு வாசகன்
சி. இராசலிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரான்ஸ்

# அகதிகளுக்கு புதிய நெருக்கடி

## குடும்ப உறுப்பினர்கள் ஒருங்கிணைப்பில் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள்



வதிவிட அனுமதியற்ற ஆபிரிக்க இனத்தவர் பாரிஸ் தேவாலயமொன்றில் உண்ணாவிரதம் இருக்கும் காட்சி...

பிரான்சில் சோசலிஸ்டுகள் ஆட்சியில் இருந்தபோது, அரசியல் தஞ்சம்கோரும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப் பட்டுவந்த பல சலுகைகள், வலது சாரி அரசாங்கம் பதவிக்கு வந்தவு டன், படிப்படியாகக் குறைக்கப் பட்டு இல்லாமல் செய்யப்பட்டு விட்டன.

குறிப்பாக, அகதிகளுக்கான ஜெனிவா சட்டத்தின் அளவு கோலை பிரயோகிப்பதில் சோச லிஸ்ட் அரசாங்கம் காட்டிய நெகிழ் வுத் தன்மை தற்போதைய வலது சாரி அரசாங்கத்தில் அகற்றப்பட்டு 'ஜெனிவா சட்டத்தின் அடிப்படை யில் உங்களது அகதி விண்ணப்பக் கோரிக்கை அமையவில்லை' என்று கூறி நிராகரிப்புச் செய்யும் போக்கு அகதிகள் திணைக்களத்தின் (OFFRA) ஒரு சம்பிரதாய நடவடிக்கையாக ஆகிவிட்டதாக பாதிக்கப்பட்ட வெளி நாட்டு அகதிகள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

மூன்றுமுறை அகதிகள் திணைக்கள மற்றும் மேல் முறையீட்டு அமைப் பால் அகதி விண்ணப்பக் கோரிக்கை நிராகரிப்புச் செய்யப்பட்ட சோமா லிய நாட்டைச் சேர்ந்த முஸ்தஃபா சொல்கிறார், "முன்பு ஜெனிவா சட்ட வரையறையின் கீழ் எப்படி, என்ன காரணங்களின் அடிப்படை யில் ஒருவருக்கு அகதி அந்தஸ்த்து வழங்கலாம் என்றுதான் OFPRA-வில் பார்க்கப்பட்டது. இப்போதோ, ஜெனிவா சட்டவரையறைவின் கீழ் என்ன காரணங்களை வைத்து ஒரு வருக்கு அகதி அந்தஸ்த்து வழங்கா மல் நிராகரிப்பு செய்யலாம் என்று தான் பார்க்கப்படுகிறது" என்று

கடந்த வருடம் வதிவிட அனும தியற்றவர்கள் பாரிஸில் நடத்திய உண்ணா விரதம் மற்றும், ஊர்வலங் களைப் பார்த்து ஆத்திரப்பட்ட அதி தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியின் ஆதரவாளர் ஒருவர் 'பிரான்ஸ் என்ன குப்பைத் தொட்டியா? நீங்கள் எல்லாம் வந்து இங்கே குப்பை போல் குவிவதற்கு? என்று ஆத்திரத்தோடு கத்தியது. பிரெஞ்சுப் பத்திரிகைகளில் பைத்தி யக்காரன் ஒருவனின் கூச்சல் என்று ஒதுக்கி விடப்பட்ட ஒரு செய்தி.

ஆனால் யதார்த்தத்தில் பெரும் பான்மையான பிரெஞ்சு மக்களுக்கு இந்த வெளிநாட்டு அகதிகள் வேண் டாத விருந்தாளிகளாகவே இருக் கின்றனர். பிரான்சில் இன்று சோச லிஸ்டுகள் ஆட்சியில் இருந்தால் கூட அவர்களும், இந்த அகதிகள் அல் லது வெளிநாட்டுக்காரர்கள் விடை யத்தில் தங்களுடைய (வலதுசாரிகள்) நிலைப்பாட்டையே எடுத்திருப்பார் கள். ஏனென்றால் பிரான்சின் இன் றைய பொருளாதார நெருக்கடியை யும் வேலையில்லாத்திண்டாட்டத் தையும் கட்டுப்படுத்துவதற்கு யாருக் கும் இதைததவிர வேறுவழியில்லை. என்கிறார்கள். இன்றைய வலது சாரி ஆளும் கட்சியின் ஆதரவாளர் கள்.

முன்பு சோசலிஸ்டுகளின் ஆட் சியில், பிரான்சில் அகதி அந்தஸ்த் துப் பெற்றவர்கள், தங்களது குடும்ப உறுப்பினர்களை அகதிகளுக்கான ஜெனிவா சட்டத்தின் குடும்ப உறுப் பினர்கள் ஒருங்கிணைவுச் சரத்தின் அடிப்படையில் சட்டபூர்வமாக இங்க அழைத்தபோது அவர்களுக்கு இயல்பாகவே எந்தவித கெடுபிடிக ளுமில்லாமல் அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது அது சிக்கலுக் குரிய ஒரு விடையமாக உள்ளது.

**நக்கீரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்க அகதி அந்தஸ்த்துப் பெற்ற ஒருவர் தனது தாய்நாட்டிலுள்ள பெண்ணை வேறொரு நாட்டுக்கு அழைத்து திருமணம் செய்து விட்டு பின்னர் சட்டபூர்வமான நடவடிக்கைகளின் படி பிரெஞ்சு விசா பெற அந்தப் பெண்ணை இங்கு அழைக்கும் போது அந்தப் பெண்ணுக்கு குடியேற்ற வதிவிட உரிமை (Imigrand) அந்தஸ்த்து மட்டுமே அளிக்கப்படுகிறது.

அந்தப் பெண், இங்கு வந்து பொலிசாரிடம் அகதி அந்தஸ்த்து கோரும்போது, அவர் அவரது தாய் நாட்டிலுள்ள பிரெஞ்சுத் தூதரகத்தில் விசா பெற்று சட்டபூர்வமாக வந்தவர் என்ற ஒரு காரணத்தை சொல்லியே அவருக்கு அகதி அந்தஸ்த்துக் கோர உரிமை இல்லை என்று மறுப்புச் சொல்லப்படுகிறது.

இந்த விடயத்தில் அந்தப் பெண்ணினுடைய சொந்த அரசியல் காரணங்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அந்தப் பெண் அவரது தாய் நாட்டிலுள்ள பிரெஞ்சுத் தூதரகத்தில் 'விசா' பெற்றார் என்ற ஒரு காரணம் மட்டும் அந்தப் பெண்ணுக்கு அவரது தாய் நாட்டில் வாழ்வதற்கு பாதுகாப்பான சூழ்நிலை நிரந்தரமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்திவிடாது! என்பது கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

கணவன் அகதி அந்தஸ்த்துப் பெற்றவனாகவும், மனைவி குடியேற்ற அந்தஸ்த்துப் பெற்றவளாகவும் இருக்கும் போது சட்ட ரீதியாகவே குடும்பம் என்ற அமைப்புக்குள் இருவரும் சமத்துவமற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அகதி அந்தஸ்த்துப் பெற்ற கணவனுக்கும் சில உரிமைகள் மனைவிக்கு இல்லாமல் போகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வாறு வேறுபட்ட அரசியல் அடையாளங்களை வழங்குவதும், அவர்கள் எதனைக் கூறமுடியும்? (அகதி அந்தஸ்தா, குடியேற்ற அந்தஸ்தா) என்பதை தீர்மானிக்கும் உரிமை பொலீசாருக்கு கையளித்திருப்பதும் பிரான்சிலிருந்து விடுதலை சமத்துவம் சகோதரத்துவம் என்ற புகழ் பெற்ற அடிப்படை மனித உரிமைகள் பிரகடனத்துக்கு ஏற்புடையதல்ல என்ற அபிப்பிராயமும் எழுப்பப்படாமல் இல்லை.

ஆனாலும் வளர்ந்துவரும் மிகப் பெரிய வேலையில்லாத் திண்டாட்டமும் பொருளாதார நெருக்கடியும் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை, நகர்புறக் குற்றச் செயல்கள் ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் நோயின் பெருக்கம், பெளிநாட்டவர்களுக்கு எதிரான அதி தீவிரக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியின் வளர்ச்சி என்பன இத்தகைய அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் அமுக்கிவிட்டன.



ஆடு, மாடு, மான், கோழி, இறைச்சி வகைகள், உயிர்க் கோழிஸ
ஆட்டிறைச்சிப் பங்கீடுகள் மற்றும் சுவைமிகு மிளகாய்த்தூள்,
கறிப்பவுடர் அனைத்தும் மலிவு விற்பனையில் உங்கள் நலன்
கருதி மீண்டும் மகத்தான சேவையில்

யாழினி சென்ரர்

2, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 42 09 00 76

திருமண வைபவங்கள், கொண்டாட்டங்களுக்கு சாப்பாடு ஓடர்கள்
செய்வதற்கும்
மணவறை, வீடியோ, மண்டப வசதிகள் மற்றும் அலங்கரிப்புக்கள்
செய்துகொள்வதற்கும்

ஷாலினி உணவகம்



23, Rue Cailm 75010 Paris. - Tel: 01 40 34 20 72




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வீடியோ கசட்டுக்கள், ரெடிமேட் ஆடைகள்
மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

**பம்பாய் பஷன்**

**Bombay Fashion**

187, Rue Fbg. St. Denis, 75010 Paris. ( M°: Gare du Nord)
Tel: 01 42 09 56 64 / Fax: 01 42 09 76 14

நவநாகரிக ஆடைத் தெரிவுகளுக்கு

**சக்தி எம்போறியம்**

***Sakthi Emporium***

*193, Rue Fbg. St. Denis, 75010 Paris. ( M°: Gare du Nord)*
*Tel: 01 42 09 78 24 Fax: 01 42 09 76 14*





**வானலைகளில்!**

**பெப்ரவரி 18 செவ்வாய் மாலை 7 மணி முதல்**

FM 105.9 Mhz அலைவரிசையில்



**தமிழ் முரசம்**

வானொலி

வாராந்தம்
செவ்வாய் மாலை 7 முதல் 8 மணி வரை
ஞாயிறு பகல் 12 முதல் 13 மணி வரை

உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் அறிவிப்புகள், முக்கிய அறிவித்தல்கள், விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

*வானொலிச் சேவையில் உள்ளடக்கப்படக்கூடிய நிகழ்ச்சிகள் குறித்த கருத்துக்களை எமக்கு அறியத்தரவும்.*

**தமிழ் முரசம்**

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு: P.Box 1699 Vika, 0110 Oslo, தொலைபேசி : 22 35 09 80




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## புலம்பெயர் வழி மரணங்கள்

# புதிய அழிவுப் பாதையை நோக்கி ஈழத்தமிழர்கள்.....

அபிநயப்பிரியன்

மரணம் ஈழத்தமிழர்களைத் துரத்தியவண்ணமேயுள்ளது. வாழ்தலைத்தேடி அவர்கள் எங்கு ஓடினாலும் மரணம் அவர்களை விடுவதாயில்லை. இன்று ஈழத்தமிழர்களை எதிர்நோக்கியுள்ள புதிதான, அபாயகரமான, துர்ப்பாக்கியமான இன அழிவாக புலம்பெயர் வழி மரணங்கள் அமைந்துவிட்டன.

கடந்த வருட இறுதியில் நத்தார் தினத்தன்று அதிகாலையில் கிரேக்கக் கடற்பகுதியில் நடைபெற்ற படகு விபத்துச் செய்தி மெல்ல மெல்ல வெளியரங்கிற்கு வந்தபோது தமிழர்களின் நெஞ்சமெல்லாம் ஒருகணம் நிலைகுலைந்துதான் போனது. குளிர் உறைந்துபோயிருந்த கடலிலே மூழ்கி சுமார் நூற்றுக்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் அநியாயச் சாவடைந்த துயர நிகழ்விற்கு அந்த விபத்தில் தப்பிய சக ஈழத்தமிழர்கள் கண்கண்ட சாட்சியங்களான போதும் அந்த நிகழ்வினை இன்றும் மறுத்துக் கொண்டிருக்கும் செய்தித்தொடர்பு ஊடகங்களும் இருக்கவே செய்கின்றன. எது எப்படியோ போராட்டத் திற்கிடையேயான வாழ்தலுக்கு அஞ்சி புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களை கிரேக்கக்கடல் சாவு கொண்டமை வரலாற்று வடுவாகவே அமைந்துவிட்டது எனலாம். ஈழத் தமிழர்கள் மேற்குலகிற்கு புலம்பெயரத் தொடங்கியபின்னர் இது வரை 200ற்கு மேற்பட்டவர்கள் மேற்குலக புலம்பெயர் வழியில் மரணம் அடைந்திருப்பதாக அறிய முடிகிறது. இந்த மரண அதிகரிப்பு வீதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஈழப்போர் தமிழர்களை மூன்று நிலையிலே புலம் பெயர வைத்தது. முதலாவதாக உள்நாட்டில் அகதிகளாக புலம்பெயர்ந்தோர். இரண்டாவதாக அயல்நாடாகிய இந்தியாவிற்கு அகதிகளாக புலம்பெயர்ந்தோர். மூன்றாவதாக மேற்குலகிற்கு புலம் பெயர்ந்தோர். இவர்களை அகதிகள் என்று சொல்லமுடியாது விட்டாலும் இவர்களுடைய மேற்குலகப் புலம்பெயர்வுக்கு ஈழப் போரும் ஒருவகையில் காரணம் எனலாம்.

புலம்பெயர் வழி மரணங்கள் பல நூற்றுக்கணக்கில் பாக்குநீரிணைக் கடலிலும் இடம்பெற்றிருப்பதை நாம் அறிவோம். அகதிகளின் படகுகள் கடலில் மூழ்கியும் சிறீலங்காப் படையின் அழிப்புக்கு இலக்காகியும் இவ்வகை மரணங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கடந்த 18.02.97 அன்றும் இந்தியா செல்லும் வழியில் 130 ஈழ அகதிகள் யுத்தகால கடலில் மூழ்கி மரணித்த துயர நிகழ்வும் இன்னும் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை. உள்நாட்டு மரணங்கள் அயல்நாடு செல்லும்வழி மரணங்கள் இவைகளில் இருந்து வேறுபட்டு புதிய பரிமாணத்தை எட்டியிருக்கும் மூன்றாவது நிலை துர்ப்பாக்கிய, துயரகரமான, அவலமரணங்களாக மேற்குலகப் புலம்பெயர்வழி மரணங்கள் தற்போது அமைந்துவிட்டதனை எச்சரிக்கையுடனும், அவதானத்துடனும் நோக்கவேண்டியுள்ளது.

தமிழின அழிவில் புதிதான விஸ்வரூபம் எடுத்திருக்கும் இந்த அவல மரணங்கள் ஏன்? மனிதாபிமானமுள்ள ஒவ்வொரு தமிழனின் நெஞ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சங்களையும் குடைந்து கொண்டி ருக்கும் கேள்வி இதுதான்.

அண்மைக்காலமாக மேற்குலக புலம்பெயர்வழி மரணங்கள் மிக அதிகரித்துச் செல்வதனை எம்மால் நோக்க முடிகின்றது. மேற்குகரைக் கனவுகளோடு தாயகத்தை விட்டுப் புலம் பெயர்ந்த எங்கள் ஜீவன்க ளின் அவசச்சாவுகள் ஆழ் துயரங் கொண்டவை. இதனைவிட தங்களு டைய மேற்குலக புறப்பாட்டில் டைகள் ஏற்பட்டும், பிரயாண முக வர்களின் கைகழுவல்களாலும் ஆபி ரிக்கா, கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா, தென்கிழக்கு ஆசியா போன்ற பல நாடுகளிலும் பல நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் நாளும் பொழுதும் உயிருடன் செத்துக் கொண்டிருக்கி றார்கள்.

இது மட்டுமன்றி எத்தனையோ புலம் பெயர்வழி மரணங்கள் வெளி உலகத்திற்குத் தெரியாமல் தங்களு டைய பெருமூச்சுக்களால் காற்றுக்கு மட்டும் செய்தியைச் சொல்லிவிட்டு முற்றுப் பெற்றுவிட்டன. இன்னொரு அபாயகரமான பக்கவிளைவாக புலம்பெயர் வழியில் கலாச்சாரச் சீரழிவுக்கும் எம்மவர்கள் முகம் கொடுக்க நிற்பந்திக்கப்பட்டார்கள். இந்த வகையில் ஏராளமான பெண் கள் மேற்குலகப் புலம்பெயர் வழியில் சீரழிக்கப்பட்டார்கள். வன்மனம் படைத்த பிரயாணமுகவர்களின் பாலியல் வல்லுறவுக்கு நிற்பந்திக்கப் பட்டு நிர்க்கதியான ஏராளமான இளம் தமிழ் பெண்களின் கதைகள் மௌன யுத்தம் நடத்திக் கொண்டி ருப்பதை நாம் அறிவோம்.

"போலந்தில் ஆற்றைக் கடக்கை யில் பத்திற்குமேற்பட்ட ஈழத் தமி ழர்கள் பலி", "சுவீடன் கடலில் தத்த ளித்த 29 ஈழத் தமிழர்கள் கண் காணிப்பு அதிகாரிகளால் மீட்பு", "செக்-ஜேர்மனி வழியிலே தமிழ்ப் பெண் பனியில் புதைந்து மரணம்", "கிழக்கு ஐரோப்பிய நாடொன்றில் இருந்து மேற்குக்குக் கடத்தப்பட்ட ல ஈழத்தமிழர்கள் எல்லைப் பொலீ ஸாரால் கைது" "போலந்தில் ஆற் றைக் கடக்க முயன்ற இரண்டு தமிழ் பெண்கள் பலி" இப்படியாக ஈழத் தமிழர்களின் மேற்குலகப் புலம்பெயர் வழி துயர நிகழ்வுகளை பத்திரிகைக ளும் செய்தி நிறுவனங்களும் வெளி யிட்ட வண்ணமே உள்ளன. இறுதி யாக கிடைத்த செய்திகளின் படி கடந்த ...... ஜேர்மனிக்கு புக முயன்ற 52 இலங்கையர்கள் போலந்துப் பொலீசாரால் கைது செய்யப்பட்ட தாக அறிய முடிகிறது.

அண்மைக்காலங்களில் நடை பெற்ற அதி உச்ச புலம் பெயர் வழி மரணச் செய்தியாக கிரேக்கக்கடல் விபத்தையும் கடந்த 15.07.95 இல் கங் கேரியில் நடைபெற்ற மரணங்களை யும் கடந்த 24.11.96 திகதி கொமரூஸ் தீவு விமான விபத்தில் நடைபெற்ற மரணங்களையும் நாம் குறிப்பாக நோக்கமுடியும். ஜேர்மனிக்குச் செல் லும் வழியிலே கங்கேரியில் 18 ஈழத் தமிழர்கள் உயிர்நீத்த சம்பவம் மிக வும் கொடிதானது. பிரயாண முகவர் களால் வாடகைக்கு அமர்த்தப்



பட்ட தொடர் கனரக வண்டிகளில் மிருகங்களைப்போல அடைத்துச் செல்லப்பட்ட ஈழத் தமிழர்கள் கொடும் வெய்யில் தாக்கத்தினா லும் மூச்சுத் திணறியே அணுஅணு வாய் வருந்தி அவச் சாவை எய்தி னார்கள். எங்கோ ஒரு ஐரோப்பிய வீதியிலே ஈழத்தமிழர்களின் நாற்றம் எடுத்த 18 பிணங்களுடன் அநாதர வாக விட்டுச் செல்லப்பட்ட கனரக வண்டியை கங்கேரியில் பொலீசார் மீட்டார்கள் என்ற செய்தி அன்று எங்கள் குருதியை உறையவைத்தன.

இதைப்போலவே கடந்த வருடம் நவம்பர் 24-ம் திகதி எத்தியோப்பிய விமானம் ஒன்று தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட வேளையில் விபத்துக் குள்ளாகி அதிலிருந்த அனைவரும் உயிர் நீத்தார்கள் அந்த விமானத் தில் மேற்குலகை நோக்கிச் சென்ற 9 ஈழத்தமிழர்களும் பரிதாப சாவினை தழுவிக்கொண்டார்கள்.

ஈழயுத்தம் காரணமாக பேரழி வினை சந்தித்துக்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் புதிதாக முகம் கொடுக்கும் மேற்குலகப் புலம்பெயர் வழி மரணங்களை நாம் சாதாரண மாக அசட்டை செய்துவிட முடி யாது. போர் நெருக்குதல் வாழ்வுக்கு அஞ்சி எங்காவதொரு நாட்டுக்கு தப்பி ஓடிவிட நினைக்கும் ஒருவரு டைய மனோ நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஏராள மான பணத்தை அவர்களிடமிருந்து கறந்து குறுக்கு வழிகளில் மேற்கு லகை நோக்கி அவர்களை அனுப்பி வைக்கும் பிரயாணமுகவர்கள் எப் போதுமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படவேண்டியவர்களே ஆனா லும் புலம்பெயர் வழி மரணங்க ளுக்கு இது முடிவு கட்டிவிடப் போவதில்லை.

மேற்குலகை நோக்கிய எம்மவர் களின் பாச்சலுக்கான முடிவால் தாயகத்திலான சுதந்திரமான வாழ் தலிலேயே ஏற்படுத்தப்பட முடியும். அதுவே புலம்பெயர்ந்து வாழ்கின்ற அனைத்து ஈழத்தமிழ் மக்களின் புதிய வாழ்தலுக்கான ஆரம்பமுமாகும்.

★★★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்குலகிற்கு சவால் விடும் மக்கள் சீனக் குடியரசு

**- குமரன் -**

அன்று நெப்போலியன் கூறிய வாசகங்கள் இன்று உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. சர்வ தேச ரீதியில் அரசியல், பொருளா தாரம். இராணுவம் என்கிற ரீதியில் சீனாவின் பாதிப்பு பெருமளவில் உள்ளதை யாரும் மறுக்க முடியாது. உலகின் பெரும் வல்லரசு எனக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா கூட சீனாவை எதிர்க்க முடியாத நிலை யிலேயே உள்ளது. ஒரு வகையில் கூறினால் சீனாவின் பொருளாதா ரப் பிடிக்குள் தான் அமெரிக்காவே தங்கியுள்ளது எனலாம். கம்யூனிசக் கொள்கையை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் முதலாளித்துவம் செயற்பட்ட போது கம்யூனிசக் கொள்கையின் ஒரு பெரும் சக்தி யான சோவியத் யூனியன் சிதறடிக் கப்பட்டது. சோவியத் வீழ்ச்சியின் பின் அக் கொள்கையை பின் பற் றிய பல நாடுகள் உடைந்தோ அல் லது கொள்கை மாற்றத்திற்கோ உள் ளாகின. ஆனால் சீனா மட்டுமே இந்த முதலாளித்துவத்தின் பிடியில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது மட்டுமல்ல அந்த நாடு களுக்கே சவாலாகவும் இருந்தது.

இன்றைய சீனாவின் பொருளா தார, இராணுவ வளர்ச்சியானது தென்கிழக்காசியாவில் மட்டுமல்ல ஐரோப்பா, அமெரிக்கா வரை பரந் துள்ளது. நாம் முதலில் அதன் பொரு ளாதார ஆதிக்கத்தை எடுத்துக் கொண்டால் அதற்கு உறுதுணை யாக இருப்பது சீனாவின் சனத் தொகையும், அதன் அரசியல் கொள் கையுமே. ஆரம்பத்தில் சீனாவில் இறுகிய அதாவது மூடப்பட்ட பொரு ளாதாரக் கொள்கையே அமுலில் இருந்தது. அதன்படி பெருந் தொழில் கள், கைத்தொழில்கள் எல்லாமே அரசினால் மட்டுமே கட்டுப்படுத் தப்பட்டது. பின் வந்த காலங்களில் அதாவது 80-களின் இறுதியில் அதன் கொள்கையில் சில மாறுதல் கள் ஏற்படத் தொடங்கின. நாட் டின் சில பிராந்தியங்களை தனி யார் துறையின் வர்த்தகத்திற்காக ஒதுக்கி திறந்த பொருளாதாரக் கொள்கையையும் அமுலாக்கத் தொடங்கியது. சீனாவின் திறந்த பொருளாதாரக் கொள்கையானது ஏராளமான பன் நாட்டு வர்த்தக நிறுவனங்கள் சீனாவில் முதலிட அனு மதித்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்ப்படுத்திய அரசு அதற்கான பிராந்தியமாக "Guangdona" மாகாணத்தைத் தெரிவு



புதிய சீனாவின் சிற்பிகள் - மாவோ, சூஎன்லாய், போ கூ

செய்தது. இப்பிராந்தியமானது துறை முக நகரங்களைக் கொண்டிருப்பது மட்டுமல்லாது ஹொங்கொங், மக் காவோ போன்றவைகளுக்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது.

இப் பிராந்தியத்தில் உள்ள "கன் டொன்", ஹவப்பூ, செங்கியான் போன்ற நகரங்களை உள்ளடக்கிய வர்த்தகப் பிராந்தியத்தில் சீனாவிற் குள் மேற்கு நாட்டு வர்த்தக தாப னங்கள் போட்டி போட்டுக் கொண்டு தங்களது தொழில் நுட் பங்களை கொட்டியதானது. சீனா விற்கு பலவிதங்களில் லாபத்தையே உண்டாக்கியது. ஒன்று நீண்டகால

> **"என்று சீனா எழுகிறதோ அன்று உலகம் ஆட்டம் காணும்"**
>
> *-நெப்போலியன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அமெரிக்கா வைப் பொறுத்தவரை அதன் முழுச் சனத்தொகையிலும் 0.8 விகிதமே சீனர்கள் வாழ்ந்தாலும் அமெரிக்க பொருளாதாரத்தின் பல நிலைகளில் அவர்களது பிடியே இறுகியிருக்கிறது**

மாக ஒரே விதமான தொழில் நுட்பங்களையே அறிந்திருந்த சீன தொழிலாளர்களும் பொறியியலாளர்களும் புதியவிதமான கண்டுபிடிப்புக்களில் இறங்க வசதி ஏற்படுத்திக்கொடுத்தது இரண்டாவதாக கமத் தொழிலையே நம்பியிருந்த அண்டை மாநிலத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் மாற்றுத் தொழில் ஒன்றையும் தேடிக்கொள்ள வாய்ப்பாகவும் அமைந்தது. இதே வேளை முன்னைய தனது நிலப் பகுதிகளையும் மீண்டும் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் சீனா இறங்கியது. இதனடிப்படையில் 1984-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் திகதி டெங்சியாகோ பிங்கும் பிரித்தானிய பிரதமர் மார்கிரட் தச்சரும் ஹொங்கொங்கை மீள அளிப்பதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்



திபன்மன் சதுக்கத்தில் மாணவர்கள்

சாத்திட்டனர். இவ் ஒப்பந்தத்தின் படி இன்னும் ஆறு மாதங்களில் ஹொங்கொங்" சீனாவின் ஆட்சிக்குள் வர இருக்கிறது. இதே போல் தற்போது போத்துக்கலின் ஆட்சியில் இருக்கும் "மக்காவோ" வையும் மீட்டுக்கொள்ள 1987-ம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன்படி 1999-ம் ஆண்டு "மக்காவோ" சீனாவுடன் இணைக்கப்படும். சீனாவின் வர்த்தக வளர்ச்சிகள் உள் நாட்டில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சிங்கப்பூர், மலேசியா, மலாக்காப்பகுதி மட்டுமல்ல தென் ஆசியாவின் பல நாடுகளிலும் அது தனது தொழில் நிறுவனங்களை பெருக்கியுள்ளது. இதற்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன் சீனாவிலிருந்து சென்று குடியேறிய சீனர்களே பெரும் பொறுப்பை ஏற்கிறார்கள்.

சீனாவில் இருந்து உலகின் பல பாகங்களிலும் பரவியுள்ள மக்களின் தொகை 4.4. மில்லியனுக்கும் அதிகமாகும். இவர்கள் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், வியட்னாம், பிலிப்பைன் போன்ற நாடுகள் தவிர்ந்த மற்றய நாடுகளில் வாழ்கிறவர்களே இந்த சீனச் சமூகமானது அந்தந்த நாடுகளில் மிகவும் பலம் பொருந்தியதொரு சமூகமாகவே நிலைத்திருக்கின்றது. அமெரிக்காவைப் பொறுத்தவரை அதன் முழுச் சனத்தொகையிலும் 0.8 விகிதமே சீனர்கள் வாழ்ந்தாலும் அமெரிக்க பொருளாதாரத்தின் பல நிலைகளில் அவர்களது பிடியே இறுகியிருக்கிறது.

இன்றைய நிலையில் சீனா நினைத்தால் அமெரிக்காவை நிச்சயம் ஆட்டம் காணவைக்க முடியும். ஒரு வகையில் அது நடந்து கொண்டு தானிருக்கிறது. குறிப்பாக இன்று ஒரு புதிய தயாரிப்பு அமெரிக்காவில் பெருந் தொகை செலவில் வெளியிடப்பட்டால் சில நாட்கள் இடைவெளியில் அதே பொருள் மிகவும் குறைந்த செலவில் ஒரு சீனத் தயாரிப்பாக வெளியிடப்படுகிறது. இவ் வகையில் பாதிக்கப்பட்டுள்ளது கணனிக்கான உப பொருட்களும், தொடர்புச் சாதனங்களுமே (Computer Programmes) அதை விட சர்வதேச சந்தையில் மிகவும் மலிவான பொருட்களை வினியோகிப்பவர்களும் சீனர்களே. இதன் காரணமாக பல நாடுகள் தமது சந்தைப் பொருட்களில் வீழ்ச்சி எற்படுகிறது என புலம்புவதும் உண்டு. சீனாவின் பொருளாதார வளர்ச்சியை பற்றி கூறுவதானால் கூறிக்கொண்டே போகலாம். உலகை வழிநடத்தப் போகும் புதிய சக்தியாக காணப்படும் சீனாவின் திட்டமிட்ட பொருளாதாரம் தொடர்ந்து புதிய சாதனைகளை எற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நாம் இராணுவ ரீதியாக சீனாவின் வல்லமையும் அதன் ஆளுமையும் பற்றிக்கூற முற்படும் போது ஒன்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். உலகின் பெரும் வல்லரசுகளாக விளங்கும் சில நாடுகளைப் போல் மற்றைய நாடுகளில் குழப்பத்தையும் பின் பாதுகாவலன் என்ற பெயரில் உள் நுளைதலையும் சீனர் மேற்கொள்ளவில்லை. ஆனால் தனது இறைமையை காப்பாற்றிக்கொள்ள அது தனது பிராந்தியத்தில் பாதுகாப்பை அதிகரித்து ஸ்திரநிலையை தக்க வைத்துக்கொண்டுள்ளது. இன்று உலகின் மிகப் பெரிய இராணுவமாக சீன மக்கள் இராணுவமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகழ்கிறது சுமார் 3 மில்லியன் போர்வீரர்களைக் கொண்ட படையணிகளைக் கொண்டதாக சீன இராணுவம் உள்ள அதே வேளை அதன் தொழிற்சாலைகளில் 25 மில்லியன் பேர்கள் வேலை செய்கிறார்கள். சீனா முழுவதும் 50,000 தொழிற்சாலைகள், வேலைத்தளங்கள் இராணுவத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. அத்துடன் சீன மக்கள் இராணுவத்தால் உள்ளூர் விமான சேவைகள், மருத்துவ நிலையங்கள். உணவு விடுதிகள் போன்றவைகளும் நிர்வகிக்கப்படுவதுடன் மோட்டார் சைக்கிள் தயாரிப்பிலும் கனரக போக்குவரத்து வாகனத் தயாரிப்பிலும் இராணுவம் ஈடுபடுகிறது.

உலகின் ஆயுத தயாரிப்பில் மூன்றாவது இடத்தை வகிக்கும் சீனா ஏற்றுமதியாளர் வரிசையில் ஆறாவது. ஸ்தானத்தில் இருக்கின்றது. (முதலாவதாக அமெரிக்காவும், அடுத்ததாகப் பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி சீனா) சீனாவின் ஆயுத தளபாடங்கள் அதிகளவில் ஆபிரிக்க நாடுகளுக்கும் ஆசியாவுக்குமே ஏற்றுமதியாகின்றன. வளைகுடாவில் ஈராக், சிரியா, ஈரான் போன்ற நாடுகள் பிரதான கொள்வனவு நாடுகளாக இருக்கின்றன. சீனாவில் தயாரிக்கப்படும் தளபாடங்களும், வாகனங்களும் ஆசியாவில் பாகிஸ்தான், சிறீலங்கா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு மிக மலிவான விலைக்கு விற்கப்படுவதால் ஆசியாவில் பிரதான வாடிக்கையாளர்களாக அவர்களே இருக்கிறார்கள்.

சீனாவானது உலகின் இரட்டைச் சக்திகளில் ஒன்றாக இருக்கும் அதே வேளை தொடர்ந்து கம்யூனிசத்தை காப்பாற்றி வரும் நாடாகவும் காணப்படுகிறது. ஒரு ப்க்கம் அமெரிக்கா உலகின் பாதுகாப்பை தன் கைகளில் எடுத்ததை அவதானித்த சீனா தனது முக்கிய பிரதிநிதிகளை மொஸ்கோ, வாஷிங்டன், டோக்யோ, புதுடெல்லி போன்றவற்றிற்கு அனுப்பியதானது உலக அரசியலில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியது மட்டுமல்ல தன்னை உதாசீனப்படுத்தி எடுக்கப்படும் எந்த நடவடிக்கையையும் தடுக்கக்கூடிய வல்லமையும் தனக்கு உண்டு என்பதையும் மறைமுகமாகக் கூறியுள்ளது.

★

# ஆசை மலர்கள்

நிலமின்றி நீரின்றி
உரம் எதுவுமின்றி
ஆசைப்பயிர்கள்
ஆயிரம் வளர்த்தது,
அவற்றில் அடிக்கடி
வண்ண மலர்கள்
எண்ணிலாதன
பூக்க வைத்தது
என் மனம்.

நாள் தோறும்
பூத்தன ஆசை மலர்கள்
எத்தனை வடிவம்!
எத்தனை வடிவம்!
எத்தனை நிறங்கள்!
எத்தனை எத்தனை மணங்கள்!
மனசின் எக்களிப்புக்கு
எல்லையும் உண்டுகொல்?

வேக ரதத்தில்
பறந்தேன் ஒருநாள்.
வியன் வானிலே
மிதந்தேன் சிலநாள்.
விண்ணில் ஏறி
மிக உயர்ந்தேன்.
எண்ணிய கணமே
துரத்து நகர்களில்
உலாவினேன்; உவகைதான்!
அழகுக் காடுகளில்
மலைகளில் மடுக்களில்
பனிப்பாலை, மணல்வெளி,
குகைகள் ஊர்கள்
இப்படி எங்கும் எங்கும்
சஞ்சாரம் செய்தேன்.
சிறகின்றி, சிங்காரக்
கம்பளம் தானுமின்றி!
அற்புதம் பலப்பல
அபார சாதனைகள் மிகப்பல
எளிதில் முடிப்பதும்,
எப்பவும் அமுதச்சுவை
பானங்கள் குடிப்பதும்,
பசி அறியா விதத்தில்
புசித்திட விருந்துகள்
தந்திடும் சுரபி பெற்றதும்,
மின்னொளிப் புகழ்
அடுக்கடுக்காய் சேர்வதும்,
கோடி கோடியாய்
பணம் வந்து குவிவதும்,
எண்ணிய எண்ணியவாறே
கண்சிமிட்டும் நேரத்தில்
செய்து தீர்ப்பதும்
ஓ! எத்தனை விந்தைகள்!

இமயத்தின் உச்சியில்
ஏறி நின்றதும்,
நயகரா அருவிமேல்
படகில் மிதந்ததும்,
நீள் நதிகள் மிசை
நீந்திக் களித்ததும்,
கடல் அலைப் புரவிமீது
கடிதினில் ஊர்ந்து
கண்டங்கள் பல கண்டதும்,
வானவில் பாலம் நின்று
உலகைப் பார்த்ததும்.
நிலாத் தொட்டிலில் கிடந்து
கவிதை படித்ததும்.....

ஓ! எத்தனை ஆசைகள்!
மனசின் மலர்கள்!
இனிக்கும் நினைப்புகள்!
குளுகுளு எண்ண அலைகள்!
எனினும்!
கோடை வறட்சியாய்
சிரிக்குது வாழ்க்கை!
அனலாய் தகிக்குது
அன்றாடப் பிழைப்பு!

**வல்லிக்கண்ணன்**
**தமிழ்நாடு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதுச்சேரி வரலாற்றில் துய்ப்ளேக்ஸ்

**- சண்முகசுந்தரம் -**

துய்ப்ளேக்ஸ் என்ற பெயர் புதுச்சேரி வரலாற்றில் மறக்க முடியாததொன்று. துய்ப்ளேக்ஸ் புதுச்சேரியை ஆண்டது 12 ஆண்டுகள் தான். (1742-1754) அந்தப் பன்னிரெண்டு ஆண்டுகளில் புதுச்சேரியை ஒரு பிரசித்திபெற்ற நகரமாக்கி விட்டார் துய்ப்ளேக்ஸ். அவரது ஆட்சியில் புதுச்சேரி வளங்கொழிக்கும் நகரமாகிவிட்டது. சண்டைக்களமாக இருந்த புதுச்சேரியை அரசியல் தலைவர்கள் சந்திக்கும் இடமாக மாற்றிய பெருமை துய்ப்ளேக்சுக்கே உரியது. துய்ப்ளேக்சின் வெற்றிகளை இந்திய அரசர்களும் பாராட்டினர். அவர் புகழ் டில்லியில் இருந்த முகலாயர் பேரரசுக்கு மட்டும் எட்டவில்லை. அதற்கு மேல் பிரான்சு அரசர் வரை பரவியது.

துய்ப்ளேக்ஸ் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறு வயதிலேயே தன் தாயை இழந்து விட்டதால் தன் தந்தையின் கண்டிப்பில் வளர்ந்தவர். ஒரு நாள் தந்தை மீது வெறுப்புக் கொண்டு, தன் 19-வது வயதில் இந்தியாவுக்குக் கப்பல் ஏறியவர். 1716-இல் புதுச்சேரியில் இறங்கிச் சுற்றிப் பார்த்தவர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பிரான்சுக்குத் திரும்பினார். திரும்பி வந்தது முதல் ஊதாரித்தனமாகச் செலவு செய்து கடனாளியாகி விட்டார். இந்த உதவாக்கரை மகனை என்ன செய்வது என்று தெரியாமல் அவர் தந்தை தவித்தார். முடிவில் அவரை மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். இம்முறை அவருக்குப் பிரெஞ்சு-இந்திய வியாபாரக் கம்பனியில் ஒரு சாதாரண வேலையை வாங்கிக் கொடுத்தார். இந்தியாவுக்கு திரும்பி வந்தபோது துய்ப்ளேக்சிடம் பணம் ஏதுமில்லை. அவர் தன்னுடன் கொண்டு வந்தது மூன்று டஜன் சட்டைகளும், ஒரு இசைக் கருவியும்தான். இவர் இசையில் மிகவும் நாட்டமுடையவர்.

அங்கு கவர்னராக இருந்த துய்லிவியே (Dulivier) என்பவரிடம் 400 பகோடா நாணயங்களைக் கடனாக வாங்கி வந்தார். புதுச்சேரிக்கு திரும்பி வரும்போது, கப்பலில் நைனியப்பர் என்பவரின் மகனான குருவப்பாவைச் சந்தித்தார். குருவப்பா மகன் பெத்ரோ கனகராய முதலியார் செப்டம்பர் 1724-இல் இருந்து புதுச்சேரியில் துபாஷாக இருந்தவர். துய்மா என்ற கவர்னரின் நெருங்கிய நண்பராக இருந்து, அரசியல் விவகாரங்களில் அவருக்கு பல ஆலோசனைகளைக் கொடுத்தவர். கப்பல் பயணத்தில் குருவப்பாவுக்கும், துய்ப்ளேக்சுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. பிற்காலத்தில் குருவப்பாவின் மகன் பெத்ரோ கனகராய முதலியார் துய்ப்ளேக்சின் நெருங்கிய நண்பராகி அவருக்குப் பல வகைகளில் உதவி செய்தவர். அதனால் பெத்ரோ கனகராய முதலியார் சவ அடக்கத்துக்கு கவர்னர் துய்ப்ளேக்ஸ் தானே தீவட்டி பிடித்துக் கொண்டு சுடுகாடு வரை நடந்து வந்தார். அந்த அளவுக்கு இருவரும் நெருங்கிய நண்பர்களாகவே இருந்தவர்கள்.



பிரெஞ்சிந்திய கவர்னர் துய்ப்பிளேக்ஸ் (1742-1754)

புதுச்சேரிக்கு வந்ததும் துய்ப்ளேக்ஸ் மூாக் வேன்சான் என்பவருடன் கூட்டு வியாபாரம் செய்ய எண்ணி 300 பகோடா நாணயங்களை அவரிடம் கொடுத்தார். அப்பணத்தில் வங்காளத்திலிருந்து பட்டுத் துணிகள் வரவழைத்து இருவரும் வியாபாரம் செய்தனர். புதுவைக்கு வந்த துய்ப்ளேக்ஸ், விரைவில் பல அரசியல் வட்டார முக்கிய மனிதர்களின் நன்மதிப்பைப் பெற்றார். அதனால் பிரெஞ்சுக் கம்பனிக்கு அவர் மீது நல்ல மதிப்பு ஏற்பட்டது. அதனால் கம்பனி அவரை பலமுறை கம்பனி வியாபாரமாக பறங்கிப்பேட்டை, சென்னை, சீனா போன்ற இடங்களுக்கு அனுப்பியது. ஒவ்வொரு முறையும் துய்ப்ளேக்சுக்குப் பெருத்த லாபம் கிடைத்தது.

துய்ப்ளேக்ஸ் கம்பனியின் வியாபார விஷயமாக போகும்போதெல்லாம் தன் சொந்த வியாபாரத்தையும் கவனித்து வந்தார். அவர் மீது பொறாமை கொண்ட கவர்னர் லெனுவர் அவரைக் குற்றம்சாட்டி பாரிசு தலைமையகத்துக்குக் கடிதம் எழுதியிருந்தார். துய்ப்ளேக்ஸ் அதற்கு மறுப்புக் கடிதம் எழுதி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார். துய்ப்ளேக்ஸ் உண்மையில் தன் சொந்த வியாபாரத்தை கம்பனியின் வியாபாரத்தைப் பாதிக்காத வகையில் தான் செய்து வந்தார். தன் சொந்த வியாபாரத்தில் அவருக்கு நல்ல இலாபம் கிடைத்ததால் அவருக்குப் புதுச்சேரியில் வீடும், அழகிய தோட்டம் போன்ற வசதிகளும் பெருக ஆரம்பித்தன.

மூன்று ஆண்டுகளுக்குப் பின் கம்பனி அவரை வங்காளத்தில் சந்திரநாகூர் கிளைக்குத் தலைவராக நியமித்தது. துய்ப்ளேக்ஸ் 1731 ஆகஸ்டு 8-இல் சந்திரநாகூருக்குப் புறப்பட்டார். அங்குபோன இரண்டு ஆண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்குப் பின் தன் நண்பரும் கூட்டாளியுமான ழாக் வேன்சான். (Jacques Vincens) குடும்பத்தைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார். ழாக் வேன்சான் அங்கு 1739-இல் இறந்தார். அவர் மனைவி ழான்னை துய்ப்ளேக்ஸ் மணந்து கொண்டார். காரணம் அவள் மிகவும் அழகானவள். அதுமட்டும் அல்ல. இந்தியாவில் பிறந்து வளர்ந்த போர்த்துக்கீசியப் பெண். இந்திய அரசியல் விவகாரங்களை நன்கு அறிந்தவள். இந்திய மொழிகள பல கற்றவள். வங்காளத்தில் துய்ப்ளேக்ஸ் பல சாதனைகளைச் செய்தார். கம்பனி அவர் திறமையைப் பாராட்டி அவரைப் புதுச்சேரியின் கவர்னராக நியமித்தது.

**துய்ப்ளேக்ஸ் இந்தியாவில் வசித்த இந்த 20 ஆண்டுகளில், இந்தியாவைப் பற்றியும், இந்திய அரசியல் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அவருக்கு அரசியல் விவகாரங்களில் ஆனந்தரங்கப்பிள்ளை என்ற தரகர் உறு துணையாக இருந்து வந்தார்.**

துய்ப்ளேக்ஸ் 1742 ஜனவரி 15-இல் மீண்டும் புதுச்சேரிக்குக் கவர்னர் ஜெனரலாகத் திரும்பி வந்தார். அப்போது அவருக்கு மிக ஆடம்பரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. கடலோரம் முழுதும் மக்கள் திரள் அவரைக் கைகொட்டி ஆரவாரம் செய்து வரவேற்றது. பலவிதமான ஆடல், பாடல்களுடனும், இசைக் கருவிகளுடனும் மக்கள் அவரை வரவேற்றனர். அன்று முதல் துய்ப்ளேக்ஸ் எங்கு செல்வதாயிருந்தாலும் அவருடன் குறைந்தது நூறு பேர்கள் செல்வது வழக்கமாகி விட்டது. இந்திய அரசர்கள் போல இவருக்கும் இரண்டு காவலர்கள் அரசர்களுக்குப் பிடிக்கும் வெண்கொற்றக் குடையைப் பிடித்துக்கொண்டு செல்வது வழக்கமாகி விட்டது. அந்த அளவிற்கு அவருக்கு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் அவர் ஒரு நவாபுக்குச் சமமான ஆடம்பர வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

புதுச்சேரி, கர்னாடக நவாபின் ஆட்சிக்குட்பட்ட ஒரு சிறு நகரம். அதனால் அவரைப் பகைத்துக் கொள்ளாமல் துய்ப்ளேக்ஸ் வாழ வேண்டியிருந்தது. காரணம் மதராசிலும், கூடலூரிலும் இருந்த ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்கள் மீது ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தனர். அடுத்து மராட்டியர்களும் துய்ப்ளேக்சைத் தாக்கச் சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். இதனால் நவாவுக்கு துய்ப்ளேக்ஸ் ஏதாவது பரிசு கொடுத்து அவர் உதவியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது. 1724-1740-களில் இருமுறை புதுச்சேரி தாக்கப்பட்டது. இத்தாக்குதல்களால் புதுச்சேரி மக்கள் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டிருந்தனர்.

துய்ப்ளேக்ஸ் இந்தியாவில் வசித்த இந்த 20 ஆண்டுகளில், இந்தியாவைப் பற்றியும், இந்திய அரசியல் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். அவருக்கு அரசியல் விவகாரங்களில் ஆனந்த ரங்கப்பிள்ளை என்ற தரகர் உறு துணையாக இருந்து வந்தார். அவர் தன் 34-ஆவது வயதிலேயே பெருத்த செல்வத்தை கம்பனியின் தரகராக இருந்தே சேர்த்தவர். அவருக்குப் பல வீடுகளும், கிடங்குகளும், கப்பல்களும் சொந்தமாக இருந்தன. அந்தக் கப்பல்களில் சரக்குகளை அரேபியா, சீனா, பிலிப்பைன்சு போன்ற நாடுகளுக்கு அனுப்பி பெருத்த செல்வத்தைச் சம்பாதித்தவர். அதனால் இந்திய அரசியல் வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. இருந்த போதிலும் அவருக்கு துய்ப்ளேக்ஸ் துபாஷ் பட்டம் கொடுக்கவில்லை. அந்தப் பதவியில் துய்ப்ளேக்ஸ் கப்பலில் சந்தித்த குருவப்பாவின் மகனான பெத்ரோ கனகராயன் என்பவருக்கே கொடுக்கப்பட்டது. அதனால் ஆனந்தரங்கப் பிள்ளை பெத்ரோ கனகராயரை எப்படியாவது வீழ்த்த தக்கசமயத்தை எதிர்பார்த்திருந்தார். ஆனந்த ரங்கப் பிள்ளை நாள் தோறும் காலையில் துய்ப்ளேக்சை வந்து சந்தித்துப் போவது வழக்கம். இது துய்ப்ளேக்சின் மனைவியான ழான்னுக்குப் (Jane) பிடிக்கவில்லை. அரசியல் விவகாரங்களில் ஆனந்தரங்கப்பிள்ளை தலையிடுவதை அவள் விரும்பவில்லை. அவரை எப்படியாவது துய்ப்ளேக்சிடமிருந்து பிரிக்கச் சமயத்தை எதிர்பார்த்திருந்தாள்.



துய்ப்ளேக்சின் ஆலோசகரும் மொழிபெயர்ப்பாளருமான ஆனந்தரங்கப்பிள்ளை

ழான் இந்தியாவில் பிறந்து வளர்ந்த ஒரு போர்த்துக்கீசியப் பெண்மணி. அவர் தந்தை போர்த்துகீசிய வியாபாரக் கம்பனியில் ஒரு பெரிய அதிகாரி, அவருக்கு இந்திய அரசியலில் நல்ல மதிப்பிருந்தது. ழான் அரசியல் விவகாரங்களைத் தன் தந்தையிடமிருந்து நன்கு கற்றவர். மேலும் ழான்னுக்கு இந்திய அரசியல் வட்டாரத்திலும் நல்ல மதிப்பிருந்தது. குறிப்பாக ஆர்க்காட்டு நவாபும் அவர் குடும்பத்தினரும் புதுச்சேரியில் அகதிகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தஞ்சம் புகுந்திருந்த போது, டூான்னு டைய ஆதரவில் இருந்தவர்கள். அதனால் அவள் சொல்லுக்கு அவர்கள் மிகுந்த மதிப்புக் கொடுத்தனர். மேலும் அவள் சிறந்த அறிவாளியும், ராஜதந்திரியும் கூட.

**துய்ப்ளேக்ஸ் - லபூர் தொன்னே சண்டை**

இதற்கிடையில் ஐரோப்பாவில் பிரான்சும், இங்கிலாந்தும் ஆஸ்டிரிய நாட்டு வாரிசுக்காகப் போட்டியிட்டனர். அதனால் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் மனக் கசப்பு வளர்ந்தது. ஏற்கனவே ஏற்பட்டிருந்த உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களைத் தாக்கமாட்டார்கள் என்று துய்ப்ளேக்ஸ் நம்பி இருந்தார். ஆனால் 1744 டிசெம்பர் 4-இல் ஆங்கிலேயர் லெ பவோரி என்ற பிரெஞ்சுக் கப்பலைத்தாக்கி அதிலிருந்த சரக்குகளைக் கைப்பற்றிக் கொண்டனர். பெப்ரவரியில் சீனாவிலிருந்து வந்த 3 கப்பல்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இவ்வாறு அடுத்தடுத்து 5 சரக்குக் கப்பல்களையும் 2 சண்டைக் கப்பல்களையும் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் பிரெஞ்சுக் கம்பனியின் வியாபாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. பிரான்சிலிருந்து கம்பனிக்கு எவ்வித பண உதவியும் வரவில்லை. புதுச்சேரியின் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. துய்ப்ளேக்ஸ் பிரான்சிலிருந்து படை அனுப்பி புதுச்சேரியைப் பாதுகாக்குமாறு பிரெஞ்சுக் கம்பனியைக் கேட்டார்.

1745 ஜூன் மாதம் லபூர்தொன்னே என்பவர் தலைமையில் மஸ்கரேன் என்ற தீவிலிருந்து ஒரு பெரும் படை அனுப்பப்பட்டது. துய்ப்ளேக்சுக்கு லபூர்தொன்னேவை புதுச்சேரியிலிருந்த போதே தெரியும். அவர் குணம் துய்ப்ளேக்சுக்குப் பிடிக்காது. துய்ப்ளேய்க்ஸ் புதுச்சேரியைத் தலைமை நிலையமாக நிரந்தரமாக வைத்துக்கொள்ள விரும்பினர். ஆனால் லபூர்தொன்னேவுக்கு கம்பனியின் இலாபமே முக்கிய குறிக்கோளாக இருந்தது. லபூர்தொன்னே தன்னிடமிருந்த பலத்த படையுடன் 1745-லேயே வந்து காப்பாற்றி இருக்கலாம். ஆனால் அவர் அந்தப் படைகளை கம்பனி வியாபாரத்திற்காக வேறு ஒரு இடத்திற்கு அனுப்பி விட்டு, பிரான்சிலிருந்து வர வேண்டிய படைக்காகக் காத்திருந்தார். அதனால் அவர் உடனே புறப்படவில்லை. பிரான்சுப் படை வந்தவுடன் புறப்பட்டு 1746 ஜூலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அங்கு பன்னெட் தலைமையிலிருந்த ஆங்கிலப் படையுடன் மோதினார். ஆனால் அப்படைகளை வெல்லாமல் விட்டுவிட்டார். ஆனால் ஒரு லட்சம் மார்க் நாணயத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அப்பணம் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக ஆனந்தரங்கப் பிள்ளை தன் டைரியில் கூறுகிறார்: வாடியிருந்த மக்களுக்கு அமுதம் கிடைத்தது போலிருந்ததாகக் குறிப்பிடுகிறார்.



1748ல் ஆங்கிலேயர் புதுச்சேரியைத் தாக்கியபோது பிரெஞ்சுப்படை ஆங்கிலேயரை விரட்டியடிக்கும் காட்சி

இந்தியாவிலிருந்த பிரெஞ்சு வியாபார ஸ்தலங்களும், கோட்டைகளும் தான் துய்ப்ளேக்ஸ் பொறுப்பில் இருந்தன. ஆனால் லபூர்தொன்னே சண்டைக் கப்பலின் தலைவராக இருந்தார். மேலும் புதுச்சேரியில் பல முக்கிய பிரமுகர்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தார். அதனால் கம்பனி, துய்ப்ளேக்கின் மதிப்பு இந்தியாவில் குறையும்போது அவரைக் கவர்னராக்கும்படி, ஆட்சிக் குழுவுக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பியிருந்தது. துய்ப்ளேக்சுக்கும் இவ் விபரம் தெரிய வந்தது. உள்ளுக்குள் இருவருக்கும் மனக்கசப்பு இருந்த போதிலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலேயே இருவரும் இயங்கி வந்தனர். இம்மனக் கசப்பு சென்னையை முற்றுகையிடும் விஷயத்தில் வளர்ந்தது. லபூர் தொன்னே சென்னையைப் பிடித்ததும் ஆங்கிலேயரிடமிருந்து பெருத்த தொகையைக் கேட்க விரும்பினர். ஆனால் துய்ப்ளேக்ஸ் சென்னைக் கோட்டையை தகர்த்தெறிந்து ஆங்கிலேயரின் வலிமையைக் குறைக்க வேண்டும் என்று கூறினார். அவர் அதற்கு ஒத்துவராததால் சென்னையைப் பிடித்த பிறகு அதை நவாபிடம் ஒப்படைக்கும்படி யோசனை கூறினார். அது பற்றி நவாபுக்கும் கடிதம் எழுதினார். இவ்வாறு செய்து தங்கள் எதிரிகளைப் பிரிக்க எண்ணினார்.

சென்னையைப் பிடிப்பதற்கு முன் ஆங்கிலப் படைகளை முறியடிக்க இருவரும் திட்டமிட்டனர். ஆகஸ்டு மாதம் முழுவதும் பிரெஞ்சுப் படைகள் வங்கக் கடலில் ஆங்கிலப் படைகளைத் தேடின. ஆனால் அவைகள் அவர்கள் கையில் சிக்காமல் தப்பித்துக் கொண்டன. அதனால் லபூர் தொன்னே சண்டையைத் தொடங்கத் தயங்கினர். ஆனால் புதுச்சேரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் அவர் ஆங்கிலேயரிடமிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டு அப்படைகளைத் தப்பிக்க வைத்துவிட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டினர். கடைசியாக செப்டம்பர் 12-இல் துய்ப்ளேக்ஸ், பராதி தலைமையில் அனுப்பிய 3000 ஆட்களுடன் சென்னையைத் தரைவழியாகவும், கடல்வழியாகவும் தாக்கினார். செப்டம்பர் 21-லேயே சென்னை பிடிபட்டது. லபூர்தொன்னே புதுச்சேரியில் யாரையும் கலக்காமல் ஆங்கிலேயர் ஒரு லட்சம் பகோடா நாணயத்தின் மதிப்புத் தொகையை ஐரோப்பாவில் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையில் ஒப்பந்தம் செய்து கொண்டார். அத்துடன் நில்லாமல் ஆங்கிலேயர் கிடங்குகளில் இருந்த சரக்குகளைக் காலி செய்து விட்டார். ஆனால் புதுச்சேரிக்கு இதனால் எவ்வித அனுகூலமும் இல்லை. சென்னையை யார் ஆளுவது என்ற கேள்வி ஏற்பட்டது. பிரெஞ்சு-இந்திய கவர்னரா அல்லது ஊரைப் பிடித்த படைத் தலைவனா என்ற கேள்வி எழுந்தது. கோபங்கொண்ட துய்ப்ளேக்ஸ் Epremesnil என்பவர் தலைமையில் படையை அனுப்பி, சென்னையைக் கைப்பற்றி வரும்படி கூறினார். ஆனால் லபூர்தொன்னே துய்ப்ளேக்சுக்குப் பணிய மறுத்தார். இதற்கிடையில் ஒரு பெருத்த புயல் காற்று வீச ஆரம்பித்து அவர் கப்பல்கள் திசை மாறிச் சென்றன. வேறு வழியின்றி லபூர்தொன்னே அக்டோபர் 21-இல் சென்னையை துய்ப்ளேக்சிடம் ஒப்படைத்தார். அது முதல் அவர் புதுச்சேரிக்கு திரும்பவில்லை. காரணம் அங்கு வந்தால் கைது செய்யப்படலாம் என்று அஞ்சினார்.

துய்க்ளேக்ஸ் சென்னையை ஆங்கிலேயரிடமோ நவாபிடமோ கொடுக்கவில்லை. கோபங்கொண்ட நவாப் தன் மகன் தலைமையில் 3000 பேர்கொண்ட ஒரு படையை அனுப்பி சென்னையைக் கைப்பற்றி வரும்படி கூறினார். துய்ப்ளேக்ஸ், பராதி என்ற படைத் தலைவனை அனுப்பி நவாபின் மகனைத் துரத்தி அடிக்குமாறு சொன்னார். பராதி 500 பேர் கொண்ட தன் படை மூலம் நவாப்பின் மகனை சிரமமின்றி மிக விரைவில் அடையார் ஆற்றங்கரையில் துரத்தி அடித்தார். இந்த வெற்றி துய்ப்ளேக்சின் மதிப்பை மேலும் பெருக்கியது. மற்ற முகலாய அரசர்கள் துய்ப்ளேக்சை மிகவும் பாராட்டி கௌரவித்தனர். மராத்திய படைத் தலைவன் ரகுஜி போன்ஸ்லா ஒரு கடிதத்தில் துய்ப்ளேக்சை மிகவும் பாராட்டி அவர் நட்பை விரும்புவதாகத் தெரிவித்திருந்தான்.

ஆங்கிலேயர் நவாபை தூண்டிவிட்டு தோல்வியடையச் செய்ததால், அவர் ஆங்கிலேயர் மீது வெறுப்படைந்தார். சென்னை கைப்பற்றப்பட்டதால் வியாபாரிகள் சரக்குகளைப் பதுக்க ஆரம்பித்தனர். துய்ப்ளேக்ஸ் சென்னை வியாபாரிகளை புதுச்சேரிக்கு வரும்படி கேட்டுப் பார்த்தார். ஆனால் அவர்கள் புதுச்சேரிக்கு வர மறுத்துவிட்டார்கள். காரணம் அந்தச் சமயம் புதுச்சேரியில் கிறிஸ்தவ சாமியார்கள் இந்துக்களை வெறுத்து மதம் மாறும்படி வற்புறுத்தினர். பல இந்துக் கோயில்களை இடித்து விட்டு அந்த இடத்தில் மாதா கோயில்கள் கட்டினர்.

### புதுச்சேரி முற்றுகை

சென்னை பிடிபட்டதும் ராபர்ட் கிளைவ், கூடலூர் கோட்டைக்கு வந்து விட்டான். அங்கிருந்தபடியே பிரெஞ்சுக்காரர்களைத் தாக்க நினைத்தான். பிரெஞ்சுக்காரர்களுக்கு ஆங்கிலேயர் அருகாமையில் வந்தது பெரிய ஆபத்தாகி விட்டது. 1746 டிசம்பர் 18 இலிருந்து 1748 ஜூன் 28-க்குள் நான்கு முறை துய்ப்ளேக்ஸ் கூடலூரைக் கைப்பற்ற முயன்றார். முடியவில்லை. லபூர்தொன்னே படையுடன் மறைந்து விட்டதால் கடற்படை குறைந்தது. 3000 பேர் கொண்ட தரைப்படையே துய்ப்ளேக்சிடம் இருந்தது. அதில் பாதிக்கு மேல் இந்தியர்கள். இதற்கிடையில் வங்காளத்தில் ஆங்கிலேயரின் கை ஓங்கியது. வங்காளத்திலிருந்து ஒரு படையும், கூடலூரிலிருந்து ஒரு படையும் புதுச்சேரியை நோக்கி வந்து கொண்டிருந்தன. புதுச்சேரி எந்த நேரத்திலும் கைப்பற்றப்படலாம் என அறிந்து துய்ப்ளேக்ஸ் கூடலூரைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிட்டார். ஆனந்த ரங்கப் பிள்ளையின் முயற்சியால் நவாப் அனவர்தி, மற்றும் அவர் பிள்ளையுடனும் துய்ப்ளேக்ஸ் சமாதானம் செய்து கொண்டார்.

ஆங்கிலேயர் புதுச்சேரியைத் தாக்க ஏற்பாடுகள் செய்து வருவதை அறிந்த துய்ப்ளேக்ஸ் 1748 ஜூலையிலிருந்து புதுச்சேரியைச் சுற்றி பலத்த காவல் ஏற்பாடு செய்தார். சண்டைக் காலத்துக்கு வேண்டிய சாப்பாட்டுப் பொருள்களைத் தயார் செய்துகொண்டார். ஆகஸ்டு 24-இல் ஆங்கிலேயர் புதுச்சேரியைத் தாக்க ஆரம்பித்தனர். புதுச்சேரி மக்கள் பீதியடைந்தனர். பல குடும்பங்கள் ஊரைவிட்டு ஓடின. இதுதான் தக்க சமயம் என்று ஈசுவரன் கோவிலை இடித்துவிட்டு அதன் கோபுரத்திலி



சார்ள்ஸ் ஜோசப்



தோமஸ் ஆர்தர்

துய்ப்பிளேக்ஸின் பின் வந்தவர்கள். இவர்களுக்குள் ஏற்பட்ட பகைமையால்தான் பிரான்சு தன் இந்திய இராச்சியத்தை இழந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருந்து குண்டுகளை ஆங்கிலேயர் மீது வீசினர், துய்ப்ளேக்சும் அவர் மனைவியும் கோட்டையின் உச்சியில் இருந்தவாறே படை வீரர்களுக்கு உற்சாகமூட்டி சண்டையை சாமாளித்தனர். ஒருமாத கால சண்டைக்குப் பிறகு, ஆங்கிலேயர் புதுச்சேரியைப் பிடிக்க முடியாமல் பின்வாங்கினர். துய்ப்ளேக்சால் சென்னையையும், புதுச்சேரியையும் பாதுகாக்க முடியவில்லை. சென்னையைத் தகர்த்து அதை நவாபிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக புதுச்சேரி அருகிலுள்ள வில்லியனூர், வழுதாவூர் ஆகிய இடங்களைப் பெற நினைத்தார். இதற்கிடையில் ஐரோப்பாவில் ஏக்ஸ் லா ஷப்பேல் என்ற இடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி சென்னையை ஆங்கிலேயரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று.



சென்னையைக் கைப்பற்றிய மாகே லா பூர்தொனே என்ற பிரெஞ்சுக் கடற்படைத் தளபதி

## புதுச்சேரி தலைநகரமாதல்

பிரெஞ்சு-இந்திய வியாபாரக் கம்பனியின் பிரான்சுத் தலைமையகம் இந்தியாவிலிருந்த பிரெஞ்சு கவர்னர்களை, உள் நாட்டு அரசர்களின் சண்டையில் தலையிட வேண்டாம் என்றும், வியாபாரத்தை மட்டும் கவனித்தால் போதும் என்றும் பலமுறை கூறியிருந்தது. பிரான்சுத் தலைமையகத்திற்கு உள் நாட்டு நிலைமை சரியாகத் தெரியாது. இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக் கவர்னர்கள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல் வியாபாரத்தைப் பெருக்கமுடியாது என்று கண்டனர். அதனால் அவர்கள் தலைமையகத்து உத்தரவை மீற வேண்டியிருந்தது. துய்ப்ளேக்சுக்கு முன்னிருந்த துய்மா என்ற கவர்னர், தஞ்சாவூர் அரசரை ஆதரித்து அவரிடமிருந்து காரைக்காலைப் பெற்றார். அடுத்து 1740-இல் தோஸ்த் அலிகான் என்ற நவாப் மராத்தியர்களால் கொல்லப்பட்ட போது, அவர் குடும்பத்தினருக்கு புதுச்சேரியில் தஞ்சம் அளித்து அவர்களை ஆதரித்து வந்தார். இவ்வாறு ஆதரவு கொடுத்ததால் பிரெஞ்சுக்காரர்கள் உள் நாட்டு விவகாரத்தில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

துய்ப்ளேக்ஸ் இதுவரை வியாபாரத்தைப் பற்றித்தான் சிந்தித்து வந்தார். சென்னையை ஆங்கிலேயரிடம் திருப்பிக் கொடுத்ததிலிருந்து புதுச்சேரிக்கு பாதுகாப்பு குறைந்துவிட்டது. அதைச் சுற்றியுள்ள இடங்கள் ஆதரவாக இருந்தாலொழிய புதுச்சேரிக்குப் பாதுகாப்பு இருக்காது என்று துய்ப்ளேக்ஸ் நினைத்தார். அதற்கு ஒரே வழி கர்னாடக நவாபை ஆங்கிலேயரிடமிருந்து பிரிப்பதுதான் என்று அவர் உணர்ந்தார். அதற்கு ஏற்றாற்போல் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. நவாபை மாற்றுவதே அந்தச் சந்தர்ப்பம். நவாப் அனவர்த்தி தோஸ்த் அலிகானின் மருமகன் சந்தா சாகிப்பை அந்த இடத்தில் வைத்துவிட்டால் கர்னாடக நவாப் தனக்கு ஆதரவாக இருப்பார் என்று துய்ப்ளேக்ஸ் நினைத்தார்.

அதேநேரத்தில் ஐதராபாத் நிஜாமுக்கு வாரிசுப் போட்டி ஏற்பட்டது. நிஜாமின் முதல் மனைவியின் பேரன் முஜாபர்ஜங் வாரிசாக நியமிக்கப்பட்டார். ஆனால் அவருடைய வேறு ஒரு மனைவியின் பிள்ளை நஜீர்ஜங்க ஆட்சியைக் கைப்பற்றி கஜானாவைத் தன் வசப்படுத்திக் கொண்டான். முஜாபர், சந்தா சாகிப்புடன் சேர்ந்துகொண்டு துய்ப்ளேக்சின் உதவியால் மீண்டும் தன் பதவியைக் கைப்பற்ற எண்ணினான். தோஸ்த் அலிகானின் மகளும் சந்தாசாகிப்பும் அப்போது புதுச்சேரியில் துய்ப்ளேக்சின் பாதுகாப்பில் இருந்ததால் அவள் துய்ப்ளேக்சை சந்தாசாகிப்புக்கு உதவும்படி கேட்டுக் கொண்டான். துய்ப்ளேக்சும் இத் திட்டத்தை ஆதரித்தார். தன்னிடம் இருந்த படைக்கு வேலை இல்லாமலிருந்ததால் அவர் அதை சந்தா சாகிப்புக்கு கொடுத்து உதவுவதாக வாக்களித்தார். தன் சொந்தப் பணத்தை சந்தா சாகிப்புக்குக் கொடுத்து சண்டையை ஆரம்பிக்கும்படி கூறினார். அதற்குப் பதிலாக சந்தாசாகிப் சண்டையில் வெற்றி பெற்றால் வில்லியனூரையும், அதைச் சுற்றியுள்ள 3 கிராமங்களில் வரி வசூலிக்கும் உரிமையைக் கம்பனிக்குத் தருமாறு கேட்டார். அதற்கு அவரும் இசைந்தார். அந்தக் காலத்தில் இந்தியாவில் எந்த நவாபுக்கும் ஊர்கள் சொந்தமில்லை. அவை தில்லியில் இருந்த முகலாயப் பேரரசுக்குச் சொந்தம். நவாபுக்கு வரி வசூலிக்கும் உரிமைதான் உண்டு. அதில் ஒரு சிறு பகுதியை முகலாயப் பேரரசுக்கு அளிக்க வேண்டும். முஜாபர், சந்தா சாகிப்புடன் சென்று கருநாடகத்தை முற்றுகையிட்டான். பிரெஞ்சுப் படைகள் புதுச்சேரியில் இருந்து 170 கிலோமீட்டர் தூரத்திலிருந்த பாலாற்றங்கரையில் போய்த் தங்கினார். அனவர்த்தி ஆம்பூர் அருகில் தங்கியிருந்தான். 1749 ஆகஸ்டு 3-இல் நவாப் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் அனவர்தியைத் தாக்கின. அனவர்தி கொலை செய்யப்பட்டான். அவன் மகன் மமத் அலி தப்பிச் சென்று திருச்சிராப்பள்ளியில் பதுங்கிக் கொண்டான். முஜாபரும், சந்தா சாகிப்பும் தங்கள் ஆயிரக்கணக்கான படைகளுடன் புதுச்சேரிக்கு வந்து துய்ப்ளேக்சைப் பாராட்டினர். புதுச்சேரியில் அவர்களுக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்கள் ஏற்கனவே சொன்னபடி வில்லியனூரையும், அதைச் சேர்ந்த இடங்களையும் கொடுத்தனர். அவையில்லாமல் மல்லிப்பட்டணத்தையும் காரைக்காலையும், அதைச் சேர்ந்த 81 கிராமங்களையும் துய்ப்ளேக்சிற்குக் கொடுப்பதாக வாக்களித்தனர். இந்த வாக்குறுதியைக் கேள்விப்பட்ட ஆங்கிலேயர், கூடலூர் எந்த நேரத்திலும் தாக்கப்படலாம் என்று அஞ்சினர். அவர்கள் துய்ப்ளேக்ஸ் செய்தது போல் அகமத் அலியிடம் சென்று அவருக்கு உதவி செய்வதாகவும், அதில் வெற்றி பெற்றால் சென்னையைச் சுற்றியுள்ள இடங்களைத் தங்களுக்குத் தரும்படி கேட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





துய்ப்ளேக்ஸ், 1754ல் அக்டோபர் 14ல் பதவியிழந்து பிரான்சுக்கு கப்பல் ஏறும் காட்சி

ஆங்கிலேயர் உதவி பெற்ற நஜீர் ஜங்கும், அகமத் அலியும் பெருத்த படையுடன் கருநாடகத்தை முற்று கையிட்டனர். ஆரம்பத்தில் இப் பெரும் படைகளைக் கண்ட பிரெஞ் சுப்படைகள் அஞ்சின.

முயற்சியைக் கைவிடாமல் போரிட்டனர். முடிவில் பிடிக்கமுடி யாது என்று கருதிய செஞ்சிக் கோட்டையைப் பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி கைப்பற்றினான். இந்த வெற்றியைக் கணட நஜீர்ஜங் படை சிதறி ஓட ஆரம்பித்தது. மற்ற சிறு நவாபுகள் துய்ப்ளேக்சின் ஆதரவா ளராக மாறி நஜீர்ஜங்கைக் கொன்ற னர். டிசம்பர் 16-இல் நடந்த போரில் பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் வெற்றி பெற்றனர். முஜாபர் சுபாகத் தேர்ந் தெடுக்கப்பட்டான். முஜாபருக்கும் சந்தாசாகிப்புக்கும் துய்ப்ளேக்ஸ் பெருத்த உதவி செய்திருந்தார். அதற்கு நன்றி தெரிவிக்கும் வண் ணம் துய்ப்ளேக்சுக்கு ஒரு லட்சம் ரூபாயும், 18 பெட்டி நகைகளும் கொடுக்கப்பட்டன. டிசம்பர் 26-இல் புது சுபாப் புதுச்சேரிக்கு வந்து உடன்படிக்கையின்படி வில்லிய னூர், மசூலிப்பட்டணம் காரைக் கால் போன்ற இடங்களில் வரி வசூ லிக்கும் உரிமையை துய்ப்ளேக்சுக் குக் கொடுத்தான். அத்துடன் அவரை கிருஷ்ணா நதியிலிருந்து, கன்னியா குமரி வரைக்கும் உள்ள பகுதிக ளுக்கு நவாப் ஆக்கிக் கௌரவித் தான். இந்தப் பதவி துய்ப்ளேக்சுக் குப் பெரும் புகழைத்தந்தது. அது முதல் புதுச்சேரி, பிரெஞ்சு-இந்தியப் பகுதிகளுக்குத் தலை நகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒரு காலத் தில் இப்படிப்பட்ட அந்தஸ்த்து தனக் குக் கிடைக்கும் என்று துய்ப்ளேக்ஸ் கற்பனை கூடச் செய்திருக்கமாட் டார்.

கம்பனியின் வியாபாரத்தைப் பெருக்க வந்த துய்ப்ளேக்ஸ் நாடு பிடிப்பவராக மாறினார். இவ்வளவு பெரிய நிலப்பரப்பைக் கட்டிக்காக்க போதிய படை பலம் அவருக்குத் தேவைப்பட்டது. அதற்காகப் பிரான்சு மேலிடத்தில் உதவி கேட்டிருந்தார். ஆனால் வியாபாரத்தில் குறிக்கோ ளாக இருந்த தலைமையகம் அவர் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வில்லை. ஆனால் ஆங்கிலேயருக்கு ஆங்கில அரசு அத்தகைய உதவி செய் ததால் ஆங்கிலேயரின் கைவலுக்க ஆரம்பித்தது.

## ஆங்கிலேயர் எழுச்சி

தக்காணத்தின் முதல் மந்திரி கோல்கோந்திலிருந்து புதுவை வந்து புதிய நிஜாமுக்குத் தன் நன்றியறி தலைத் தெரிவித்தார். அவர் சொல் லுக்கு மக்களிடையே அதிக மதிப்பு இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு துய்ப் ளேக்ஸ் புஸ்ஸி தலைமையில் ஒரு படையை அனுப்பி முஜாபரைப் பதவியில் அமர்த்தி விட்டு வருமாறு கூறினார். அவரைப் பதவியில் அமர்த்துமுன் ஏற்பட்ட சிறு சண் டையில் முஜாபர் பலத்த காயமுற்று இறந்தார். அதனால் புஸ்ஸியுடன் வந்த முஜாபரின் மாமா சலாபத்தை சுபாப் ஆக்கி அவர்தன் மதிப்பைப் பெற்றார். ஒரு சில வாரத்திற்கு அவ ருடன் சென்ற புஸ்ஸி ஏழு ஆண்டுக் குப் பின்பே புதுச்சேரிக்குத் திரும்பி வந்தார். இந்த ஏழு ஆண்டுகளில் புஸ்ஸி தக்காணத்தில் அவரங்கா பாத் வரைக்கும், கிழக்கில் ஒரிசா வரைக்கும் உள்ள பகுதிகளைப் பிரெஞ்சுப் படைகளின் பாதுகாப்பில் கொண்டு வந்தார். துய்ப்ளேக்ஸ் வங்காளம் வரைக்கும் உள்ள பகுதி களை வென்று, அதற்கு சலாபத்தை நவாப் ஆக்கும்படி எழுதியிருந்தார். இந்தத் திட்டத்தை புஸ்ஸியும் ஆத ரித்தார். இதற்கிடையில், தக்காணத்து மக்களும், சிற்றரசர்களும் சலாபத் புஸ்ஸிக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் அடங்கி நடப்பதை விரும்பவில்லை.

இதுவரை அடங்கியிருந்த ஆங்கி லேயர் விழித்துக்கொண்டனர். சென் னைக்குப் புதிதாக வந்த சாண்டர்ஸ் என்ற கவர்னர், இந்தியாவில் பிரஞ் சுக்காரர்களின் வளர்ச்சி ஆங்கிலக் கம்பனிக்கு இடைஞ்சலாக இருப்ப தாகவும், அவர்களின் வளர்ச்சிக்குத் தடை போட வேண்டும் என்றும் இங்கிலாந்துக் கம்பனிக்கு எழுதி னான்.

## துய்ப்ளேக்ஸ் தோல்விப்படலம்

துய்ப்ளேக்ஸ் திருச்சிராப்பள்ளி யில் பதுங்கியிருந்த முகமது அலியு டன் சமாதானம் செய்துகொள்ள விரும்பினார். புஸ்ஸி தன்னுடன் இல்லாத நிலையில் துய்ப்ளேக்ஸ் கருநாடகப் பிரச்சினையைத் தீர்க்கா மல் முகமது அலியுடன் தொடர்பு கொள்ள நினைத்தது சரியில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகமது அலியும் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தான். சாண்டர்சுடன் தொடர்பு வைத்துக்கொண்டு துய்ப்ளேக்சிடமும் நெருங்கி வருவது போல் நடித்தான். துய்ப்ளேக்ஸ் முகமது அலியை திருச்சியில் இருந்து விடுவிக்கத் தன் படையை லா என்பவருடைய தலைமையில் அனுப்பி வைத்தார். லா ஒரு இளைஞர். போதிய அனுபவம் இல்லாதவர். இதற்கிடையில் சாண்டர்ஸ், முகமது அலிக்குத் துணையாக இருக்க ஒரு படையை ராபர்ட் கிளைவ் தலைமையில் அனுப்பி வைத்தான். இந்தப் படையை லாவால் வெல்ல முடியவில்லை. மாறாக ராபர்ட் கிளைவ் பிரெஞ்சுப் படையை சிறீரங்கத்தில் சுற்றிவளைத்துக் கொண்டான். 1752 ஜூன் 12-இல் ஆங்கிலேயரின் பெருத்த படைக்கு முன் லாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். முகமது அலி பிரெஞ்சுப் படைகளையும், ஆயுதங்களையும் பிடித்துக் கொண்டான். அவன் கூட்டாளிகளில் ஒருவன் சந்தா சாகிப்பை சரணடையச் செய்து, அவன் தலையை வெட்டி வீழ்த்தினான். துய்ப்ளேக்ஸ், முகமது அலி நவாப் ஆனால் புதுச்சேரி மீண்டும் தாக்கப்படலாம் என்பதை உணர்ந்தார். அதனால் சண்டையைத் தொடர்ந்தார். அதே நேரத்தில் தன் மனைவி மூலம் மராத்தியர்களுடனும், மைசூர் சுல்தானிடமும் சமாதானம் செய்துகொண்டார். மைசூர் அரசர் அவருக்குப் பெரிய கௌரவப் பட்டம் கொடுத்தார். முகலாயப் பேரரசர் அவரை முறைப்படி கருநாடக நவாப்பாக ஆக்கிக் கௌரவித்தார். இதற்கிடையில் பிரான்சின் கடற்படை மந்திரி இந்தியாவில் பிரெஞ்சு வியாபாரம் தடைப்படுவதை அறிந்து இந்தியாவில் சண்டையை நிறுத்தும்படி கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கடிதம் அவருக்கு 1753 ஏப்ரல் அளவில் வந்தது. அதற்கு முன்னரே துய்ப்ளேக்ஸ் தன் சொந்தப் பணத்தில் சண்டையை ஆரம்பித்துவிட்டார்.

பிரெஞ்சு அரசாங்கம், இங்கிலாந்து அரசுடன் தொடர்பு கொண்டு சமாதானம் செய்து கொண்டது. அதன் விளைவாக சாண்டர்சும், துய்ப்ளேக்சும் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

சிறீரங்க வீழ்ச்சிக்குப் பின் துய்ப்ளேக்கின் மதிப்பு குறைந்து விட்டதால் கொதெஹெ (Godeheu) என்பவரை பிரெஞ்சு அரசர் துய்ப்ளேக்சுக்குப் பதிலாக கவர்னராக நியமித்து அனுப்பினார். துய்ப்ளேக்ஸ் உடனடியாக பிரான்சுக்குப் புறப்படத் தவறினால் அவரைக் கைது செய்யும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இச் செய்திகளைக் கேள்விப்பட்டதும் துய்ப்ளேக்ஸ் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் உடனடியாக புறப்பட முடியவில்லை. காரணம், சண்டையை தன் சொந்தப் பொறுப்பில் நடத்தியதால் பலரிடம் அவர் கடன்பட்டிருந்தார். அக் கடன்களை அவர் புறப்படும் முன் அவர் பைசல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால் இரண்டு மாதம் வரை தன் பயணத்தை ஒத்திப் போட வேண்டியதாயிற்று.

முகலாயப் பேரரசு தனக்குக் கொடுத்த ஜாகீர்களின் வருமானத்தினால் அந்தக் கடன்களை அடைத்தார்.

கொதெஹெ, இந்தியா வந்தவுடன் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொண்டார்.

அதன் காரணமாக முகலாயப் பேரரசு கொடுத்த சலுகைகளை இழக்க வேண்டிவந்தது. ஆங்கிலேயர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வடக்கே வங்காளம் வரை பரவ ஆரம்பித்தனர். விழித்துக் கொண்ட பிரான்சு படைகளை அனுப்பி வங்காளத்தைக் கைப்பற்ற நினைத்தது. காலம் கடந்து படை வந்ததால் பிரெஞ்சுக்காரர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. புதுச்சேரி வலுவிழந்து விட்டது. ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது. ★

# திருமணமா? வேண்டவே வேண்டாம்!

குடும்பம் என்ற அமைப்புக்கு சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்கிவந்த ‘திருமணம்’ என்ற சடங்கு ஐரோப்பாவில் இப்போது செயலற்றுப்போகத் தொடங்கியுள்ளது.

திருமணம் செய்துகொள்ளாமலே குடும்பம் நடத்துவது, அதாவது சேர்ந்து வாழ்வது என்ற புதிய நடைமுறை ஐரோப்பாவின் இளைய தலைமுறையினரில் கணிசமானோர் விரும்பத் தொடங்கியுள்ளனர்.

1970களில் ஆரம்பித்த இந்த நடைமுறை பல்வேறு எதிர்ப்புக்களைத் தாண்டி இன்று ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்ட ரீதியாக அங்கீகாரம் பெற்ற ஒன்றாகவும் ஆகிவிட்டது. ஐரோப்பாவிலே திருமணம் செய்து கொள்ளாமலே சேர்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் சுவீடனிலேயே அதிகமாகும். அங்கு 46.6 வீதமானவர்கள் இவ்வாறு சேர்ந்து வாழ்கின்றனர். அடுத்து டென்மார்க்கில் 46 வீதமானவர்களும், பிரான்சில் 28.2 வீதமானவர்களும், இங்கிலாந்தில் 27.9 வீதமானவர்களும், ஜேர்மனியில் 24.5 வீதமானவர்களும், ஆஸ்திரியாவில் 23.6 வீதமானவர்களும், இத்தாலியில் 6.3 வீதமானவர்களும், சுவிசில் 5.7 வீதமானவர்களும், கிரீசில் 2.2 வீதமானவர்களும் இவ்வாறு சேர்ந்து வாழ்கின்றனர்.

பொதுவாக கிராமப்புறங்களை விட நகரப் புறங்களிலும் படித்துப் பட்டம் பெற்றவர்கள் மத்தியிலுமே இந்த நடைமுறை அதிகரித்து காணப்படுகிறது.

ஆண்களை விட பெண்களே இவ்வாறு சேர்ந்து வாழ அதிக விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்த வாழ்க்கை முறையில் அவர்களது கன்னிப் பெயர் பாதுகாக்கப்படுவது அதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது.

இதை விட சட்டச் சிக்கல்கள் இல்லை. பிரிந்து போகிற போது விவாகரத்து கேட்டு நீதி மன்றத்துக்கு அலையத் தேவையில்லை. தங்களது அந்தரங்க இரகசியங்களை நீதிமன்றங்களில் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை போன்ற இன்னோரன்ன காரணங்களால் இளைய தலைமுறையினர் இணைந்து வாழும் வாழ்க்கை முறையை விரும்புகிறார்கள் என்று அபிப்பிராய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(சிறு கதை) 1

# "ஆயுதம் வேண்டும் எனக்கு!"

இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த 1989 ஆம் ஆண்டுக்காலம் - இயக்கச்சிப் பகுதியில் உள்ள கோவில் வயல் என்னும் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் செல்வராஜா, உபாலி என்ற இரு போராளிகள் வந்து போகின்றார்கள் என்று ஒரு தகவல். இதற்காக பல முறை அந்த வீட்டைச் சோதனையிட்டனர் இந்திய இராணுவத்தினர். பலனேதும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் வீட்டுக்காரரைத் தாக்கி விட்டுச் செல்வதை மரபாக்கி இருந்தனர். ஒரு சமயம் இரு நாட்களுக்கு மேலாக அந்த வீட்டில் மறைந்திருந்தனர். அப்பகுதியில் இருந்து எவரையும் வெளியேற விடாமல் காத்திருந்தனர். இவர்கள் செய்யும் ''தவம்'' பற்றி போராளிகளுக்கு தகவல் தெரிந்ததால் அந்தப்பகுதிகளுக்கு அவர்கள் செல்லவில்லை. களைத்துப் போய் முகாம் திரும்பியதும், ''மீண்டும் அந்தப் பகுதியில் போராளிகள் நடமாடுகிறார்கள்'' என்று தகவல் கிடைத்தது அவர்களுக்கு. எனவே அந்தக்கிராமத்தையும் அருகிலுள்ள கிராமங்களையும் முற்றுகையிட்டனர். இம் முற்றுகைக்கு ஓர் பிரிகேடியர் தலைமை தாங்கினார். அந்த முற்றுகையின் போது கிராமத்தவர்கள் அனைவருமே ஒரு இடத்தில் சேரும்படி கட்டளையிடப்பட்டது. முற்றுகையிலிருந்து தப்புவது கடினம் எனத் தெரிந்து கொண்ட குறிப்பிட்ட இரு போராளிகளும் இராணுவத்திற்கு வழிகாட்டியாய் வந்த இளைஞனது வீட்டில் போய்த் தங்கியிருந்தனர். அதைவிடப் பாதுகாப்பான இடம் வேறு எதுவும் கிடைக்காதல்லவா?

முற்றுகையின் போது மக்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். ஆதரவு செய்பவர்கள், சாப்பாடு கொடுப்பவர்கள், புலியோடு பேசுபவர்கள், புலியைப் பார்ப்பவர்கள் என பல வகையாகப் பிரிக்கப்பட்டதும், ''வழமையான உபசரிப்புகள்'' நடைபெற்றன. இறுதியில் குறிப்பிட்ட வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்பட அல்பம் ஒன்றை பிரிகேடியரிடம் காட்டி விளக்கியவாறே கருப்பசாமி என்ற மேஜர் உரை நிகழ்த்தினார். இந்திய இராணுவத்திற்கே உரித்தான, வழமையான பிரசுரிக்க முடியாத வார்த்தைகளுடன் மேலும் சில வார்த்தைகள் வந்தன.

''ரெண்டு பேர் வராறாங்க. இவங்கள இந்த ஊருல இருக்கிற இத்தன ஆம்புளைகளாலயும் புடிக்க முடியலயா? நீங்கல்லாம் பொட்டப் பசங்க. உங்களுக்கெல்லாம் மீச எதுக்குடா? எல்லாரும் போய்ச் சேலை கட்டுங்கடா'' என்று திட்டினார். தொடர்ந்து ''இந்த ஊருக்குள்ள வர்ற செல்வராசா, உப்பாலி ரெண்டு பேரையும் புடிக்க என்னென்ன வேணும் கேளுங்க. துப்பாக்கி வேணுமா? அத வேணுமுன்னாலும் தாறம். உங்கள்ல யாருக்காவது தைரியமிருந்தா யாராவது மீச முளைச்ச ஆம்பளையா இருந்தா துப்பாக்கி வேணுமெங்கற ஆம்பளைங்க எழும்புங்க'' என்று ஒரு ''ஊக்குவிப்பு அறிவிப்பு'' கொடுத்தார்.

மேஜர் கருப்பசாமியின் வார்த்தையைத் தொடர்ந்து மௌனம் ஒருவரும் எழும்பவில்லை, சிலர் இந்திய இராணுவத்தைத்தான் கருப்பசாமி பேசுகிறார் என்று பேசாமல் இருந்துவிட்டனர். அத்துடன் எல்லோரும் தலையைத் திருப்பி யாராவது எழும்புகின்றனரா என்று பார்த்துக் கொண்டிருந்தனர். இறுதியாக ஒருவர் எழும்பினார், சண்டிக்கட்டைக் கூட அவர் அவிழ்த்து விடவில்லை, அவர் வேறு யாருமல்ல. அடிக்கடி முற்றுகைக்குள்ளாகும் அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர்தான். கிராமத்தவர் அனைவருக்குமே வியப்பு. பிரிகேடியர் முகத்தில் புன்சிரிப்பு.

கருப்பசாமிக்கோ மகிழ்ச்சி தாளவில்லை. இன்னும் உஷாராகப் பேசத் தொடங்கினார். ''பாருங்க இந்த வயசுல இந்த ஐயா துணிஞ்சு ஆயுதம் கேக்கிறாரு, நீங்கெல்லாம் பொட்ட மாதிரி இருக்கிறீங்க இப்படி ஒரு வீரன் உங்க மத்தியில இருக்கிறதுக்காக நீங்க பெருமைப்படணும்'' என்றவாறே அவரை நோக்கி ''ஐயா உங்களுக்கு எத்தன வயசு?'' என்றார் அவர். ''அம்பத்திரண்டு'' என்றார். ''சரி ஐயா, நீங்க ஏன் ஆயுதம் கேக்கிறீங்க? அத இவங்களுக்குச் சொல்லுங்க'' என்றார் கருப்பசாமி. ஐயா ஒரு கணமும் தாமதிக்கவில்லை. பதில் சொன்னார், ''உன்னோட்ட இருக்கிறத விட நீ தாற துவக்கால என்னை நானே சுட்டுச் செத்துப் போகலாம். அதுக்குத் தான் துவக்குக் கேக்கிறன்.''

(4)

சிறுநுளம்பு: ''என்னம்மா, இந்த மனிதரில ரத்தம் ஒன்றையும் காணோமே?''

தாய்நுளம்பு: ''இப்ப இவையள் பச்சையரிசியைத் தின்னுகினம்; கவனமாயிரு!''

- நந்தன்

✻ இமிந்திரன் ✻



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**பெர்லின் இப்போது ரொம்பவும்தான் கெட்டுப்போய் விட்டது. நியோ நாசிகள் எந்த வடிவத்தில் இருப்பார்கள் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. இரவு என்பது பயம் மிகுந்த தாக இருக்கிறது**

# வளர்ந்துவரும் நியோ நாசிய நெருக்கடி

## சிவா

சமீப காலம்வரை அதிகளவு வெளிநாட்டு அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்கும் நாடாக ஜேர்மனி இருந்து வந்தது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் அங்கு வெளிநாட்கவர்களுக்கு குறிப்பாக யூத இனத்தவர்களுக்கு எதிராக பாசிசவாதி அடல்ப் ஹிட்லர் இழைத்த கொடுமைகளுக்கு பிராயச் சித்தம் தேடுவது அதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. ஆனாலும் ஜேர்மனியர்கள் இனவெறியர்கள், பாசிசவாதிகள், மனிதாபிமானமற்றவர்கள் என்றெல்லாம் சர்வதேச அரசியலில் ஹிட்லர் ஏற்படுத்திவிட்டுப் போன பிரதிமையை உடைத்து, தாங்கள் மனிதாபிமானம் உள்ளவர்கள், பாசிசத்திற்கு எதிரானவர்கள் என்பதை நிலை நிறுத்த வேண்டிய தேவை, ஹிட்லரின் மறைவுக்குப் பின் வந்த புது ஜேர்மனியின் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டதே பல்வேறு வெளிநாட்டு அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதில் அவர்கள் காட்டிய தாராள மனப்பான்மைக்கு உண்மையான காரணமாகும்.

ஆனால் இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அகதிகள் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு விட்டன. முன்பு போல் ஒரு வெளிநாட்டு அகதி, அவ்வளவு சுலபமாக அங்கு அரசியல் தஞ்சம் கோரிவிட முடியாது.

ஜேர்மன் அரசு என்னதான் இனவாதத்திற்கும், பாசிசத்துக்கும் எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் கணிசமான அளவு ஜேர்மனிய மக்கள் மனதில்ஹிட்லர் விதைத்துவிட்டுப் போன 'சூரியவாதம்' நீறுபூத்த நெருப்பாகவே இன்னும் இருந்துகொண்டிருக்கிறது.

"வெளிநாட்டவர்கள் விரும்பத்தகாதவர்கள், விலங்குகளைப் போன்றவர்கள். விலங்குகள் இருக்கவேண்டிய இடத்தில்தான் இருக்க வேண்டும். நாட்டுக்குள் தாம் விரும்பிய படி அவற்றை உலாவவிட முடியாது." என்கிறார்கள். இன்று அங்கு ஹிட்லரின் நாசிக் கொள்கைக்கு புத்துயுரூட்டி வரும் நியோ நாசிகள்.

சமீக காலமாக வெளிநாட்டு அகதிகள், மற்றும் குடியேற்ற அந்தஸ்த்து பெற்றவர்களுக்கெதிரான இவர்களது வன் செயல்கள் அதிகரித்து விட்டன. நாடு தழுவிய ரீதியில் பல அகதி முகாம்கள் நள்ளிரவு வேளையில் தீக்கிரையாக்கப் பட்டதில், பல வெளிநாட்டவர்கள் குடும்பமாகவே கூட தீயில் எரிந்து மாண்டுவிட்டனர். பல இடங்களில் துப்பாக்கிச் சூடுகளும் கத்திக் குத்துக்களும் கூட நடந்துள்ளன.

இளைய தலைமுறையினர் அதிகளவுக்கு இந்த நியோ நாசி இயக்கத்தில் சேர்ந்து கொள்வது ஒரு ஆபத்தான அறிகுறியாக உள்ளது.

முதலாளித்துவ ஆட்சி நிலவிய மேற்கு ஜேர்மனியை விட நாசிசத்துக்கு எதிரான கம்யூனிச ஆட்சி நிலவிய கிழக்கு ஜேர்மனியிலேயே நியோ நாசிகளின் செயற்பாடும், வளர்ச்சியும் அதிகமாக உள்ளது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

கிழக்கு ஜேர்மனியின் முன்னாற் கம்யூனிச ஆட்சியாளர்கள், என்ன தான் நாசிசத்துக்கும் பாசிசத்துக்கு மெதிரான கொள்கைகளை வைத்திருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடம் என்ற ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்குள்ளேயே இவை முடங்கிப் போய்விட்டன. மக்கள் மத்தியில் பேர்லின் சுவருக்கு மறு பக்கத்திலுள்ள நுகர்பொருள் சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையிலான சொர்க்க வாழ்வு பற்றிய கனவே இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1991-ல் பேர்லின் சுவர் உடைக்கப்பட்டபோது பொருளாதார தொழில் சட்டரீதியாக வளர்ச்சிபெற்ற மேற்கு ஜேர்மன் சமூகத்துடன் கிழக்கு ஜேர்மன் மக்களால் உடனடியாக ஒன்றிப் போய்விட முடியவில்லை.

ஒன்றிணைக்கப்பட்ட ஜேர்மனி என்ற திட்டத்தின் கீழ் கிழக்கு ஜேர்மனியை அபிவிருத்தி செய்வதற்கு ஜேர்மன் அரசாங்கம் பல்வேறு திட்டங்களை அறிவித்த போதும், அவை உடனடியாக பலனழிக்காத நிலையில் மேற்கிற்கும், கிழக்கிற்கும் இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது தவிர்க்கமுடியாமல் போனது.

மேற்கில் தங்களை விட வசதியாக வாழும் வெளிநாட்டவர்களையிட்டு, கிழக்கு ஜேர்மன்காரர்கள் ஆத்திரம் கொள்ள ஆரம்பித்தனர். தாங்கள் வேலையற்ற நிலையிலும், வசதியற்ற நிலையிலும் இருக்கும் போது, தங்களுக்குக் கிடைக்கவேண்டிய வசதிகளையும், சலுகைகளையும் அபகரித்துக்கொள்ளும் மோசக்காரர்களாக அவர்கள் வெளிநாட்டு அகதிகளை எண்ணுகின்றனர்.

இதைவிட நாடு தழுவிய ரீதியில் ஜேர்மனியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் கூட ஏற்படுத்திய தாக்கமானது மேற்கு ஜேர்மன் மக்களைவிட கிழக்கு ஜேர்மன் மக்களுக்கு அதிகம்.

இதனால் தான் மேற்கை விட கிழக்கில், நியோநாசிகள் வளர்ச்சியும் செயற்பாடும் அதிகரித்துக் காணப்படுகிறது.

பெர்லின் நகரச் சந்தை ஒன்றில் 30 வருடங்களுக்கு வியாபாரம் செய்து வரும் துருக்கியரான இஃமத்-ரப்பார் சொல்கிறார் பெர்லின் இப்போது ரொம்பவும்தான் கெட்டுப்போய் விட்டது. நியோ நாசிகள் எந்த வடிவத்தில் இருப்பார்கள் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. இரவு என்பது எங்களுக்கு பயம் மிகுந்ததாக இருக்கிறது என்று அதில் உண்மையில்லாமல் இல்லை. ★

## கி.பி. 2050-ம் ஆண்டு நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த பழம் பாடலொன்று

நிலா, நிலா ஓடிப்போ
அம்புலிக்கும் அதையடுத்த
அண்டைவீட்டுக் கோள்களுக்கும்
அடுக்கடுக்காய் விண்கலங்கள்
அவசரமாய் அனுப்புவதேன்?

அடுத்த வீட்டு தம்பி
கேட்டான்
அவனுக்குத்தான்
இந்த பதில்

தொழில் துறையில்
முன்னேற்றம் என்று சொல்லி
தொலைத்து விட்டோம் நம் நதியை
தொழிற்சாலைக்கசடுகளின்
புத்தகம் நம் நதிகள் அன்றோ
கங்கையென்ன, காவிரியென்ன
காவியம் போற்றும் நதிகளென்ன
அண்டசராசர அழுக்குகளின்
சங்கமமே இவைகளெல்லாம்


கார்முகில் கசிந்திங்கே
கன மழையைக் கொட்டுமென்ற
காலங்கள் மறைந்தேபோய்
கந்தக அமிலமும், கரியமிலமும்
கலந்திங்கே கொட்டுதடா

பசுமைப் புரட்சியென்று
பறைசாற்றிவிட்டு இங்கே
பூச்சி மருந்துதனை
நீர் நிலையில் கலந்திட்டோம்
பந்தி இலையிலுள்ள
காய்களிலும், மீன்களிலும்
கலந்தந்த மருந்திங்கே
கலக்கியடிக்குதுடா

காத்தாடவெளியே போன
காலமெல்லாம் கதையாகி
கண்ணை எரிக்கும் புகையும்
கார்பன்-டை ஆக்ஸைடும்தான்
காற்றுமண்டல பட்டாதாரர்கள்
என்று சொல்லும் காலமிது.

செவிக்கு உணவில்லாத போதுத
இங்கு வயிற்றுக்கும் ஈயுமென்பா
செம்மையான செவிகளையும்
செவிடாக்கத்தானோ
கார்களின் உறுமலும்
காரவெல் ஊர சீறுதலும்

நம்ம பூமி கெட்டுப்போயி
ரொம்ப காலம் ஆச்சு தம்பி
அம்புலியையும்
அண்டைவீட்டுக்
கோள்களையும்
அடுத்தாற்போல்
கெடுக்கத்தான்
அடுக்கடுக்காய்
விண்கலங்கள்
அவசரமாய்
அனுப்புகின்றோம்.



பழம் ஓலைச்சுவடி கொடுத்து
உதவியவர் நா. கண்ணன்

பின் குறிப்பு: ஆசிரியர் பெயர் அமில மழையில் அழிந்து விட்டதாக நம்பப்படுகிறது – X காரவல் - சூபர்சானிக் விமானம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முகம் கொள்



அந்தக் குளிர்ந்த மலையின் ஊடாகப் பாயும் நீர்வீழ்ச்சி ஏற்படுத்திய வானவில்லைப் பார்த்து சொக்கிப்போன போதுதான் அது நிகழ்ந்தது.

நியூட்டன் தலையில் ஆப்பிள் விழுந்தது. புவியீர்ப்பைப் பற்றிய தான அபரிதமான புரிதல் உலகுக்கு கிடைத்தது.

அப்போது அவனுக்கு அவன் தலை இருந்தது. அதுதான் அவன் புரிதலுக்கு "வித்து".

எனக்கோ அன்று தலையோ இல்லை. அதுதான் வித்தியாசம்.

வானவில்லை ஆரம் பத்திலிருந்து கடைசி வரை பார்த்தேன். ரொம்ப, ரொம்ப அழகு. கொஞ்சம் எட்டிப் போட்டால் பிடித்து விடலாம். இடையில் அருவி ஓடிக்கொண்டிருந்தது. ஓ! என்ற ஓசை யுடன் வெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது. மலையின் பாறைகளில் பட்டுச் சிதறி, எட்டி எழுப்பி தூவானம் போட்டுக் கொண்டு அருவி இடையில் ஓடிக்கொண்டிருந்தது. அருவியின் ஆர்ப்பாட்டத்தில்கூட அழகு இருக்கிறது. துள் கிளப் பும் துள்ளிய நடையி லிருந்து கெம்பி எழும்பு கிறது வானவில். அரு வியின் நடுவே அரை வட்டமாக வானவில் நின்றிருந்தது. வானில் எப்போதும் அரை வட்டம்தான். வானவில் லின் முழு வட்டத்தை எப்போது காண்பேன்?

கண்ணின் கோடி வரை பார்த்து மகிழ்ந்தேன். பனி, மலை, மரம், அருவி, வானவில், சிலையாய் மனி தர்கள், பறவைகள், கொட்டை பொறுக்கும் வித்தியாசமான அணில் கள், நீலவானம், கீழே மலைச் சரிவு, பள்ளத்தாக்கு, சமவெளி, வெளியில் வீடுகள், மேயும் மாடுகள் இப்படி எல்லாம் தெரிந்தன.

மேலே பார்த்தேன். நெடிது வள ரும் மரங்கள். குடையாய் கிளைகள். இலையில் பட்டுத் தெறிக்கும் ஒளிக் கீறு. நீலவானம். குறுக்கும் நெடுக்கு மாய் ஜெட் விமானங்கள் போட்ட பஞ்சுத் திவலை அலைகள். எந்தக் கோடும் போடாமல் பறக்கும் பருந் தின் வட்டங்கள்.

கீழே பார்த்தேன். பார்வைக்கு நடுவே சின்னதாய் கருப்பாய் ஒரு திட்டு. நெஞ்சு தெரிந்தது. தோள்கள் தெரிந்தன. கால்சட்டை தெரிந்தது. பாதம் தெரிந்தது. ஈரம் பட்ட விரல் கள் தெரிந்தன. பாறை தெரிந்தது. பாறையில் வழியும் நீர் தெரிந்தது. பாறையைத் தழுவும் பாசி தெரிந் தது. அருவியின் அலை தெரிந்தது.

அவ்வளவுதான் பார்வைக்குள் பட்டது.

தலையைக் காணவில்லை.

எவ்வளவுதான் முயன்றாலும் தலையைப் பார்க்க முடியவில்லை. தோற்றங்கள் வெளியில் தெரிந்தன. ஒரு பார்வை அதைப் பார்க்கிறது. இப் பார்வையின் தோற்றம் எங்கே? இதற்கு ஆதியும், அந்தமும் உண்டோ? அநாதியாய் பார்த்துக் கொண்டு இருக்கிறதோ?

பார்க்கும் பார்வையில் பார்வை படுமோ?

தலையைக் காணவில்ல!

ரொம்ப, ரொம்ப விசித்திரமாக இருந்தது.

பார்வையில் உலகமே படுகிறது. என் தலையைத் தவிர.

மீண்டும் வானவில்லின் அழகில் சொக்கிப் போனேன்.

தோளில் மிருதுவான ஸ்பரிசம் பட்டது.

பார்வை திரும்பியது.

ராதா நின்றிருந்தாள்.

அவளுக்குத்தான் எத்தனை அழ கான கண்கள். எவ்வளவு மிருதுவான கன்னம். மலை ஏறிய கால்களுக்கு மூக்கு பதில் சொல்லிக் கொண்டு இருந்தது. மெதுவாய் விடைத்து, சுருங்கி மெதுவாய் சிரித்தாள்.

நன்றி என்றேன்.

விழியை உயர்த்தி மீண் டும் சிரித்தாள்.

எதற்கு? என்றாள்.

ஒரு முகம் கொடுத்த தற்கு என்றேன்.

"புரியல" என்றாள்.

இவ்வளவு நேரம் முகமே இல்லை. வெறும் பார் வைதான் இருந்தது. இப்போது ஒரு முகம் கிடைத்திருக்கிறது. அழ கான முகம், என்றேன்.

"அருவிக் கரையில் நின்றாலே கவிதை வரும் போலிருக்கு" என்றாள் ராதா.

நான் பேசுவது கவிதை யாய் இருக்கிறதா? என் றேன்.

"கவிஞர்களுக்குத்தான் தீக்குள் விரலை வைத் தால் நந்தனைத் தீண்டும் இன்பம் தோன்றும். கவிஞர்களுக்கும்தான் இப்படி திடீர் என்று முகம் காணா மல் போகும். வழியில் வரும் பெண் ணின் அழகான முகத்தை தனதாக் கிக்கொள்ளும்" என்றாள்.

இப்போது யார் கவிதையாய் பேசுவது என்றேன்.

சிரித்தாள்.

"அதுசரி, ஏன் திடும்மென்று முகம் காணாமல் போனது?" என் றாள் ராதா.

— நா. கண்ணன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விசித்திரமாக இருக்கிறது, ராதா. உன் கண்ணின் கடைவழி வரை என்ன தெரிகிறது என்று சொல், என்றேன்.

விழியை உருட்டி, உருட்டி அழ காகப் பார்த்தாள். பார்த்ததைச் சொன்னாள். நான் பார்த்ததெல்லா வற்றையும் அவளும் பார்த்தாள். கருப்புமுடி, சுருள், சுருளாய் இருக் கும் முகம் ஒன்று படுவதாகச் சொன் னாள். கூர்மையான பார்வையும், அடர்ந்த புருவமும், நீள மூக்கும் (அதுதான் என் பார்வைக்கு நடுவே கருப்புத் திட்டாய் தெரிந்திருக்கிறது) மண்டிய மீசையும், உதடும், உரோ மம் ஏறிய கன்னமும் தெரிவதாய்ச் சொன்னாள்.

ஆனால், அவள் முகம் காண வில்லை என்றாள்.

அவளுக்கும் தலை போச்சு!

எங்கே போச்சு முகம் என்றேன்?

"ஆம்பளையாய் மாறிப் போச்சு" என்று சிரித்தாள்.

"எனிதிங் ஃபன்? என்ற கேள்வி யுடன் ஜான் வந்து சேர்ந்தான்.

தலை போன கதையைப் பத்தி பேசிக்கொண்டு இருக்கிறோம் என்று ஆங்கிலத்தில் அவனுக்கு பதில் சொன்னேன்.

"யாரோடை தலை போச்சு இப்ப?" என்று புரியாமல் கேட் டான் ஜான்.

"எங்கள் தலைதான்" என்று இரு வரும் சேர்ந்து சொன்னோம்.

"தலை எங்கே போச்சு? அதுதான் தோளுக்கு மேலே இருக்கிறதே" என் றான்.

"உன் தலை கூட தோளுக்கு மேல் தான் இருக்கிறது. ஆனால் நான் பார்க்கும் போது என் தலையைத் தான் காணோம்" என்றேன். அதா வது உன் தலையும், ராதா தலையும் தெரிகிறது என் பார்வைக்கு என் றேன்.

ஜான் மெதுவாக என்னிடம் வந் தான். என் சுட்டு விரலை என் பார் வைக்கு நேராக உயர்த்தி, "இங்கு என்ன இருக்கிறது?" என்றான்.

"ஒன்றுமே இல்லை" என்றேன்.

"ஒன்றுமே இல்லையா? அடே மாங்காய் மடையா. அங்கு உன் தலை இருக்கிறது" என்றான்.

இப்போது நான் அவன் விரலை உயர்த்தி, அவன் செய்தது போல் செய்து காட்டினேன். என்ன தெரிகி றது என்றேன்.

"என் தலை" என்றான்

"பொய்" என்று ராதாவும், நானும் சொன்னோம்.

அவனுக்கு ரொம்ப குழம்பிவிட் டது.

அவசரமாக பையை துளாவி, ஒரு கண்ணாடியை எடுத்தான். முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

ஒரு திருப்தியுடன், என் முன் னால் கண்ணாடியை நீட்டினான். "என்ன தெரிகிறது?" என்றான்.

"அங்கு ஒரு முகம் தெரிகிறது" என்றேன்.

"அதுதான் உன் முகம், வா மேலே போகலாம்" என்றான்.

பனி சூழ்ந்த மலை முகட்டை நோக்கி மெதுவாக நடையைக் கட் டினோம்.

நீ என் கேள்வியை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றேன்.

"விடமாட்டாய் போலிருக்கு! என்ன புரியவில்லை?" என்றான் ஜான்.

முகம் இல்லையென்று சொல்ல வில்லை. உன் முகம் இருக்கிறது. அதிலொரு கண்ணாடிகூட இருக் கிறது. ஆனால் முதல் நிலை அனு பவத்தில் பார்த்தால் தன் முகம் தெரிவதில்லை. ஒரு பார்வைதான் இருக்கிறது. அந்தப் பார்வை எப் போது தோன்றியது? முதல் விழிப்பு எப்போது நடந்தது? என்றேன்.

"நீ ரொம்ப தத்துவம் பேசுகிறாய். பிறக்கும் போதே குழந்தை முக முடன்தான் பிறக்கிறது" என்றான் ஜான்

"நான் இல்லை என்று சொல்ல வில்லையே. நான் பார்க்கும் குழந் தைக்கு முகம் இருக்கிறது. அதுவும் ரொம்ப அழகாகவே ஆனால் குழந் தைக்கு முகம் இருப்பது தெரியுமோ?" என்றேன்.

"அம்மா எடுத்துக் கொஞ்சுவாள். கொஞ்சி உன் முகம் சூரியன், சந்தி ரன்" என்பாள் என்று சொன்னாள் ராதா

"தாத்தா வருவார் உனக்கு அப்ப டியே பாட்டி சாயல்" என்பார் என் றேன்.

"அத்தை வருவாள் உன் முகத் துக்கு அழகே உன் முகக்குழிதான்" என்பாள் என்றாள் ராதா.

"அம்மாவை இப்படித்தான் அவள் அம்மா கொஞ்சியிருப்பாள்" என்றேன்.

"தாத்தாவை இப்படித்தான் அவர் தாத்தா கொஞ்சியிருப்பார்" என்றாள் ராதா.

"அத்தையை இப்படித்தான் அவள் அத்தை கொஞ்சியிருப்பாள்." என்று எங்கள் பாணியிலேயே சொல்லிச் சிரித்தான் ஜான். "சோ வாட்?" என்றான் கூடவே.

இந்த அம்மாவுக்கும், அம்மாவுக் கும் முன்னாடி....

இந்த அத்தைக்கும், அத்தைக்கும் முன்னாடி......

இந்த தாத்தாவுக்கும், தாத்தாவுக் கும் முன்னால் தோன்றிய முதல் ஜீவனுக்கு முகம் இருந்ததோ? அவ ளுக்கு யார் முகம் கொடுத்திருப் பார்? என்றேன்.

கண்ணாடியைப்பார்த்து தானே தெரிந்து கொண்டிருக்கும் என்றான் ஜான்.

கண்ணாடியைப் பார்த்தால் அதிலொரு முகம் தெரியும் ஆனால் அதுதான் "தன்" முகம் அப்படீன்னு எப்படி தெரிஞ்சிருக்கும் என்றேன்.

"நீ என்ன சொல்ல வர?" என் றான் ஜான்.

"முதல் மனுஷியா இருந்தாலும் சரி, அவள்வழி வந்த நூறாவது தலை முறை மனிதனாக இருந்தா லும் சரி, முகம் என்பது பிறர் கொடுத்ததுதான். சுயமாகப் பார்த் தால் தன்னளவில் முகமே கிடை யாது. தலையே கிடையாது" என் றேன்.

"கண்ணாடியைப் பார்த்தா, தலையை சுரண்டினால் உணர்வு இருக்கிறதே. தலை எங்கே போச்சு ஏன்டா இப்படி குழப்பறே" என் றான் ஜான்.

கண்ணாடியைப் பார்த்தால் "அங்கொரு" முகம் இருக்கிறது. தலை யைச் சுரண்டினால் "அங்கொரு" உணர்வு இருக்கிறது. வெளியில் ஒரு முகம் தோன்றுகிறது. வெளியில் ஒரு உணர்வு உதிக்கிறது. அது "என்" தலை என்பது சமூகம் சொன்னது தான் என்றேன்.

உணர்வுடன் கூடவே வந்து கொண்டிருந்த ராதா விளக்கினாள். பார்வையில் எல்லாம் படுகிறது. படுகின்ற பொருளுக்கு பெயர் வைக் கிறான் மனிதன். பெயர் கொடுத்து சிந்தனையில் ஒரு உரு கொடுக்கி றான் மனிதன். நாளாக நாளாக சிந் தனை கொடுத்த உரு அனுபவங்கள் தான்" என்ற நிலையை அடைகிறது. "அனுபவங்கள் கூடக் கூட "அனுப வங்கள்தான்" என்று ஆகிறது. அனு பவம் இல்லாமல் தான் இல்லை. நீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்ணாடியைப் பார்க்கும் போது அது "உன்" முகம் என்று தோன்றுவது உன் முன் அனுபவத்தினால் விளைவது. எந்த அனுபவத்தின் சாயலும் இல்லாமல் உன் பார்வை பார்ப்பதை உள்ளது உள்ளபடி சொன்னால், "அங்கொரு முகம் இருப்பதுதான் நிஜம். அது என் முகம் என்பது அனுபவம் பேசும் பேச்சு பார்வையின் மொழி அல்ல அது" என்று விளக்கினாள் ராதா.

ஜான் ரொம்ப பயந்துவிட்டான். நீங்கள் என் சுயத்தையே அழிக்கப் பார்க்கிறீர்கள். சுயமே இல்லாமல் வாழ, நான் என்ன வாழைப்பழமா என்றான் ஜான்.

எல்லோரும் சிரித்து விட்டோம்.

"வாழைப்பழத்துக்கு கவலை உண்டா என்று தெரியவில்லை" என்றாள் ராதா.

நான் தொடர்ந்தேன். "ஜான் உனக்கு தலையே இல்லையென்று உளவியல் கண்ணோட்டத்தில் வைத்துக் கொண்டால் நடப்பது என்ன?"

"எல்லாம் போச்சு. ஒண்ணுமில்லே" என்றான் ஜான்.

"ஒண்ணுமில்லேயா இல்லை எல்லாம் இருக்கா?" என்றாள் ராதா.

"முகமற்ற உனக்கு, பார்ப்பதெல்லாம் உன்னதுதான். நீ தான் ராதா, நீதான் இந்தப் பனிமலை, நீதான் துள்ளி ஓடும் நீரருவி, நீதான் மரத்திலேறும் அணில் குஞ்சு. எல்லாமே நீதான்" என்றேன்.

பேச்சுக்கு எல்லாம் அழகாகத்தான் இருக்கிறது. நான் உன் மண்டையை ஆராய்ச்சி செய்தால் கண் இருக்கிறது. கண்ணிலிருந்து செல்லும் நரம்புகள் உள்ளன. நீ பார்ப்பதை எல்லாம் பதிவு செய்து பொருள் சொல்ல மூளை இருக்கிறது. நீ உறங்கும்போது கூட நீ மூச்சு முட்டி செத்துப் போகாமல் இருக்க மூளை விழிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு ஆராய்ச்சியும் காட்டுவது என்ன? உனக்குத் தலை இல்லை என்றா? என்றான் ஜான்.

ஆராய்ச்சி பூர்வமான மேலைக் கலாச்சாரத்தின் பிரதிநிதியான ஜானின் பேச்சு ஆச்சரியத்தைத் தரவில்லை.

ரொம்ப நேரம் மௌனமாக நடந்துகொண்டிருந்தோம். அருகிலேயே ஓடிவந்த அருவி விலகிப் போய் விட்டது. காட்டின் ஊடாக நடந்தோம். காடு தாண்டி வெளி வந்தது. மலை தெரிந்தது. மலையின் இடது பக்கத்தில் வெள்ளைக் கோடு இழுத்தாற் போல் ஒரு அருவி விழுந்து கொண்டு இருந்தது. பார்வைக்கு நேராக வேறொரு அருவி பிரிந்து ஐந்தருவியாக அழகு காட்டியது.

நேராக நடந்தோம்.

"உங்கள் ஊர்க்காரர்களெல்லாம் இப்படித்தானா" என்று ஜான் மௌனத்தைக் கலைத்தான்.

நானும், ராதாவும் சிரித்துக் கொண்டோம்.

"எல்லோரும் இப்படியில்லை. ரொம்ப, ரொம்ப சாதாரணம். கடவுள் விட்ட வழியென்று வாழும் ஜனங்கள் வழி காட்ட அவ்வப்போது கடவுளரை உருவாக்கிக் கொள்வார்கள். எல்லோருக்கும் சிலை எடுப்பது, மாலை போட்டு ஆராதிப்பவர்கள். ஒண்ணு, ரெண்டு புத்தர்களும் உண்டு" என்றேன்.

"இந்தியா என்று சொன்னவுடனே மேலை உலகில் மனதில் படுவது உங்களூர் குருதான். ஏன் இந்தியாவில் மட்டும் இத்தனை குருமார்கள்" என்றான் ஜான்.


காயத்திரியின் தொடரும் சேவையில்......

மிகவும் உயர்ந்த தரமுடைய ஓட்டி, ஓரா, விளைமீன், சுறா போன்றவற்றை பாரிசில் நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிக்கின்றோம்

மாதங்கி கறிப்பவுடர் மற்றும் மாதங்கி தயாரிப்புப் பொருட்கள் யாவற்றையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்




NEW GAYATHIRY
Enterprise S.A.R.L
210, Rue du. Fbg. St. Denis,
75010 Paris.
Tel:01 42 09 22 43
Fax: 01 46 07 90 34

வர்த்தகர்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளவும்

SAMUDRA
SEA FOODS

இலண்டனுக்கான இறக்குமதியாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும்:

SPICEWAY
21, 23, Kingston Road,
South Wimbledon,
London SW19 1JX.
Tel: 0181-540 55 26, 0181-540 34 81 Fax: 0181-540 0697

இங்கு மாதங்கி தயாரிப்புக்களும், SAMUDRA கடல் உணவு வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நான்தான் சொன்னேனே. அங்கு அந்தளவு சிந்தனை வறட்சி என்று. யாருமே அங்கு கேள்வி கேட்பதே யில்லை. எல்லோருக்கும் யாராவது வழிகாட்ட வேண்டியுள்ளது. வழி படும் கலாச்சாரத்தில் குருமார்களி டமும், அரசியல் வாதிகளிடமும் தான் அதிகாரம் நிற்கிறது. மக்களின் பலவீனம்தான் அவ்வளவு வெளிப் படையாக தெரிகின்றதே. அதிகாரத் தின் சூட்சுமமே மக்களின் பலவீனம் தானே" என்றேன்.

"நீ ரொம்ப வெறுத்துப் பேசுகி றாய் அதில் உண்மை இருக்கலாம். நல்ல சிந்தனைவாதிகள் அங்கு இல் லையா? இது ஜான்.

"நல்ல சிந்தனைவாதிகள் இருக் கலாம். தன் சிந்தனையை நன்கு அறிந்து கொண்ட மனிதர்கள். எந்த தேசியத்துடனும் சேர்வதில்லை. அவர்கள் நல்ல மனிதர்கள் அவ்வ ளவே. அப்படியொரு சிந்தனைப் பாரம்பரியமும் அங்கு உண்டு" என்று சொல்லி 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற சங்கப் பாடலை மொழிபெயர்த்துச் சொன் னேன்.

"நீ இவ்வளவு நேரம் சொல்ல முயன்ற கருத்தைத்தானே இந்தப் பாடலும் சொல்லுகிறது" என்றான் ஜான்.

உண்மைதான் நாம் வெறும் பார் வையின் சாட்சியாக மட்டும் இருந்து விட்டால் வாழ்வில் எவ்வளவு சந் தோஷம் பார், ஜான் இந்த மலை யும், நதியும் யாருக்கும் சொந்த மில்லை. உனது, எனது என்ற சண் டையில்லை. ஏன் நமக்கு பார்க்கத் தெரியவில்லை. ஜான்?

"அனுபவத்தின் சாயலே படா மல் வெறும் பார்வை மட்டும் இருந் தால் அது சாமத்தியம்தான். நமது பார்வையே அனுபவம் என்ற கண் ணாடி மூலமாகத்தானே நோக்குகி றது." என்றான் ஜான்.

"அதாவது என்னை கொஞ்சம் முன்னால் இந்தியன் என்று சொன் னதுபோல்" என்றேன்.

"என்னையே மடக்குகிறாயே" இது ஜான்.

"உண்மைதானே?" இது நான்.

"உன் தலையற்ற, முகமற்ற கோட் பாட்டின் பலன் என்ன?" என்றான் ஜான்.

"ஜான் அது கோட்பாடே அல்ல. கோட்பாடு என்றாலே சிந்தனை சார்ந்தது என்று பொருள். சிந்தனை யினை எந்தக் கலப்புமில்லாமல் வெறும் பௌதிகமான பார்வை வழியைப்பற்றி பேசினேன். ரொம்ப ரொம்ப எளிமையானது. அது ஏன் புரியமாட்டேன் என்கிறது? நமக்கு எல்லாவற்றையும் குழப்பி, குழப் பியே பார்த்துப் பழகிவிட்டது. என்ன செய்ய!"

"அவன் பலனைக் கேட்கிறான் நீ சொல்கிறாயா? நான் சொல்லவா?" என்றாள் இவ்வளவு நேரம் அமைதி யாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ராதா,

"யார் மூலமாக வருகிறது என் பது இங்கு முக்கியம் இல்லை. என்று உனக்குத் தெரியும். உனக்கு சொல்ல வேண்டும் போல் தோன்றுவதை சொல், ராதா" என்றேன்.

**உண்மைதான் நாம் வெறும் பார்வையின் சாட்சியாக மட்டும் இருந்து விட்டால் வாழ்வில் எவ்வளவு சந்தோஷம் பார், ஜான் இந்த மலையும், நதியும் யாருக்கும் சொந்தமில்லை. உனது, எனது என்ற சண்டையில்லை**

ராதா பேசினாள் "ஜான், உனக் குத் தலையே இல்லையென்றுபார்! நீ பார்க்கும் முகம்தான் உன்னுடை யது. உனக்குத்தான் உண்மையில் முகமே இல்லையே. இப்போது உன் முகம் எது?"

"நீதான்!"

"சபாஷ் இப்போது என்ன நிகழ் கிறது?"

"நான் இல்லை நீ மட்டும்தான் இருக்கிறாய். நான் உன்னுடன் பேசி னாலும் அந்தப் பேச்சு ஏதோ ஒரு வெளியிலிருந்து வருகிறது. அந்தப் பேச்சு என் பார்வையில் படும் உன் முகத்தை நோக்கிப் போகிறது. அதே வெளியில் தென்படும் உன் முகமும் அதற்கு பதிலாக பேசுகிறது. அப் பேச்சு மீண்டும் என் பேச்சு தோன் றிய வெளியில் சென்று சங்கமிக்கி றது. இப்படிப் பார்த்தால் உலகமே ரொம்ப வேடிக்கையாக தெரிகிறது. சிந்தனை, அனுபவம் இல்லாமல் பார்த்தால், பார்வை ஒன்றுதான் கடைசியில் மிஞ்சுகிறது."

"ரொம்ப சரியாகச் சொன்னாய். நீ அப்போது கேட்ட கேள்விக்கு விடை இப்போது வருகிறது. அதா வது நாம் ஆராய்ச்சி செய்யச் செய்ய புதிது, புதிதாய் எதாவது வந்து கொண்டேயிருக்கிறது. அணுவைத்து ளைத்து எத்தனை துகள்களை கண்டுபிடித்தாகிவிட்டது. டெலஸ் கோப்மேல் டெலஸ்கோப் போட்டு எத்தனை தூரம்வானத்தை அளந் தாகிவிட்டது. இந்தத் தோற்றத்திற் கெல்லாம் ஓர் தொடக்கமும் முடி வும் உண்டா? பார்வை இருக்கும் வரை பொருளும் இருக்கும். பார்வை அஸ்தமிக்கும் போது பொருளும் இல்லாமல் போய்விடும்." என்றேன்.

"பூனை கண்ணை மூடிக்கொண் டால், உலகம் இருண்டு போகுமோ?"

"நீ ரொம்ப எளிமைப் படுத்துகி றாய். அறிவியலில் வானைத் தொடும் மேலை விஞ்ஞானம் பார்க்கத் தவ றும் ஒரு கருத்தைச் சொல்கிறேன். அது ஆராயும் மனிதனை சுத்தமாக மறந்துவிட்டு, ஆராயப்படும் பொருளை மட்டுமே கருத்தில் கொள்கிறது. ஆராய்ச்சியாளன் இல்லாமல் ஆராயப்படும் பொருள் எது? ஜான் இருக்கும் வரை ராதா வும், நானும் உண்டு. நம் எல்லோ ருக்கும் பார்வை என்ற ஒன்று இருக் கும் வரை, பார்க்கப்படும் பொருள் உண்டு. எனவே பொருளின் இருப்பை பார்வைதான் தீர்மானிக்கிறது.

"வேடிக்கையாக இருக்கிறது!"

"இன்னொரு வேடிக்கையைப் பார், நீ, நான், குரங்கு, ஆக்டோபஸ் எல்லோருக்கும் ஆழத்தைக் கணக்கி டும் பைனாகுலர் பார்வை உண்டு. ஒரு பந்தை வெறும் வட்டமான கோளமாகப் பார்க்காமல் அதன் ஆழத்தையும் கணக்கில் கொண்டு பார்ப்போம். ஆனால் ஒரு தேனீயோ, பட்டாம்பூச்சியோ அதை ஆயிரம் கண் கொண்டு சிறு சதுரமாகத் தான் பார்க்கும். பார்வையே இல் லாத வௌவால் பந்தில் பட்டுத் தெறிக்கும் ஒலி அலையாக அதை உணரும். அப்படியெனில் உண்மை யில் பந்து என்பது என்ன?

பேச்சு சுவாரசியத்தில் நாங்கள் மலையிறங்கி வந்ததையே உணர வில்லை.

உலகம் பளிச்சென்று இருந்தது.

அது அது இருக்க வேண்டிய இடத்தில் அது, அது இருந்தது. அதுவே அழகாகவும் இருந்தது. ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எமது மக்களுக்காக

அயராத சேவையில்...

# மக்கள் கடை

**மக்கள் கடை**
KUPER GASSE -11,
7000 CHUR.
Tel: 081 25 23 305

**மக்கள் கடை**
BAHNOHF PASAGE,
4500 SOLOTHURN.
Tel: 032 6222135

**மக்கள் கடை**
SEILER Str-4,
3013 BERN.
Tel: 031 3822720

**மக்கள் கடை**
HEINIRICH Str-85,
8005 ZURICH.
Tel: 01 2717374

துயரப்படும் மக்களுக்கு துணைபோவோம்

அதற்காகவே அழைக்கப்படுகிறீர்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பயம் - மதம் x பகுத்தறிவு - பரிணாமம்

"உலகமும் உயிரினமும் மனிதனும் கடவுளின் படைப்பு" என்பது கடவுள் கோட்பாட்டு மதங்கள் எல்லாவற்றினதும் கருத்து, ஆனால் "பல கோடி ஆண்டுகள் பரிணாம வளர்ச்சி பெற்று உயிரினங்கள் தோன்றின" என்பது அறிவியல் முடிவு. "ஏன்" என்ற கேள்விக்கு சிந்தனை, பகுத்தறிவு, ஆராய்ச்சி போன்ற வழிகள் மூலம் பெற்ற விடை அறிவியல் முடிவுக்கும், "அப்படித்தான்" என்று அறியாமையின் விளைவான நம்பிக்கையில் உண்டான விடை மதக் கருத்துக்கும் அடிப்படைகள் ஆகின்றன.

மனிதக் குரங்கிலிருந்து வந்த காட்டு மனிதன் வேட்டையாடுவதும், உணவைத் தேடுவதுமாக வாழ்ந்து கொண்டிருந்தான். திறமையும், திட்டமிடுதலும் வேட்டையாடுவதற்கு வேண்டுவனவாக இருந்தன. அவன் தனது அனுபவத்தில் பெற்ற அறிவினால் ஆயுதங்களையும், சிறு கருவிகளையும் கண்டறிந்தான். அவன் சிறு சிறுகுழுக்களாக அமைந்து வேட்டையாடிய பின்னர், உணவை குழுவினருடன் பகிர்ந்துகொண்டான். இவ்வாறு கூட்டு வாழ்வாகத் தொடங்கிய வாழ்வு காலப் போக்கில் சமூக வாழ்வாக மாறியது. கூட்டு வாழ்க்கையின் பொருட்டு மனிதர்களுக்கு இடையில் கருத்து பரிமாற்றம் இடம்பெற்றது. காலம் செல்லச் செல்ல கருத்து பரிமாற்றங்களினால் கூட்டு வாழ்க்கை வலுப்பட்டது. வேட்டையாடுதலைத் தொடர்ந்து பயிர்த் தொழில் நடைமுறைக்கு வந்தது.

மனிதன் இவ்வாறு வளர்ச்சி அடைந்து வாழத் தொடங்கியதும் தனக்கு ஆச்சரியமாகவும், புதுமையாகவும் தோன்றியவற்றை எல்லாம் தனக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட சக்திகளால் உண்டாக்கப் பட்டவை என்று நம்பினான். மனிதன் மீது இயற்கை செலுத்திய ஆதிக்கம் அவனது உணர்வில் பயத்தை உண்டாக்கியது. இவ்வாறு உண்டான நம்பிக்க்க, பயம் போன்றவை மனிதனது உணர்வில் ஏதோ ஓர் சக்தி- கடவுள் பற்றிய கற்பனை எண்ணங்களைத் தோற்றுவித்து விட்டன. சூரியன், மழை, காற்று, நெருப்பு முதலானவற்றைக் கடவுள் எனக் கருதினான். இயற்கையின் ஆற்றல் மிகு வெளிப்பாடுகளின் போது துணிவிழந்து துணை அற்றவன் ஆனான். வழக்கத்துக்கு மாறான புயலால் அவன் வாழ்வு மற்றும் உடைமைகளின் அழிவுகளைக் கண்டபோது- காணும்போது காற்று, மழை முதலியவற்றை கடவுளின் சீற்றத்தால், வெறுப்பால் விளைந்த விளைவுகள் என நினைத்தான்.

எனவே, அவன் தன்னைத் தானே கடவுளை திருப்திப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுத்திக் கொண்டான். வழிபாடுகள் தோன்றின. பலியீடுகள், படையல்கள், வேண்டுதல்களும் தோன்றின. இவ்வாறுதான் அறிவின் பலவீனத்தால், அறியாமையால் காரண காரியம் தெரியாதலால் எழுந்த பயத்தின் அடிப்படையில் கடவுள் நம்பிக்கை உருவானது. கடவுள் நம்பிக்கையினால் மதம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறான எண்ணங்களே பின்னர் உண்டாக்கப்பட்ட மதக் கோட்பாடுகளுக்கு முன்னோடியாக அமைந்தன. மனிதன் தன்னால் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகளில் அவன் இயற்கைக்கு மேலான சக்திகளிடம் திரும்பினான். தன் விருப்பு- வெறுப்பு முயற்சிகளில், சிலவேளைகளில் சில இயலாமைகளின் போது தன் உறுதியான எண்ணத்தாலும், எண்ண ஒருமைப்பாட்டாலும் "முடிக்க முடியும்" என்ற தீர்மானத்திற்கு வந்தான். மனிதன் தன் வாழ்வின் முக்கிய நிலை மாற்றங்களான பிறப்பு, பருவமடைதல், திருமணம், இறப்பு ஆகியவை கடவுளின் விருப்பத்தால் நிகழ்பவை எனவும் நினைத்தான். எனவே, கடவுளது அனைத்து செயல்களும் தூய்மையாக கொண்டாடப்பட வேண்டும் என எண்ணினான். இப்படியான எண்ணங்கள், கருத்துக்களின் விளைவான கடவுள் நம்பிக்கையும், மதக்கோட்பாடுகளும் இயற்கையை விளங்கிக் கொள்ளாமல் தன்னில் நம்பிக்கை இல்லாமல் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளின் மீதுள்ள நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டவை.



இவ்வாறாகத் தோன்றிய மதத்தின் பெயரால் சிலர் சமூகத்தில் மதிப்பும், பெருமையும் பெற்று தங்களை வளர்த்துக் கொண்டார்கள். இதனால் மனிதனை சுரண்டி வாழும் சுகபோக வாழ்வு அந்த சிலருக்குக் கிடைக்கப்பெற்றது. இக் கொள்கைகளை ஆதரிக்கின்ற கூட்டம் பெருகியதனால் சுரண்டி ருசி கண்ட வர்க்கம் இவற்றைப் பேணிக்காத்து வந்தன. இதனால் மதம் சமூகத்தில் வலிமையான ஆதரவையும், ஆதாரத்தையும் பெற்றது. இவ்வர்க்கத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னர் மடலாயத் தலைவர்க ளாகவும், மதத் தலைவர்க ளாகவும் ஆனார்கள். இத் தலைவர்கள் சமூகத்தில் செல் வாக்கு பெற்றிருந்தமையால் அரசியலில் ஈடுபடவும், அரசு களைத் தம் வசப்படுத்தவும் வலிமை பெற்றிருந்தார்கள். இன்னும் இவ்வாறான நிகழ் வுகள் பரவலாக உலகெங்கி லும் நடந்து கொண்டிருக் கின்றன.

மனிதன் தனது ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒவ்வொரு கடவுள் இருக்கிறார் என நினைத்து பல கடவுள்களை வணங்கினான். மடாலயத் தலைவர்களும், மதத் தலை வர்களும் தங்கள் அபிப்பிரா யங்கள், சுயநலங்கள் காரண மாகவும் கடவுள்களுக்குள் பிரிவுகளை உண்டாக்கினார் கள். கடவுள் மனிதனைப் படைத் தார் என்று கூறிக்கொண்டு மனிதன் கடவுள்களைப் படைப்பது முற்றுப் பெறவில்லை. காட்டு மனிதனை தேவை கூட்டு மனிதன் ஆக்கியது. கூட்டு மனிதனை சிந்தனை, பகுத் தறிவு, துணிவு ஆகியன விஞ்ஞான மனிதன் ஆக்கின. மனிதனின் முன் னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும் விஞ்ஞான அறிவின் பங்கு அளப்பரி யது. விஞ்ஞானம் வளர்ச்சி அடை யாத நிலையில் மதங்கள் போன்ற சமுதாய இயக்கங்கள் இயற்கை அமைப்புக்களை நிகழ்ச்சிகளை- அதாவது உலகம், உயிர் தோன்றி யது பற்றி தன்னுடைய வளர்ச்சிக்கு சாதகமாக பல கற்பனைகளைப் பிறப்பித்து விட்டன. இதனால் அறி வுக்கு ஒவ்வாத, விஞ்ஞானத்திற்கு எதிரான, மனித வாழ்க்கைக்கு முன் னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற எத்தனையோ மூடப்பழக்க வழக் கங்கள், குருட்டு நம்பிக்கைச் செயல் கள், நம்முடைய அறிவு, ஆராய்ச்சி, பணம், நேரம், முயற்சி, முற்போக்கு வளர்ச்சி முதலியவற்றை எல்லாம் அடியோடு கெடுத்துவிடுகின்றன.

உலக வரலாற்றில் மதங்களின் தோற்றத்தை நோக்கும் போது, பழைய மதங்களின் மறு மலர்ச்சியா கவே புதிய மதங்கள் தோன்றிய தைப் பார்க்கலாம். மேலும், மனிதர் களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து - அபிப்பிராய வேறுபாடுகளினால் மதங்களில் பல பிரிவுகள் ஏற்பட லாயின. ஒவ்வொரு மதக்காரனும் தன் மதம் மூலமாகத்தான் மக்கள் முழுவதும் மோட்சத்துக்குப் போக முடியும் என்றும், தன்தன் மதத் தலைவர்தான் கடவுள் மகன், கட வுள் தூதன், கடவுள் அவதாரம் என்றும் அவரவர்கள் சொன்னவை கள் எல்லாம் கடவுளால் சொல்லப் பட்டவைகள்தான் என்றும் சொல் லித் திரிகின்றன. இவர்களில் யார் உண்மையானவர்களாக இருக்க முடி யும் என்று கண்டு பிடிக்க முடிவ தில்லை. ஒவ்வொரு மதக்காரனும் அவனவன் மதத்தை நம்பாதவனுக்கு பாவம் என்றும், நரகம் என்றும், மோட்சம் இல்லை என்றும் சொல லக் கேட்கிறோம். மனிதனாகப்



**வாழ்க்கையில் இருந்துவரும் பழக்கவழக்கங்கள், மூட பக்தி, குருட்டு நம்பிக்கைகள் போன்றவைகள் எல்லாம் மதம், கடவுள், பாவ – புண்ணியம், மோட்ச – நரகம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே நடைபெற்று வருகின்றன**

பிறந்தவன் இந்த மதங்க[...] காக எத்தனை நரகத்திற்[...] போய் வருவது?

மக்களின் நலத்திற்காக ஒ[...] கத்தைப் போதிப்பதற்க[...] வும், உலகத்தில் நியாயத்[...] நிலைநாட்டவும் மதம் [...] வானதாகவும், அவற்றி[...] கடவுள் ஒருவர் இரு[...] வேண்டும் எனவும் செ[...] லப்படுகிறது. பல இன[...] பான, அழகான, செல்வ[...] கான வார்த்தைகளை எ[...] துக் காட்டுகிறார்கள். [...] வாதிகள் கூறுவது போ[...] சொல்கிற ஒழுக்க வி[...] ளின்படி யார் ஒழுகுகிற[...] கள்? கடவுள் சொன்னப[...] மதக் கோட்பாடுகள்படி ய[...] நடந்து கொள்கிறார்க[...] மதங்களைப் போதிக்கிற[...] களாவது அவர்கள் கூற[...] ஒழுக்க விதிகள், கட்டுப்பாடுகளி[...] படி வாழ்ந்திருக்கிறார்களா? 'அன்[...] சிவம்' என்பவர்களும், 'ஒரு கன்ன[...] தில் அடித்தால் மறு கன்னத்[...] காட்டு' என்கிறவர்களும் 'அன்[...] கடவுள்' என்று சொல்பவர்களு[...] 'கடவுள் இல்லை' என்று சொன்[...] தும் தன்னை இல்லை என்[...] சொன்ன மாதிரியான கோபத்தி[...] "ஊருக்கு உபதேசம் உனக்கில்லை[...] யடி பெண்டாட்டி" என்பது போ[...] சீறாமல், ஆத்திரப்படாமல் இருக்[...] றார்களா? "ஒரு மனிதனின் நல்[...] பண்புகள் அவன் கொண்டுள்[...] மத நம்பிக்கையின் அளவுக்கு எதி[...] விகிதத்தில் மாறும்" தத்துவ மே[...] பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் கூறிய[...] நடைமுறையில் பலரிடம் காண[...] கூடியதே.

வாழ்க்கையில் இருந்துவரு[...] பழக்கவழக்கங்கள், மூட பக்[...] குருட்டு நம்பிக்கைகள் போன்றவை[...] கள் எல்லாம் மதம், கடவுள், பாவ [...] புண்ணியம், மோட்ச - நரகம் என்[...] வற்றை ஆதாரமாகக் கொண்டே நடைபெற்று வருகின்றன. எந்த ஒ[...] காலத்திலும் எவ்வளவுக்கெவ்வள[...] மத உணர்ச்சி அதிக தீவிரமாகவு[...] மதத்தில் மக்களுடைய பிடிவா[...] மான நம்பிக்கை அதிகமாகவும் இரு[...] கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உ[...] கில் கொடுமையும் மிகவும் மோச[...] மான நிலையும் இருந்திருக்கின்றன[...] இதற்கது மதக் கலவரங்களைக் கூற[...]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அம்மை போடும் நோய்கள் வைரசுகளால் வரும் தொற்று நோய்கள் என அறிகிறபோது அம்மனுக்கு செய்யும் படையல்-பொங்கல் குறைந்துவிட்டன. பூமி, சூரியன் அவற்றின் இயக்கம், அதன் கால அளவுகளைக் கண்டுபிடித்தது தெரியவந்த பின்னர் சூரியன் கடவுளும் இல்லை. சூரியனை இராகு பாம்பு கடிப்பதில்லை எனவும் ஒரு தெளிவு ஏற்பட்டது.**



ம். மதக் கலவரங்கள் இடம்பெறும் ாது இழக்கப்பட்ட உயிர்களின் ண்ணிக்கையும், அழிக்கப்பட்ட ாத்துக்களின் அளவுகளும் மனித க்கு மதவெறி வந்தால் மனிதத் ாமைக்கும் மனித உயிருக்கும் ாடுக்கும் மதிப்பு எவ்வளவு என் ு விளங்கும். "பக்தி வந்தால் ந்தி போய் விடும், புத்தி வந்தால் ந்தி போய் விடும்" என பகுத்தறிவு லவன் தந்தை பெரியார் சொன் து எவ்வளவு உண்மை!

ஒரு காலத்தில் மதத் தலைவர் ர சொல்வதுதான் வேதம், அவர் ர கூறும் வேதம்தான் அறிவியல் ன்றிருந்தது. ஆனால், காலப்போக் ் மதத்தலைவர்களின் கற்பனைக் ட்டுப்பாட்டுக் கதைகள் துணி ான சில சிந்தனையாளர்களால் பாய்யாக்கப்பட்டன. பூமி தட்டை ானது என பைபிளில் சொல்லப் டுகின்றது. ஆனால், பூமி உருண்டை ானது, பூமி சூரியனை சுற்றி ருகிறது என்று கோபெர் ிக்கசுக்கும் பிறகு வாதிட்ட லியோவுக்கு வயதான கிழ ர் என்றும் இரக்கப்படாமல் றைத்தண்டனை வழங்கியது ங்குயிஸிஸன் (Inguisition) ருச்சபை.

மனிதனின் உலகத் தோற் த்திற்கும், நடப்பிற்கும் கார ாம் கண்டு பிடிக்க முடியாத லையில் கடவுள் என்றும், க்தி என்றும், கடவுள் செயல் ன்றும் நினைத்துக் கொள்வ ம், அவற்றிற்கு காரணகாரி ம் தோன்றிய பின்பு அந்த னைப்பு கொஞ்சம் கொஞ்ச ாக மாறி வரும் நிலை இக் ாலத்தில் ஏற்பட்டுள்ளது. காப்பளிப்பான், சின்னமுத்து நாய்கள் அம்மன் கோபிப்ப னால் வரும் நோய்கள் என் ம், சூரியக் கிரகணம் சூரி னை விழுங்குவது என்றும், பண்களுக்கு மாதவிலக்கு ருவது கடவுளின் சினத் ால் என்றெல்லாம் பல ாதிரியான நம்பிக்கை வைத் ருந்தார்கள். (இன்னும் அவ் ாறு நம்பி வருபவர்களும் ண்டு).

அம்மை போடும் நோய்கள் வைரசுகளால் வரும் தொற்று நோய்கள் என அறிகிறபோது அம்மனுக்கு செய்யும் படையல்-பொங்கல் குறைந்து விட்டன. பூமி, சூரியன் அவற்றின் இயக்கம், அதன் கால அளவுகளைக் கண்டுபிடித்தது தெரியவந்த பின்னர் சூரியன் கடவுளும் இல்லை. சூரியனை இராகு பாம்பு கடிப்பதில்லை எனவும் ஒரு தெளிவு ஏற்பட்டது. மாதவிலக்கானது பெண்கள் பருவமடைந்த பின், இரு சூலகங்களிருந்தும் ஒன்றுவிட்ட 28 நாட்களுக்கு ஒரு முறை விடும் சூல், கருக்கட்டலுக்கு உட்படாததால் அச்சூலும் அதன் கூட காணப்பட்ட பகுதியிலிருந்து சில கலங்களும் சிதைவடைந்து இரத்தத்துடன் வெளியேறுகிறது. இதனால் மாதவிலக்கு ஏற்படுகிறது என்பதை விளங்கிக் கொண்ட பின், கடவுள் வெறுப்பல்ல- அது பெண்களுக்கு இயற்கையானது என்பதை உணர்ந்து கொள்ளப்பட்டது. அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர கடவுள் உணர்ச்சி குறைந்து கொண்டே போகும்.

எதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். எனவே, அண்டத்திற்கும் ஒரு கர்த்தா இருக்கவேண்டும். அந்தக் கர்த்தாவே கடவுள் என்றும், கடவுள் எல்லாவற்றுக்கும் மேலான சக்தி என்றும் பல காலமாக பரவலாக காரணம் காட்டப்பட்டு வருகிறது. உலகத்தில் உள்ள ஒவ்வொன்றும் இந்த உலகில் நாம் வாழ்வதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருக்கிறது எனும் அமைப்புத் திட்டவாதத்தையும் மதவாதிக்காரர்களும், கடவுள் நம்பிக்கைக்காரர்களும் வாதிடுகிறார்கள். இந்த வாதம் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளவே மூக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது போல் வேடிக்கையானது. உயிரினங்களுக்கு ஏற்றதாக இடத்தில் நிலமைகள் அமைவதில்லை. ஆனால், உயிரினங்கள் இடத்தின் நிலமைக்கு தக்கவாறு வளருகின்றன. உயிரினங்கள் அவை வாழும் இடத்திற்கேற்ப உடலமைப்பு பெற்றிருக்கின்றன.


இந்த அண்டத்தில் பெருஞ் சக்திகளாக அணுக்கருச்சக்தி (Nuclear Energy), ஈர்ப்புச்சக்தி (Gravitional Energy), மின்காந்த சக்தி (Electro Magnectic Energy), கதிரியக்கச் சக்தி (Radio Activity), என்பவற்றை விஞ்ஞானத்தில் குறிப்பிடுவர். மேலும், பொருளின் நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





2044-ம் ஆண்டில் செவ்வாய்க் கிரகம் இப்படி இருக்கும் என ஒரு கற்பனை

யைப் பொறுத்து இயக்கப் பண்புச் சக்தி (Kinetic Energy) யாகவும், நிலைப் பண்புச் சக்தியாகவும் (Statical Energy) ஒவ்வொரு வகையில், ஒவ்வொரு நிலையில் - ஒவ்வொரு வடிவில் ஒவ்வொரு சக்தியும் செயற்படுகின்றன. படைப்பு என்பது இன்மையிலிருந்து உண்டாக்கப்படுதல் என்ற பொருளை உடையது; ஆனால் இல்லாத ஒன்றிலிருந்து எதுவும் உண்டாக்க இயலாது என்றும், உள்ள பொருளிலிருந்தே எதுவும் காலப்போக்கில் உருமாறி உருமலர்ச்சி (Evolution) பெற்றுத் தோற்றம் அளிக்கும் என்பதே அறிவியல். சாரல்ஸ் டாவினின் பரிணாமக் கொள்கையின்படி ஒரு கல உயிர் கால ஓட்டத்தில் பல கலமுள்ள உயிராகிப் பெருகி வளர்ந்து மென்மேலும் உயர்ந்த நிலைகளுக்கு மாறிக் கடைசியில் மனித உருவம் தோன்றியுள்ளது.

சுமார் 1500 கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த மாபெரும் பெருவெடிப்பின் (Big Bang) காரணமாகப் இப் பேரண்டம் (Universe) தோன்றியது. எங்கும் பரவியிருந்த நைதரசன் நெருப்புக்கோளமாக ஆகி பல இலட்சக்கணக்கான கிலோ மீற்றர் விட்டம் கொண்டதாக அமைந்து வெப்பம் தாங்க முடியாமல் பேரொலியுடன் வெடித்துச் சிதறியது. வெடித்துச் சிதறிய துண்டங்கள் அண்டங்கள் (Galaxy) ஆகின. இவ்வண்டங்கள் நட்சத்திரங்களாகவும், நட்சத்திரக் கூட்டமாகவும் ஆகின. சூரியன் 5500 பாகை(c) (சதம அளவு) வெப்ப நிலை உடைய ஒரு நட்சத்திரமே. சூரியனை விட பல மடங்கு பெரிய நட்சத்திரங்களாக அந்தரேல் (Antares), பெரெல்கூஸ் (Betelgeuse), ஆர்க்துருஸ் (Arcturus) ஆகியன உள்ளன.

460 கோடி ஆண்டுகளுக்கு முன் நட்சத்திரங்களுக்கு இடையிலான வாயுவும் தூசியும் சுருங்கி, செறிந்து, இயக்க விளைவினால் பூமி தோன்றியது. "பிரம்மா பூமியைப் படைத்தார்" என்றும், ஆதி நிலை தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்றும் சொல்லப்பட்டும், நம்பப்பட்டும் வருபவை பொய்யாகின்றன. பூமியின் போர்வையான வளி மண்டலத்தில் நைதரசன், அமோனியா, மீதேன், நீராவி முதலான மூலக்கூறுகள் ஓயாது பெய்த பெருமழையின் வாயிலாக புவியின் பரப்பில் இருந்த கடல்களில் கரை கலந்தன. இவ்வாறு கடலில் கரை மூலக்கூறுகள் சூரியவெப்பம், மி னல் புற ஊதா கதிர் வீச்சு மு யவற்றால் இராசயனதாக்கத்தி உள்ளாகி, அவற்றிலிருந்து அமினே அமிலங்களும், அமினோ அமி களிலிருந்து புரதங்களும் உருவா அவை பின் கலவுருவாகி (Prot lasm) காலப்போக்கில் ஒரு ச (Monocell) உயிர்கள் ஆகின. உயி னங்களின் உடலமைப்பியல்- தொ லியல் அடிப்படை அலகு கலம் (C ஆகும். கலங்களில் சுவாசம் நிக வதினால் பல இரசாயனத் தாக்க கள் கலங்களில் நடைபெறுகின்ற தொடரும் இரசாயனத் தாக்கங் ளால் உயிரினங்கள் வாழுகின்ற வளருகின்றன; பெருகுகின்றன.

எளிமையான அமைப்புட தோன்றிய உயிரினங்களில் படிப்ப யாக ஏற்பட்ட மாற்றங்களின் விளை வாகவே புதிய உயிரினங்கள் தோ றியுள்ளன; தற்போது காணப்ப கின்ற உயிரினங்கள் பல தொடக் காலத்தில் இருந்திருக்கவில்லை. இவை யெல்லாம் காலப்போக்கில் பரிணா வளர்ச்சியால் உருவானவையே. ப ணாம வளர்ச்சியின் உச்சநிலை மனிதன்.

**–ச. சச்சிதானந்த**

## இன உணர்வு

நாதசுர நதியில் நீராட ரசிகர் கூட்டம் அலைமோதும். கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருக்க, ஒவ்வொருவரும் அந்தந்த ராகங்களின் பெயர்களைத் தமக்குள் பரிமாறிக்கொள்வார்கள் —

"இது கல்யாணி!"
"இது காம்போதி!"
"இது சிந்து பைரவி!"

இவ்விதமாய் நடந்தது ஒரு காலம்.

இப்போதோ—

வானத்தில் விமானங்களின் இரைச்சல் கேட்டால் போதும் நமது சிறார்கள் ஆரம்பித்து விடுவார்கள்;


"இது அவ்ரோ!"
"இது சகடை!"
"இது ஹெலி!"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ுலம்பெயர் நாடுகளில் மிழ்மொழி தாய்மொழி....!



## கற்பித்தலுக்கான சில முன்மொழிவுகள்

மல்லீஸ்வரி ஆதவன்

புலம்பெயர் நாடுகளில் தாய்
மொழிக் கல்வியின் தேவை
ன்ன? என் பிள்ளை ஏன் தமி
ழப் படிக்க வேண்டும்? தமிழ்
டித்தால் எதிர்காலத்தில் இங்கு
வலை கிடைக்குமா? போன்ற பல
கள்விகள் பெற்றோரால் இன்று
கட்கப்பட்டு வருகின்றன. அது
ட்டுமல்லாமல் இக் கேள்விகளுக்கு
ரமே விடையையும் தேடி எடுத்து,
ன் பிள்ளைக்கு தாய்மொழிக்
ல்வி தேவையில்லையென்று முடி
வடுத்த தமிழ் பெற்றோரும் எத்த
னயோ பேர் இருக்கின்றனர். எமக்
கன ஒரு நாடு வேண்டும், அதில்
ம் சுதந்திரமாக வாழ வேண்டும்
ன்ற உயரிய நோக்கத்துக்காகத்
னே தாய் நாட்டில் எத்தனையோ
வன்கள் தம் உயிரைப் பணயம்
வத்துப் போராடிக் கொண்டிருக்

கிறார்கள். எங்கள் எதிர்கால சந்ததியினராவது தாயக மண்ணில் சுதந்திரமாக இருக்கட்டும் என்ற தூய்மையான நோக்குடனேயே தங்கள் உயிரைத் தூசாக மதித்து போர் முனையில் நிற்கிறார்கள். இந்த தியாகத்தை, நல்லெண்ணத்தை புரியாத பெரும்பாலான தமிழ் பெற்றோரால் புலம் பெயர்ந்து வாழும் எமது சிறார்களின் தாய் நாட்டுச் சிந்தனைகள், தமிழ் மொழிப்பற்று என்பன மழுங்கடிக்கப்படும் ஒரு இக்கட்டான நிலைமை இன்று ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந் நிலைமையை மேலும் வளர விட்டால் எமது போராளிகளின் உயிர்த் தியாகங்களுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். இதனை தடுத்தாட்கொள்ள வேண்டியது தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களது தலையாய கடமையாகும்.

இக் கடமையை சரியான முறையில் நிறைவேற்ற ஆசிரியர்கள் என்ன செய்யலாம் என்பதற்கான சில ஆலோசனைகளை இங்கு நான் வழங்க விரும்புகிறேன்.

பெற்றோரின் பூரண ஒத்துழைப்பை பெறுவதற்கான செயற்பாடுகள்.

புலம்பெயர்நாடுகளின் கல்வித் திட்டத்திற்கமைய தமிழ் ஆசிரியர்கள் பயிற்சிபெற ஊக்குவிப்பு.

தாய் மொழிக்கல்வியின் மூலம் எமது சிறார்களின் தாய் நாட்டுச் சிந்தனையை வளர்த்தல்.

பெற்றாரின் பூரண ஒத்துழைப்பைப் பெறுவதற்கான செயற்பாடுகள்.

ஒரு பிள்ளையின் கல்வி சீரான முறையில் அமைய வேண்டுமாயின் அதற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக மிக முக்கியம். இதனாலேயே ஐரோப்பிய நாடுகளின் கல்வித்திட்டங்களில் பெற்றோர் - ஆசிரியர் ஒத்துழைப்பு என்ற அம்சம் கொட்டை எழுத்தில் எழுதப்படுகிறது. டியூசன் மாஸ்டரிடம் அல்லது டியுட்டரிகளிடம் தம் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்துவிட்டு 'ஹாயாக'த் திரிந்த பெரும்பாலான தமிழ் பெற்றோருக்கு, 'கல்வி விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குதல்' என்பது விளங்காமல் இருப்பது நியாயமே. இப்படி இருப்பவர்கள் ஒருவகையினர். மற்ற வகையினர் தம் பிள்ளைகளின் வகுப்பாசிரியர் அல்லது மற்ற பாட ஆசிரியர்களுக்கு வழங்கும் கொஞ்ச ஒத்துழைப்பையாவது தமிழ் ஆசிரியருக்கு வழங்காமல் இருப்பவர்கள். மூன்றாம் வகையினர் தமிழ் மொழியே தன் பிள்ளைக்குத் தேவையில்லையென இருப்பவர்கள் இம் மூவகைப் பெற்றோருக்கும் தெளிவான விளக்கம் கொடுக்கப்படவேண்டியது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. இதற்கான சில வேலைத்திட்டங்களை அமைத்து அதன் மூலம் பெற்றோரின் கவனத்தை ஈர்த்தெடுக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ் வேலைத் திட்டங்களில் கருத்தரங்கங்கள், கலந்துரையாடல்கள் வைத்தல் சிறந்த வேலைத்திட்டமாக அமையும். இதற்கு கீழ்க் குறிப்பிடும் முக்கியமான அம்சங்களை மையமாகக் கொள்ளலாம்.

ஒரு குழந்தை தான் யார் என்பதையும், தன் வரலாற்றுப் பின்னணி எது என்பது பற்றியும் அறிந்திருத்தலின் முக்கியத்துவம்.

இரு மொழிபேசும் இரு கலாச்சாரத்துக்கு உட்பட்டவர்களே எமது சிறார்கள் என்பதையும், அதை எங்கள் பிள்ளைகள் அறிந்திருத்தல் எவ்வளவு முக்கியத்துவம் என்பது பற்றியும் விளக்கம்.

எமது பிள்ளைகள் தம் பெற்றோருடனும் தாய் நாட்டில் வசிக்கும் உறவினர்களுடனும் தொடர்புகொள்ளக்கூடிய உணர்வுபூர்வமான ஊடகமாக தாய்மொழிக்கல்வி எப்படி அமைகிறது என்பதையும் தெளிவாக்கலாம்.

தாய்மொழிக்கல்வியில் தேர்ந்த ஒரு பிள்ளையாலேயே பிற மொழிகளிலும் புலமைத்துவம் பெறலாம் என்ற உளவியல் ரீதியான காரணத்தையும் விளக்கலாம்.

'பெற்றோரின் ஒத்துழைப்பு' என்ற தலைப்பில் அதன் முக்கியத்துவத்தையும் எந்த வகையான ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் விளக்கலாம்.

பெற்றோரை மேலும் ஊக்குவிப்பதற்காக கண்காட்சிகள் வைப்பது பற்றியும், பெற்றோர் மாணவர் ஆசிரியர்கள் சேர்ந்து செல்லக்கூடிய சுற்றுலாக்கள் பற்றியும் கலந்துரையாடலாம்.

இப்படிப்பட்ட விடயங்களைப் பெற்றோருடன் கலந்தாலோசிப்பதனால் அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அத்துடன் தமிழ்மொழி கற்பித்தல் சம்பந்தமாக எமது பெற்றோர் மத்தியில் ஒரு உடன்பாடான கருத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.


புலம்பெயர் நாடுகளின் கல்வித் திட்டத்துக்கமைய தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெற ஊக்குவிப்பு

புலம்பெயர் நாடுகளில் தாய்மொழி கற்பிப்பது மிகவும் சிரமமான விடயம் என்பது நான் கண்ட அனுபவம். கற்பிக்கும் ஆசிரியர்களின் திறமை வகுப்புக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கையில் அறியக்கூடியதாக இருக்கும். ஏனென்றால் தாய்மொழிக்கல்வி கட்டாய பாடமாக இல்லை. புலம்பெயர் நாடுகளுக்குரிய மொழியையே பெரும்பாலான நேரங்களில் கேட்டும், கதைத்தும் பழக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு, தமிழ் மொழி கற்றல் என்பது கஷ்டமான காரியமாகவே படுகிறது. அதை இலகுவாக்கி, மாணவர்களுக்கு விருப்பத்தையும் ஆர்வத்தையும் உண்டாக்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு.

அதனாலேயே ஆசிரியர் திட்டமிட்ட முறையில் செயல்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். அதாவது மற்றைய மொழிகளைக் கற்பிக்கும் முறைக்கும், தாய்மொழியைக் கற்பிக்கும் முறைக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. அதனாலேயே இங்குள்ள மொழிக்கற்பித்தலுக்கான பாடத்திட்டத்திற்கமைய தமிழ் கற்பித்தலுக்கான பாடத்திட்டமும் அமைய வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். இவ்விடயத்தையிட்டு எனது சில கருத்துக்களை கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் தான் கற்பிக்கும் நாட்டின் மொழியிலும் ஓரளவுக்கு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் மாணவர்களுக்கு சில தமிழ் சொற்களின் கருத்துக்களை தமிழில் விளங்கப்படுத்துவதை விட அவர்களுக்குக் கூடுதலான பரிச்சயமான மொழியில் சொல்வது மனதில் இலகுவாகப் பதியும் என்பது நான் கண்ட உண்மை. எனவேதான் ஆசிரியர்கள் அந்தந்த நாட்டு மொழியையும் தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியமாகும். இதை விடுத்து 'தமிழ் தானே படிப்பிக்கிறேன்; தமிழில் மட்டுமே விளக்கம் கொடுப்பேன்' என ஆசிரியர்கள் பிடிவாதம் பிடித்தால், மாணவர்களின் வருகை நிச்சயம் குறையும் என்பது என் உறுதியான கணிப்பு.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் நாட்டுக் கல்வித்திட்டம், கற்பிக்கும் முறை என்பவற்றை அறிந்திருத்தலும் மிக மிக முக்கியம். இந்நாடுகளில் நடக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதன் மூலம் தமிழ் ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளலாம். சில புலம்பெயர் நாடுகளில்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வசதிகள் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட நாடுகளில் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் தங்களுக்குள்ளேயே தொடர்புகளை வளர்த்துக் கொள்ளலாம். தமிழ் ஆசிரியர் சங்கங்களை அமைத்து அவற்றின் உதவியுடன் பயிற்சி வகுப்புகள், பொதுவான பாடத்திட்டம் உருவாக்கல், பொதுவான பரீட்சைகள் வைத்தல் போன்ற காரியங்களில் ஈடுபடலாம். இப்படியான செயற்பாடுகளை தமிழ் ஆசிரியர்கள் தாம் வாழும் நாடுகளில் செயல்படுத்தினால் தமிழ் கற்பித்தல் என்பது சிறப்பான முறையில் அமையும் என்பது என் கருத்து.

விதவிதமான அட்டைப் படங்களுடன் எத்தனையோ தமிழ்ப் பாடநூல்கள் வெளியிடப்பட்டாலும் இந் நூல்களுக்கான ஆசிரியர் வழிகாட்டிகள் தெளிவான விளக்கத்துடன் அமையாவிட்டால், இவற்றால் மாணவர்கள் பயன்பெறுவார்கள் எனக் கூறமுடியாது. ஒரு பாடத்தை ஆசிரியர் எப்படிக் கற்பிக்கப்போகிறார் என்பதிலேயே மாணவர்களின் மொழியறிவு வளர்ச்சி தங்கியுள்ளது. இவ்வகையில் ஆசிரியருக்கு உதவியாக இருப்பவை ஆசிரியர் வழிகாட்டிகளே. உதாரணமாக டென்மார்க்கிலுள்ள டெனிஷ் மொழிப் பாடநூல்கள், பயிற்சிநூல்களுக்கான ஆசிரியர் வழிகாட்டிகள் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. இதனாலேயே இங்குள்ள ஆசிரியர்களால் திட்டமிட்ட முறையில் செயல்படமுடிகிறது. புலம்பெயர் நாடுகளில் தமிழ் கற்பித்தலுக்காக வெளியிடப்பட்ட பெரும்பாலான நூல்கள் என் கைகளில் கிட்டின. இந்நூல்களை வெளியிட்டோர் ஆசிரியர் வழிகாட்டி என்பதை கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. இலங்கையில் பாடநூல்களோ, ஆசிரியர் வழிகாட்டிகளோ தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பெரிதாக பயன்தராது. அதனால் தான் புலம்பெயர் நாடுகளின் தேவைக்காக வெளியிடப்படும் தமிழ்மொழி பாடநூல்களை வெளியிடுவோருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன்: 'தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவக்கூடிய விதமாக ஆசிரியர் வழிகாட்டிகளையும் வெளியிடுங்கள்' என்பதே அது.

அடுத்து, இங்கு மேலைத்தேய நாடுகளில் கல்வி கற்பிப்பதற்கு நவீன உபகரணங்கள் நிறையப் பாவிக்கிறார்கள். குறிப்பாக கணனி மூலம் பாடங்களைக் கற்பித்தல் முறை இங்கு வெகுவாக வளர்ந்துள்ளது. இந் நவீன தொழில்நுட்ப முறையினால் மாணவர்கள் பாடரீதியான விஷயங்களைக் கற்பது மட்டுமல்லாமல் விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவுகளையும் அறிகிறார்கள். மொழி கற்பதில் ஒரு மாணவனுக்கு பிரச்சினையென்றால் கணனி மூலம் மிக இலகுவாக எழுத, வாசிக்க சொற்களின் கருத்துக்களை அறியப் பழகலாம். இவை போன்ற நவீன உபகரணங்களை தமிழ் கற்பித்தலுக்குப் பாவித்தல் மிகவும் பயன்தரும். இதன் மூலமும் மாணவர்களின் தமிழ் கற்பிக்கும் ஆர்வத்தை இன்னும் தூண்டலாம், என்பது அனுபவபூர்வமான உண்மை.

**மேலைத்தேய நாடுகளில் கல்வி கற்பிப்பதற்கு நவீன உபகரணங்கள் நிறையப் பாவிக்கிறார்கள். குறிப்பாக கணனி மூலம் பாடங்களைக் கற்பித்தல் முறை இங்கு வெகுவாக வளர்ந்துள்ளது. இந் நவீன தொழில்நுட்ப முறையினால் மாணவர்கள் பாடரீதியான விஷயங்களைக் கற்பது மட்டுமல்லாமல் விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவுகளையும் அறிகிறார்கள்.**

மேலே நான் கூறிய கருத்துக்கள் யாவும் ஆசிரியர்களுக்கு பெரிதும் பயனளிக்கக் கூடியன. கருத்துக்கள், ஆலோசனைகளை வழங்குவது இலகு. அவற்றை செயல்படுத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்குத் தெரியும். ஒன்றுமே செய்யாமல் சம்பளத்துக்காக மட்டும் ஆசிரியர் தொழில் பார்க்காமல் கொஞ்சம் சிந்தித்து முயற்சி செய்து பார்க்கலாம்தானே!

தாய்மொழிக் கல்வியின் மூலம் தாய் நாட்டுச் சிந்தனையை தமிழ் பிள்ளைகள் மனதில் வளர்த்தல்

ஒரு பிள்ளையின் தாய்நாட்டுச் சிந்தனையானது தாய்மொழிமூலமே வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சிந்தனை தூய்மையானதாகவும், தெளிவானதாகவும் அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இக் கடமையை செவ்வனே நிறைவேற்ற பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகிய முப்பிரிவினரும் இணைந்து செயலாற்ற வேண்டும். இச் செயல்பாட்டுக்கு உதவக்கூடிய சில வேலைத்திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கலை, கலாச்சாரம் சம்பந்தமான விழாக்களை ஒழுங்குபடுத்தல் சிறந்த தொரு வேலைத்திட்டமாகும். புலம்பெயர் நாடுகளில் இவ்விழாக்களுக்குப் பஞ்சமில்லை. என்றாலும் இன்று இவ்விழாக்களை நடத்தும் நோக்கம் வழிதவறி வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறது. அதாவது எம் சிறார்கள் மனதில் தாய்நாட்டுச் சிந்தனைகளை வளர்ப்பதை விட்டு, "வேறு சிந்தனைகளைத் தூண்டக் கூடிய விதமாய் பெரும்பாலான விழாக்கள் அமைகின்றன" என்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. சீரிழந்த தமிழ்சினிமா கலாச்சாரத்துக்குள் எங்கள் பிள்ளைகள் சிக்குப்பட இவ் விழாக்களும், கொண்டாட்டங்களும் பெரும் துணைபுரிகின்றன. எமது நாட்டின் சமூக அமைப்பை, வரலாற்றை, பிரச்சினைகளை, புலம்பெயர்வாழ்வின் அவலங்களை அவற்றுக்கான தீர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய விஷயங்களை "மாணவர் மனதில் பதியும் வகையில்" நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். இன்று ஈழத்தில் நடக்கும் பல நிகழ்ச்சிகள் தமிழரின் அவலநிலையை, போராளிகளின் தியாகங்களை, ஒவ்வொரு தமிழனினதும் கடமைகளை வலியுறுத்தக் கூடியனவாய் அமைகின்றன. இந்த இக்கட்டான சூழலிலும் இயல், இசை, நாடகம் போன்ற முத்துறைகளின் மூலமாகவும் எமது எதிர்காலச் சந்ததியின் நாட்டுப்பற்று வளர்க்கப் படுகிறது. பல வழிகளிலும் வசதிகள் விரிந்துகிடக்கும் புலம்பெயர் நாடுகளில் தமிழராகிய எம்மால் இக்கடமையை இன்னும் சிறப்பாக நிறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேற்றலாம்.... நிறைவேற்ற வேண்டும்!

தமிழ்ச் சிறார்களின் நாட்டுப் பற்றை வளர்தெடுக்கக்கூடிய இன்னொரு வழி 'இலங்கை' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தை அமைப்பதாகும். டென்மார்க்கிலுள்ள பாடசாலைகளில் ஒரு கல்வி யாண்டில் மூன்று, அல்லது நான்கு முறைதான் மேலே குறிப்பிட்டபடி வேலைத்திட்டத்தை அமைப்பார்கள். இவ் வேலைத் திட்டத்தின் போது பாடசாலை மாணவர்கள் எல்லோரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குறிப்பிட்ட தலைப்பின்கீழ் இயங்குவார்கள். உதாரணம்: 'நாடுகள்' என்ற தலையங்கத்தை எடுத்தால் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நாட்டைத் தேர்ந்தெடுத்து அந் நாட்டு தரைத்தோற்றம் முதல் சனத்தொகை வரையிலான சகல ஆராய்ச்சிகளிலும் ஈடுபடும். பெரும்பாலும் ஒரு வாரத்துக்குப் பிறகு கடைசிநாள் வகுப்பறைகளில் கண்காட்சிகளை நடாத்துவார்கள். அவற்றைப் பெற்றோர், சகோதரர் வந்து பார்வையிடுவார்கள். இம் முறையினால் மாணவர்களுக்கு உலக நாடுகள் பற்றிய தெளிவான அறிவு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இம்முறையை தமிழ் வகுப்புக்களிலும் செய்து பார்க்கலாம். 'இலங்கை' என்ற தலைப்பின்கீழ் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தரைத்தோற்றம் பற்றி, காலநிலைபற்றி இப்படி பல அம்சங்களை ஒவ்வொரு குழுவிடமும் கொடுக்கலாம். கடைசியில் அவர்கள் கீறிய படங்கள், செய்த பொருட்களைக் கண்காட்சியில் வைத்து பெற்றோர்களின் பார்வைக்கு விடலாம். இச் செயல்பாடுகளின் மூலம் தாய்நாட்டைப் பற்றி மாணவர்கள் மனதில் பல விஷயங்களைப் பதிய வைக்கலாம். இப்படிப்பட்ட வேலைத் திட்டங்களில் மாணவர்கள் விருப்பத்துடன் ஈடுபடுவார்கள் என்பது நான் கண்கூடாகக் கண்ட உண்மையாகும்.

பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகள் மூலம் தாய்நாட்டுச் சிந்தனைகளை தமிழ் சிறார்கள் மனதில் ஏற்படுத்தலாம். எமது பண்பாடு, பாரம்பரியத்தை விளக்கும் விஷயங்களைத் தலையங்கங்களாகக் கொடுத்து இப் போட்டிகளை வைப்பதனால் மாணவர்களின் சொல்வளம், பேச்சுத்திறமை, எழுத்துத்திறமை வளர்வதோடு தாய்நாட்டைப் பற்றின அறிவும் வளரும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் போட்டி வைத்தல் என்பது இங்குள்ள கல்வித் திட்டத்தில் இல்லாத ஒன்று. டென்மார்க் கல்வித் திட்டத்தில் பரீட்சை வைத்தல் முறையே 8-ஆம் வகுப்பிலேயே ஆரம்பமாகிறது. ஏனெனில் பரீட்சைகள், போட்டிகள் என்பன மாணவர்கள் மனதில் தாழ்வுமனப்பான்மையை வளர்க்கும் என்ற கருத்தாலேயே ஆகும். இங்கு பிறந்து இங்கேயே வளரும் தமிழ்ச் சிறார்களுக்கும், சிறுவயதிலேயே புலம்பெயர்ந்த தமிழ் பிள்ளைகளுக்கும் போட்டிகள் என்பது முற்றும் முழுதாக புதிய விடயமே. எனவேதான் போட்டிகளை ஒழுங்குபடுத்துவோர் போட்டிகளுக்கான நிபந்தனைகள், பரிசளிப்பு போன்ற பல விடயங்களில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் மத்தியில் தாழ்வு மனப்பான்மை வராமல் தடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களையே சாரும். இவ்விடத்தில் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் டென்மார்க்கில் நடாத்தப்பட்ட தமிழ்திறன் போட்டிகள் சிலவற்றுக்கு நடுவராகப் போயிருக்கிறேன். எனக்குக் கிடைத்த அனுபவங்களின்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களைவிட அவர்களின் பெற்றோர்களாலேயே தம் பிள்ளைகளின் தோல்வியைத் தாங்கமுடியாத ஒரு மனநிலை காணப்படுகிறது. இந் நிலைமையில் இப் போட்டிகள் தேவைதானா என்ற எண்ணமும் எனக்கேற்பட்டதுண்டு. எனவேதான் பெற்றோர், ஆசிரியர், மாணவர் எனும் முப்பகுதியினரதும் புரிந்துணர்வுடன் கூடிய ஒத்துழைப்புடன் போட்டிகள் நடாத்தப்படவேண்டியது மிகமிக அவசியமாகும்.

நான்மேலே குறிப்பிட்ட ஆலோசனைகள் யாவும் என் அனுபவத்தினூடாக எழுந்தனவே. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்லாது தமிழ் பெற்றோரும் இக் கட்டுரையை வாசித்தல் பயன்தரும் என்பது என் அபிப்பிராயம்.

★★









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானத்திற்கான நோபல் பரிசும் திமோர் பிரச்சினையும்




**- மகரிஷி -**

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 10-ஆம் திகதி நோர்வே நகரத்தின் ஒஸ்லோ (OSLO) நகரில் சமாதானத்திற்கான நோபல் பரிசு ஜோசே ராமேஸ் ஹோர்தாவுக்கும், வணக்கத்திற்குரிய பிதா கார்லோஸ் பேலோவுக்கும் வழங்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

இலங்கை இனப்பிரச்சினையிலும், தமிழ் தேசவிடுதலைப் போராட்டத்திலும் அன்று தொட்டு இந்தியாவும், இன்று அமெரிக்காவும் தமது தேவைக்கேற்றபடி காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றன.

இத்தகைய ஓர் அணுகுமுறையை மேற்கத்தேய முதலாளித்துவ, கிறிஸ்தவ நாடுகள் குறிப்பாக அமெரிக்கா கிழக்குத் திமோர் பிரச்சினையில் கையாண்டு வருவதினை திமோர் போராட்ட வரலாற்றுப் பின்னணியையும், நோபல் பரிசு பெற்றவர்களில் ஒருவரான ஜோசே ராமோஸின் பின்னணியையும் நோக்குவதனூடாக தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அவதானிக்கவும், நாம் விழிப்புடனிருக்கவும் ஏதுவாக அமையும்.

“இந்தோனேசியாவை எதிர்த்துப் போராட பாரிய பலம் எமக்கு இல்லை. ஆகவே சர்வதேச மத்தியஸ்தத்துடன் கூடிய அரசியல் தீர்வே எமக்கு இறுதியான தீர்வாக அமைய முடியும்” இவ்வாறு திமோர் விடுதலைப் போராட்டத்தின் இயக்கத் தலைவர் ஜோசே ராமோஸ் சில மாதங்களுக்கு முன் இலங்கை சென்றிருந்தபோது பத்திரிகையாளருடனான கலந்துரையாடலின் போது குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடக்கமாக வைத்து திமோரின் வரலாற்றுப் பின்னணிக்கு வருவோம்.

அன்று போர்த்துக்கல் தன்னை விட 20 மடங்கு பெரிய நிலப்பகுதியை தனது குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்தது. தனது காலனித்துவத்திற்குட்பட்டிருந்த கிழக்கு திமோரில் 1974-ஆம் ஆண்டு ஏற்பட்ட இராணுவச் சதியைத் தொடர்ந்து போர்த்துக்கல் அங்கு சுதந்திரம் வழங்கியது. கிழக்குத் திமோரின் “பிரடிலின்” அமைப்பு 1975-ஆம் ஆண்டு நவம்பர் 28-ஆம் திகதி கிழக்குத் திமோரை சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்தது. விரல்விட்டு எண்ணிச் சொல்லக்கூடிய சில ஆண்டுகளின் பின் அயல்நாடான இந்தோனேசியா, கிழக்குத் திமோரை ஆக்கிரமித்ததுடன் தன்னுடைய 27வது மாகாணமாகவும் பிரகடனப்படுத்தியது. அன்று தொடங்கியதுதான் இந்த திமோர் விடுதலைப் போராட்டம்.

யார் இந்த ஜோசே ராமோஸ்?

1992-ஆம் ஆண்டு திமோர் ஐக்கிய முன்னணியின் தலைவர், குஸ் மாவோ இந்தோனேசியாவில் பிடிபட்டு தற்போது 25 வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருபவர். இவரின் கைதின் பின் இந்த அமைப்பின் சிறப்புத் தூதுவராக செயற்பட்டு வருபவர்தான் ஜோசே ராமோஸ். இதைவிட போர்த்துக்கேயரிடமிருந்து திமோர் விடுதலை பெற்றபின் குறுகியகாலம் ஆட்சியிலிருந்த அமைச்சரவையில், வெளிநாட்டமைச்சராக கடமையாற்றியவர். திமோரை இந்தோனேசியா ஆக்கிரமித்த காலத்தில் நியூயோர்க்கில் ஒரு மாநாட்டிற்காக இவர் சென்றிருந்தார். பிரடிலின் அமைப்பைச் சேர்ந்த பலர் அப்போது கொல்லப்பட்டதால் இவர் தன் தாய் நாட்டிற்குப் போகாது, நாட்டிற்கு வெளியிலிருந்து பிரச்சாரகராக செயற்பட்டு வருகிறார். ஒட்டு மொத்தத்தில் இவர் தன்னை ஒரு விடுதலைப் போராளி என காட்டிக்கொள்வதை



கிழக்குத் தீமோரை ஆக்கிரமித்திருக்கும் இந்தோனேசிய இராணுவத்தினர் தீமோர் புரட்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கையில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட மனிதவுரிமையாளராகவே காட்டிக் கொள்ள முற்படுகிறார்.

இலங்கையைப் போலவே, திமோரிலும் இந்தோனேசியா ஆக்கிரமிப்பாளர்களால் மிகக் கொடூரமான முறையில் இனவொழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை பல முறை சர்வதேச மன்னிப்புச் சபையும் சுட்டிக்காட்டியிருந்தது.

"எங்களிடம் ஆயுதமில்லை, பலமான கெரில்லாப் படையுமில்லை. மக்கள் ஆதரவும், சர்வதேச அரவணைப்பும்தான் இருக்கிறது" எனக் கூறும் ஜோசே ராமோஸ், இந்த சர்வதேச அரவணைப்பின் உண்மையான அர்த்தத்தினை புரிந்துவைத்திருக்கிறாரா?

யார் இந்த அரவணைப்பாளர்கள்?

சுருங்கச் சொன்னால், அமெரிக்காவும், மேற்குலகும், அவுஸ்திரேலியாவுமே இந்த அரவணைப்பாளர்கள். ஜோசே ராமோசும் இவர்களது நண்பராகவே தொழிற்பட்டு வருகிறார். இந் நாடுகள் இந்தோனேஷியாவின் நெருங்கிய கூட்டாளிகள். இந் நாடுகள் திமோர் போராட்டத்தினை ஒடுக்க ஆயுத, பொருளாதார மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை இந்தோனேசியாவுக்கு வழங்கி வருகின்றன என்பது தெரிந்தும் ஜோசே ராமோஸ் இந் நாடுகளில் தங்கியிருப்பதும், இந் நாடுகளை நம்பியிருப்பதும் போராட்டத்தில் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்புகிறது.

இந்நாடுகளிற்கு இந்தோனேசியா மீது அப்படி என்னதான் அக்கறை?

முதலாவது, கிழக்காசியா மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகள் சோஷலிஸ மணம் கமழும் நாடுகளாக மாறிவிடுமோ என்ற அச்சம். காரணம் பசுபிக் பிராந்தியத்தில் வடக்கே சீனா, வியட்னாம், லாவோஸ், வடகொரியா என்பவற்றின் செல்வாக்கு. இந்தச் செல்வாக்கினால் மேற்குறிப்பிட்ட நாடுகளில் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க இந்தோனேசியா ஒரு முதலாளித்துவ நாடாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, இந்தோனேசியாவில் காணப்படும் இயற்கை வளங்கள் (எண்ணெய்வளம், கனிப்பொருட்செறிவு, சந்தனக்காடு, கடல் வளம்) மேற்படி நாடுகளின் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஊக்குவிப்பன. அமெரிக்காவின் அரவணைப்புப்பற்றி ஜோசே ராமோஸ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், கிளின்டன் ஆட்சிக்கு வந்தபின் இந்தோனேசியாவுக்கான ஆயுத விநியோகத்தினை குறைத்துக் கொண்டுள்ளார் என்கிறார். ஆனால் பத்திரிகைச் செய்திகளின்படி கிளின்டன் அரசாங்கம் எப்-16 வர்க்க யுத்த விமானங்களை இந்தோனேசியாவிற்கு வழங்கியிருக்கிறது. ஏன், சென்ற ஆண்டு நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இந்தோனேசியா வர்த்தகர்கள், கோடீஸ்வரர்கள் கிளின்டனுக்காக பெருமளவு பணத்தினை தேர்தல் பிரச்சாரத்தில் செலவு செய்ததாக குற்றச்சாட்டுமிருக்கிறது.




சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்ற தீமோரிய புரட்சியாளர்கள்

1975, 1976-ஆம் ஆண்டுகளில் ஐ.நா. பாதுகாப்புச்சபை கிழக்குத்திமோரை இந்தோனேசியா வாபஸ் பெறவேண்டும் என்கிற தீர்மானங்களை இரு தடவைகள் நிறைவேற்றியிருந்தது. இந்தோனேசியா அதனை பொருட்படுத்தியதா? வழமையான பாதுகாப்புச்சபை கூட்டங்களிலெல்லாம் இத்தீர்மானம் மீண்டும் வலியுறுத்தப்பட்ட போது எங்கே போயின இந்த மேற்குலகும், அமெரிக்காவும்?

அவுஸ்திரேலியாவைப் பொறுத்து தன்னருகில் இன்னொரு கியூபா உருவாகிவிடக்கூடாது என்கிற பயம். அதனாற்தான் 1978-ஆம் ஆண்டே இந்தோனேசியாவுடனான திமோர் இணைப்பிற்கு அங்கீகாரம் வழங்கிவிட்டது. இன்றும் அது இந்தோனேசியாவிற்கு இராணுவப் பயிற்சி அளித்துவருவது உலகறிந்த விடயம். இத்தனைக்கும் 2-ஆம் உலக யுத்தத்தின்போது அவுஸ்திரேலியாவைப் பாதுகாக்க 40000 கிழக்குத் திமோர் போராளிகள் அவுஸ்திரேலிய மண்ணில் தங்கள் இரத்தத்தினைச் சிந்தினார்கள்.

இன்னுமொருவிடயம்!

உலகின் சனத்தொகையில் 5-வது இடத்தினை வகிக்கும் இந்தோனேசியாவில் உலகிலுள்ள பத்து வீதமான முஸ்லீம்கள் இங்குதான் வாழ்கிறார்கள். இது அமெரிக்காவிற்கும், மேற்குலகிற்கும் அச்சுறுத்தலாக அமைய, அதாவது இந்தோனேசியாவை இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்கிற்கு ஆளாகவிடாமல் தடுத்து தமது கிறிஸ்தவ மேலாதிக்கத்தினை அங்கு நிலைநாட்ட, இந் நாடுகள் கிழக்குத் திமோரிலும் தமது கால்களை வைத்து காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றன. இதனால்தான் திமோரின் விடுதலை இன்னும் கைகூடவில்லை.

இதில் ஆச்சரியத்தினையும், வியப்பினையும் தரும் விடயம் என்னவெனில், ஜோசே ராமோசின் சர்வதேசப்பிரச்சாரம் இதுவரை இந்த அமெரிக்கத் தலைமைத்துவ மேற்குலக நாடுகளின் ஏமாற்றுக்களை அம்பலப்படுத்தவில்லை என்பது தான்.

அப்படியெனில் ஜோசே ராமோசின் இந்தப் போக்கிற்கும், இந்த சமாதானப் பரிசிற்கும் இடையிலான உள்நோக்கம் தான் என்ன?

இந்த நிலைமைகள் எமக்கு உணர்த்துவது எல்லாம் எங்கள் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நாம் மிகவும் விழிப்புடனிருக்க வேண்டும் என்பதைத்தான்!

★




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசியாவை ஆள நினைக்கும் ரஷ்ய ஆயுதங்கள்

— உதயன் —



**அமெரிக்காவின் மிக நெருங்கிய ஒரு நட்பு நாடாகவும் அதன் பாதுகாப்பை எதிர்பார்த்திருக்கும் ஒரு நாடாகவுள்ள தென்கொரியா இன்று ரஷ்யாவின் யுத்த தாங்கிகள், ஏவுகணைகள், கவசவாகனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்கிறது**

உலக ஆயுதச் சந்தையில் அமெரிக்க மேற்கு நாட்டு ஆயுதங்கள் எந்தளவுக்கு ஆளுமை பெற்றிருந்தனவோ அதேளவு சோவியத்தின் ஆயுதங்களும் இருந்தன. ஆனால் சோவியத் யூனியனின் சிதைவின் பின் அதன் ஆயுத தளபாடங்களின் மதிப்பு வெகுவாக இறங்கத் தொடங்கியது. அக்காலப்பகுதியில் சோவியத் ஆயுதங்களின் இடத்தை முழுவதுமாக மேற்கு நாட்டு ஆயுதங்கள் நிரப்பத் தொடங்கின. சோவியத் யூனியனின் பெரும் ஆயுத தயாரிப்பு மையங்கள் ரஷ்யக் கட்டமைப்பினுள்ளும் உக்ரேனிலும் பிரிந்து இருந்தன. முன்னர் தாம் உலக ஆயுதச் சந்தையில் பெற்றிருந்த இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள ரஷ்யா விரும்பியது.

அதன்படி 1993-ம் ஆண்டு திறந்த ஆயுதச் சந்தைக்குள் ரஷ்யா நுழைந்தது. சிறிது சிறிதாக அதன் விற்பனை உயர்ந்து இன்று உலகின் இரண்டாவது ஏற்றுமதியாளர் என்ற பெயரை அடைந்துள்ளது ரஷ்யா வருடத்துக்கு மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தளபாடங்களை அது ஏற்றுமதி செய்கிறது. இன்று உலகில் முதலாவது ஆயுத ஏற்றுமதியாளராக வேண்டும் என்ற இலக்கில் அதன் விற்பனையாளர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். தேசத்தின் அபிவிருத்தி வெளிநாட்டு நாணயமாற்று மிக அவசியம் என்ற நிலையில் அதற்கு பிரதானமாக உதவக்கூடிய ஆயுத ஏற்றுமதியே என்பதையும் சோவியத் சிதைவின்பின் அந்நியப்பட்டுள்ள தனது நண்பர்களை ஆயுதங்களைக் கொண்டே வசியப்படுத்தவேண்டும் என்பதையும் உணர்ந்த ரஷ்ய ஏற்றுமதியாளர் முதலாவதாக பிராந்திய பாதுகாப்பை காரணம் காட்டி தமது சந்தையை ஆசியாவை நோக்கி நகர்த்தினர். ஆசியாவில் ஆயுத விற்பனையை அதிகரிப்பதானது மூன்று வகைகளில் ரஷ்யாவிற்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும். முதலாவது அன்னிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும், இரண்டாவது ஐரோப்பிய ஆயுத வியாபாரிகள் ஒதுக்கப்படுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க மேலாதிக்கம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படும்.

ஆனால் பல வருடங்களாக ரஷ்ய ஆயுத உற்பத்தி ஸ்தம்பித்து இருந்தாலும் அமெரிக்காவின் நவீன ஆயுதங்களால் ரஷ்ய ஆயுதமயப்படுத்தப்பட்டிருந்த ஈராக் சிதைக்கப்பட்டதாலும் ரஷ்ய ஆயுதங்களுக்கு புதிய விற்பனைகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையை சரிசெய்வதானால் புதிய உத்திகளை கையாள வேண்டும் அதேவேளை தங்களது பல ஆயுதங்கள் மேற்கின் நவீன ஆயுதங்களுக்கு ஒப்பானவை அல்லது திறமையானவை என்பதுவும் நிருபிக்கப்பட வேண்டும். என்பதால் முதன்முறையாக ஆயுத விற்பனைக் கண்காட்சிகளுக்கு ரஷ்ய ஆயுதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. அதுவரை மேற்குலகம் கண்டிராத பல தொழில் நுட்பங்களைக் கொண்டிருந்த பல ஆயுத தளபாடங்கள் மற்றும் குண்டு வீச்சு விமானங்கள் போர்க் கப்பல்கள் போன்றவை வெளியுலகின் பார்வைக்கு வந்தன. அதேவேளை அவற்றின் விலைகளும் மேற்கின் விலையைவிட பல மடங்கு குறைவாகவே இருந்தது.

1992-ம் ஆண்டு ரஷ்யாவிடம் சீனா பாரிய விமானக் கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தாலும் கடந்த வருடம் சீனப் பிரதமர் லீபெங் ரஷ்யா சென்று வந்ததன்பின் அது சூடுபிடிக்கத் தொடங்கியது. உலகின் ஆயுத ஏற்றுமதியாளர்கள் வரிசையில் ஆறாவதாக சீனா இருந்தாலும் அதன் கடற்படையும், விமானப்படையும் நவீனமயப்படுத்தப்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட வேண்டிய நிலையிலேயே இருந்தன. ரஷ்யாவில் லீபெங் செய்த ஒப்பந்தத்தின் படி சீனாவின் கடற்படைக்கு ``KILO" ரகத்தைச்சேர்ந்த நவீன தொழில் நுட்பங்களைக் கொண்ட நீர்மூழ்கிகள், ஏவுகணைகள் மற்றும் கரையோரப் படகுகள், விமானப்படைக்கு SU-30 ரக குண்டு வீச்சு விமானங்களும் விநியோகிக்கப்படவுள்ளன. சீனாவின் கடற்படை நவீன மயப்படுத்தப்பட்டால் தென் சீனக் கடலில் கடற்படைச் சமநிலையை அது பெற்று விடும்.

சீனாவின் ஆயுதக் கொள்வனவு இந்தியாவையும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியது. தனது சொந்தத் தயாரிப்பை நம்பியிருந்தாலும் அதுவும் தனது விமானப்படையை நவீன மயப்படுத்த வேண்டியிருந்தால் கடந்தவருடம் நாற்பது SU-30 ரக குண்டு வீச்சு விமானங்களையும் கரையோர பாதுகாப்பிற்காக ராடர்கள் பொருத்தப்பட்ட உலங்கு வானூர்திகளையும் அது



ரஷ்யாவின் மிக நவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட SU-27 குண்டுவீச்சு விமானம்

விலைக்கு வாங்க ஒப்பந்தம் செய்தது. இந்த இரண்டு நாடுகளுக்கு மட்டும் ஆயுதங்களை விற்பனை செய்வதாய் திருப்திப் பட்டுக்கொள்ளாத ரஷ்ய ஆயுத தயாரிப்பாளர் தென் கிழக்காசியாவில் புதிய நாடுகளைத் தேடினர். ஏற்கனவே அமெரிக்காவின் ஆதிக்கம் அங்கு இருந்ததால் அதனையும் உடைக்க வேண்டிய நிலையில் அவர்கள் இருந்தனர். அமெரிக்க விமானங்களைப் பெருமளவில் கொண்டிருந்த மலேசிய விமானப்படை மிகுந்த விலை குறைவில் 18 மிக் 29 விமானங்களை ரஷ்யாவிடமிருந்து பெற்றுக் கொண்டது. அடுத்ததாக தென் கொரியாவை எடுத்துக் கொள்ளலாம். அமெரிக்காவுடன் மிக நெருங்கிய நட்புறவுள்ள ஒரு நாடாகவும், அமெரிக்காவின் பாதுகாப்பை நாடி நிற்கும் ஒரு நாடாகவும் உள்ள தென் கொரியா ரஷ்யாவில் இருந்து யுத்த தாங்கிகளையும், ஏவுகணைகளையும், துருப்புக்காவும் வாகனங்களையும் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்தது.

ரஷ்யா ஆசியாவில் பல நாடுகளுக்கும் தனது தளபாடங்களை விற்பனை செய்துள்ளதால் அவற்றில் தனது பிராந்திய பாதுகாப்புக்கு அச்சம் ஏற்படாது என்பதில் உறுதியாகவே இருக்கிறது. ஆனால் சீனாவுடன் சற்று கவனமாகவே அது நடந்து கொண்டுள்ளது. சீனாவுடன் அது இராணுவக்கூட்டுறவு, ஒப்பந்தமொன்றை அண்மையில் செய்தது. அதன்படி ரஷ்யாவில் தொழில்நுட்ப உதவியுடன் SU-27 ரக விமானங்களை சீனாவே தயாரித்துக் கொள்ளும். அதற்காக சுமார் 1000 பொறியியலாளர், தொழில்நுட்பவியளாளர் தரத்தில் உள்ளவர்கள் சீனாவின் தங்களது தளபாடங்களின் பராமரிப்பதிலும், மற்றும் பல்வேறு விதமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள்.

ரஷ்யா தனது தளபாடங்களை ஏனைய நாடுகளுக்கு விற்றாலும் தான் விரும்புவனவற்றை மட்டுமே வெளியில் செல்ல அனுமதிக்கும் அதேவேளை தனது தொழில் நுட்பங்கள் பிழையானவர்களின் கைகளில் சென்றடைய அது ஒருபோதும் அனுமதிக்கவும் போவதில்லை. ★



## பிரெஞ்சு தாஜ்மகால்

இந்தியாவிலே ஆக்கிராவிலுள்ள தாஜ்மகால் தன் அன்புக் காதலி அருமை மனைவி மும்தாஜ்ஜுக்காக முகலாய மன்னன் சாஜஹான் எழுப்பிய மாபெரும் அழியா நினைவுச் சின்னம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால், ஐரோப்பாவிலே பிரான்ஸ் நாட்டிலே தனது அருமைக் காதலன் அன்புக் கணவனுக்காக ஒரு மனைவி எழுப்பிய நினைவுச் சின்னம் ஒன்றுள்ளது.

BROY என்ற இடத்தில் அமைந்துள்ள இந்தக் காதல் ஆலயம் (Le Temple de L'amour de BROY) இளவரசரும் அன்புக் கணவருமான Philibert le beau தனது 29வது வயதில் இறந்த போது அவரின் நினைவாக ஆஸ்திரிய மார்கரெட் டால் (1480-1530) எழுப்பப்பட்டதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடூரின் 3 படங்கள்:

# தனி மனித நடத்தையும் நிலவும் புறவுலகும்



எலிப்பத்தாயம் விதேயன் கதா புருஷன் மூன்று படங்களையும் என்னால் கருத்தியல் அரசியல் படங்களாகவே பார்க்கமுடிகிறது. மூன்று படங்களுமே நிலப்பிரபுத்துவ சமூக சூழலில் நிகழும் தன்மையைக் கொண்டவை. எந்த சமூக அமைப்பையும் விட நிலப்பிரபுத்துவ சமூகம் நேரடியான ஆண்டான் அடிமை உறவை தனது எல்லா நடைமுறைக் கலன்களிலும் கொண்டிருக்கின்றது. சில வேளை அடூரின் மனம் நிலப்பிரபுத்துவ ஆண்டான் அடிமை உறவில் லயமிக்க கவித்துவ உணர்வைக் காணும் மனமாக, அந்த அமைப்புக்காக உருகும் மனமாக இருக்கிறதோ என்ற ஐயம் கூட தோன்றத்துவங்குகிறது.

எலிப்பத்தாயம் ஒரு வகையில் அப்படத்தின் மையப் பாத்திரத்திற்கு நீதி வழங்கி விடுகிறது. அந்த நீதி ஒரு வகையில் நிலவும் சமூகத்திற்கு எதிர்த்திசையில் வளர்ந்து விமர்சனப் பிரக்ஞையுள்ளவர்க்கு தண்டனை என்று கூட உணரத் தூண்டுவது. விதேயன் படத்தில் குற்றவுணர்வு (Remorse) கொண்ட ஒரு அப்பாவி மனிதன் மிருகத்தனமான சூழலில் அந்நிலை எய்திய ஒரு மிருகமாகவே சித்தரிக்கப்படுகிறான். பார்வையாளனுக்கு அடிமையின் மீது கோபமும், ஆண்டையின் மீது பரிவுமே உருவாகிறது. கதாபுருஷன் படம் மிகுந்த கருத்தியல் அடிநாதம் கொண்டது. ஒரு பாத்திரம் வன்முறை அரசியலினின்று துறவு மனமாக வளர்ச்சியுற, இன்னொரு பாத்திரம் நிலப்பிரபுத்துவத்தின் சாரத்தினின்று புரட்சிகரப் பிரக்ஞைநோக்கியதாகவும் பிற்பாடு தனி நபர் விடுதலைப் பிரக்ஞையை ஆன்மீகத்தில் தேடும் சாத்தியம் கொண்டதாகவும் வளர்ச்சியுறுகிறது.

அடூரின் படங்களில் நான் கண்ட பிறிதொரு அம்சம் காலமும்/ இடமும் வட்டச் சூழலில் திரும்பத்திரும்பவும் வேறுபட்ட மனவளர்ச்சியுள்ள சூழலில் நிகழ்வதான ஒரு அம்சம். முடிவும் ஆரம்பமும் வேறுவேறல்ல எனச் சொல்லும் காட்சியும் படிமங்கள். எலியை குளத்தில் மூழ்கடிக்க எடுத்துச் செல்வது, தேவையில்லாத செத்த எலிமாதிரியான மனிதர்களை அதே இட, கால நிகழ்வில் எடுத்துச் செல்வது எலிப்பத்தாயத்தில் நிகழ்கிறது.

அடூரின் படங்களில் மனிதன் தனது இலக்கின் தேர்வாக வந்தடைந்த இடங்கள்தான் இருக்குமேயொழிய அங்கு வந்து சேர அவன் நடந்த ரணங்கள் சுயமான கேள்விகள் அதன் ஆதாரத்தில் இடம் பெறுவதில்லை. நேரடியான சம்பவங்கள் உரையாடல்களில் இருந்து விலகிய ஒரு விவாத இடத்தையே அடூர் தனது படங்களில் தேர்ந்து கொள்கிறான்

அதேமாதிரி விதேயனில் அடிமையின் வீட்டிற்கு வரும் நிலப்பிரபுவின் வருகைக் காட்சி, புணரும் போதும் சரி துப்பாக்கிச்சூடு நடக்கும் போது சரி ஒரே கால/இட பரிமானத்தில் நிகழ்கிறது. மனித நிகழ்வுகள் மட்டுமே வேறாயிருக்கிறது. மனித நடவடிக்கைகள் போலவே கால இட மாற்றங்கள் நிகழ்வதில்லை எனும் செய்தி அடூரின் படங்களில் திரும்பத்திரும்ப வருகிறது. இது அவ்வாறு இல்லை. எனில் அடூரின் படங்களில் அது ஒரு பாணியாக இடம் பெறுவதன் காரணம் கருத்தியல் ரீதியிலானதுதானா?

அப்படித்தான் தோன்றுகிறது. காந்தியம் பிரதான அரசியல் போக்காக நிலவும்போது வன்முறை அரசியல் தேர்ந்தவர், பிற்பாடு காந்தியத்தையும் தாண்டி துறவறம் பூணுகிறார். இயல்பில் நிலப்பிரபுத்துவ சூழலில் வளர்ந்த ஒருவர் வன்முறை அரசியலைச் சேர்ந்து இறுதியில் தனிநபர் விசாரணையை அடைவதாக இருக்கிறது. ஒருவர் முடித்த இடத்தில் இன்னொருவர் தொடங்குகிறார்.

இவ்வாறு மாறாத கால இடம் போன்றவற்றில் மாறாத புறவுலகில் சிக்குண்டு அலைவுறும் மனிதர்களாகவே அடூரின் மனிதர்கள் இருக்கிறார்களோவெனத்தோன்றுகிறது. அடூரின் படங்களில் மனிதன் தனது இலக்கின் தேர்வாக வந்தடைந்த இடங்கள்தான் இருக்குமேயொழிய அங்கு வந்து சேர அவன் நடந்த ரணங்கள் சுயமான கேள்விகள் அதன் ஆதாரத்தில் இடம் பெறுவதில்லை. நேரடியான சம்பவங்கள் உரையாடல்களில் இருந்து விலகிய ஒரு விவாத இடத்தையே அடூர் தனது படங்களில் தேர்ந்து கொள்கிறான்.

மனிதனின் நடத்தையில் அரசியல் அவனது புற உலகில் பெறும் இடம் அடூரைப் பொறுத்து மிகமிக இரண்டாம் பட்சமானது. கதாபுருஷனில் ஜோதிடத்தின்படி தாய்க்கு வியாதி வருவதும், கதாபுருஷனுக்கு கால் ஊனம் அடைவதும் விளக்கப்படாமலே நடைபெறுகிறது. திக்குவாய்கூட சுயப்பிரக்யுடன் அவர் எதிர்ப்பை வெளியிடும்போது மாறிப் போகிறது. அடூரின் படங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சூழலை மீறி வருகிற மனிதர்கள் மிகவும் ஆச்சரியமாகவே வருகிறார்கள். சூழலில் சிக்குண்டு 'எலிப்பொறியில்' சிக்குண்டு மடிபவர்களாகவே மனிதர்கள் உணர்கிறார்கள்.

எலிப்பொறி எலிப்பத்தாயத்தில் மனிதனுக்கும் வாழ நேர்ந்த சூழலுக்குமான குறியீடாகிறது. இதே அர்த்தத்தில் கதாபுருஷனில் நாயகனுக்கும் அவனது மனைவிக்குமான உரையாடலில் இடம் பெறுகிறது. மிகப் பெரிய எலிப்பொறியாக இரவில் கதவு, ஜன்னல் வெளிச்சம் தவிர இருண்டிருக்கும் வீடு தெரிகிறது. மேலும் இம் மூன்று படங்களிலும் இடம்பெறும் வசிப்பிடங்கள் அதிகமான வெளி மனிதர் நடமாட்டமற்ற இடங்களிலேயே இருக்கிறது. எலிப்பத்தாயம் தோட்டவீடு, விதேயனின் அடிமைக்குடிசை, கதாபுருஷனின் பெரிய தோட்ட வீடு போன்றவற்றில் வாழும் மனிதர்கள் நிறையத் தனிமையையும் விலகிய தன்மையையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். அநேகமாக இந்த இடைவெளி அடூரின் எல்லாப் படங்களிலும் இடம் பெறுகின்றது.

கதாபுருஷனில் கதாநாயகனுக்கும் அவர் மாமனுக்குமான உரையாடலொன்றில் அவரது மாமன் 'புரட்சியை விளையும் மனதுக்கும் துறவறத்தைத் தேர்ந்துகொள்ளும் மனதுக்குமான தூரம் மிகச் சன்னமானது' என்று குறிப்பிடுகிறார்கள்.

அடூரின் இந்த மூன்று படங்களிலும் நான் பிரதானமாக அவதானித்த இரண்டு விஷயங்கள் இதுதான்.

1. மனிதனின் நடத்தையை 'எலிப்பொறியில்' சிக்கிய ஜந்து மாதிரி அவனது சூழல் அடைத்துக் கொண்டிருக்கிறது. நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், புரட்சி, கருத்தியல்கள் எல்லாமுமே முடிவற்ற பாதைகள். இதில் ஆண்டான் x அடிமை, புரட்சிக்காரன் x காந்தியவாதி, சுரண்டப்படுபவன் x சுரண்டலாளன் எனப் பிரித்துப் பார்ப்பது சாத்தியமில்லாமல் போகிறது.

2. மனிதனின் நடத்தையை புறவுலகுதான் (ஜோஷல்யம் நிலவும் அமைப்பு/ கருத்தியல்( போன்றவை வழிநடத்துகின்றன. இதில் அவனை, அவனது நடத்தையை நோவதில் கொஞ்சமே காரணமிருக்கிறது. மீறிச் செல்வதென்பது ஒரு வகையில் மீளத் திரும்பிப் போவதுதான். இதில் விடுதலை என்பதுதான் என்ன?

## ஜமுனா ராஜேந்திரன்

எலிப்பத்தாயம் 1981-லும் விதேயன் 1993 லும் கதாபுருஷன் 1995-லும் வெளியான படங்கள். 15 ஆண்டு இடைவெளியில் வெளியான படங்கள்.

அடூர் நாடக ஆக்கதாரராகவும் இயக்குனராகவும் இருந்து, செய்து கொண்டிருந்த அரசுப் பணிைய ராஜினாமா செய்து விட்டு 1965 இல் புகு பிலிம் இன்ஸ்டிட்யூட்டில் திரைக் கதை எழுதுவதிலும் இயக்குவதிலும் டிப்ளமோ பெற்றவர். அடூர் எழுபதுகள் தோற்றுவித்த புதிய அலை சினிமாவில் வளர்ந்தவர். ஷியாம் பெனிகல், மனிகௌல், அரவிந்தன், குரிஸ்காஸரவல்லி, நரசிங்கராவ், கௌதம் கோஷ், கோவிந்த நிஹலானி, குரிஷ்கர்னட் போன்ற இயக்குனர்கள் இவரது தலைமுறையைச் சார்ந்தவர்கள்.



இதன் எதிர்த்திசை வளர்ச்சியாகவே, மனிதனின் நடத்தையில் அரசியல், பொருளாதாரம் பெரும் நிர்ணயவாதத்தன்மைக்கு எதிராக முற்றிலும் மனவியல் கருத்தியல் அறவியல் அடிப்படைகளை நிர்ணயவாதக்கூறுகளாக வலியுறுத்தும் ஒரு அணுகுமுறை தோன்றுகிறது. இதன் தமிழுக்குரிய உதாரணமாக இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல் நாவலைச் சொல்லலாம்.

இதனது திரையுலக நீட்சியின் எதிர்த்திசை அணுகுமுறைதான் அடூர் கோபாலகிருஷ்ணனுடையது. அடூரின் மனித நிர்ணயம் பெரும்பாலும் அறவியல், அன்பு விமோசனம் போன்றவற்றை அடிப்படை கொண்டது.

எந்தக்கலையானதும் அக்கறை, இறுதி அக்கறை இதுவாகவே இருக்க இயலும். ஆனால் மனித விடுதலைக்கான சிந்தனையில் இன்று அளவியல், பாலியல்பு, விமோசனம் அரசியல், பொருளியல் எல்லாவற்றிற்கும் அடியில் நிர்ணயமாகச் செயல்படும் அதிகாரம் பற்றிய தேடுதல் அதிகரித்து வருகிறது.

அன்பு, மனித உறவுகள் போன்றவற்றினிடையிலும் உறைந்திருக்கும் அதிகாரம், வன்முறை தவிர்ந்த அன்பு மனித உறவுகளிலேயே இன்று விமோசனம் தனிநபர் விடுதலைக்கான திறவு கோல் இருக்கிறது.

இந்தச் சிந்தனை அடூர் கோபாலகிருஷ்ணனின் சூழல் குறித்த புரிதலிலோ தனிநபரின் நடத்தை குறித்த புரிதலிலோ இல்லை. இவையில்லாமல் தனி நபரின் ஆன்ம விடுதலை சாத்தியமே இல்லை.

இதையும் உள்ளிட்ட, அதே சமயம்' இதை மறுத்த எதிர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திசைப் பயணமே அடூரின் மூன்று படங்களான எலிப்பத்தாயம், விதேயன், கதாபுருஷன் போன்றவற்றில் வெளியாகிறது. நாம் இடது பக்கம் பார்க்கத் தெரிகிறது சூரியன்.

இந்த மூன்று படங்களிலும் நான் அவதானித்த மூன்று பிரச்சினைகள் இன்றைய உலகின் பிரச்சினைகளின் வளர்ச்சி நிலையில் வைத்துப் பார்க்கும் போது மிகுந்த தர்க்க முகங்களைச் சந்திக்கின்றன.

1. அ. வட்டவரவச் சூழலில் திரும்பத்திரும்ப மாற்றங்களின்றி நிகழும் காலம்

எலிப்பத்தாயத்தில் எலியை மூழ்கலுக்கு எடுத்துப்போவது பெண் மாற்றம் ஆணின் பிணங்களை எடுத்துப்போவது ஒரே இசை அழுத்தத்தில் காட்சிப் பரவலில் வேகத்தில் நிகழ்கின்றது.

பிணங்களைப் பொறுத்து காலம் நகர்வதில்லைத்தான்.

ஆ. ஆனால் விதேயனில் அடிமையின் மனைவியிடம் வந்து போகும் நிலப்பிரபுவின் இரண்டு வருகைகள் திரும்பத் திரும்ப இறந்தகாலம் நிகழ்காலத்தில் அப்படியே நிகழ்வதாக உள்ளது.

கொஞ்சமும் இது பொருந்தவில்லை.

காரணம், உயிருள்ள மனுஷியின் மாற்றமுள்ள வடிவம் அங்கு காணோம்.

நிலப்பிரபு அங்கு வரும் முன்னாலும் வந்து போகத் தொடங்கிய பின்னாலும் அப் பெண்ணில் நிகழ்ந்த மாற்றங்கள் படத்தில் காணாமல் போகிறது.


மனமாற்றம் குறித்து 'நேரடியாக' காட்சிப்படிமத்தில் உணர முடியாவிட்டால் கூட 'புறத்தோற்றம்' பற்றி ஒருவன் அறிய முடியும்.

நிலப்பிரபு வரும் முன்பு மிகுந்த ஏழ்மைத் தோற்றமுள்ள பெண்ணின் வெற்றுக்கழுத்து, மிகச் சாதாரண நிபந்தனைகள் அவர் வந்து போகத் துவங்கியபின் 'நடிகைக்கழுத்தாக' மற்றும் அழுத்தமான நிறமுள்ள செழிப்பான உடைகளாகிறது.

இந்த மாற்றம் படத்தில் காணாமலே போய்விடுகிறது. நிலப்பிரபுவின் மறு வருகையின்போது இது வெறுமனே தொழில்நுட்பப் பிரச்சினைமட்டுமல்ல, காலம் குறித்த அடூரின் சிந்தனை மாற்றம்குறித்த அடூரின் சிந்தனை 'பிணத்துக்கும் உயிருள்ளவற்றுக்கும்' இடையில் செயல்பட முடியாமல் போவதையே இது காட்டுகிறது.

2. விதேயனில் அடிமையும், மனைவியும் தாம் சகிக்கமுடியாத சூழலில் சிக்கவைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தே இருக்கிறார்கள். கண்ணீரும் எதிர்ப்புணர்வும் பல்வேறு கட்டங்களில் வெளிப்படுகிறது.

கிணற்றில் விழக் கிடப்பவனைக் காப்பாற்ற ஆண்டவனை வேண்டிய அவசியம் அடிமைக்கு அவன் வாழ்நிலை அனுபவத்தினின்று இல்லவே இல்லை. நிலப்பிரபுவுக்கு தன் மனைவி கொல்லப்படுவது குறித்து உள்ள 'குற்றவுணர்வு' மனித மனம் சார்ந்ததுதான். அடிமைக்கு அத்தகைய 'குற்றவுணர்வு' வருவதற்கான காரணம் இல்லவே இல்லை.



**மதம், பல்வேறு போராட்டம் சமூகங்களில் விடுதலை இறையியலாக வடிவம் கொள்கிறது. ஆபிரிக்க இலத்தீனமெரிக்க விடுதலை முறையியல் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ஆனால் கேரளத்தில் அஜீதாவோடு சேர்ந்து செயல்பட்டவர்களில் ஒருவர் புட்டபர்த்தி சாய்பாபாவின் பக்தராகவும் பிரச்சாரகராகவும் ஆகியிருக்கிறார்**

ஆண்டியின் அடிமையின் இந்த 'கவித்துவ' உறவை லண்டன் கார்டியின் விமர்சகர் பெரக்மால்கம் கடத்தப்பட்டவன் x கடத்தல்காரன் போன்றவர்க்கு உள்ள உறவோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்.

கடத்தப்பட்டவன் 'எதிர்ப்பை' உள்ளிருந்து திரட்ட முடியாது. ஆனால் அடிமை தன் எதிர்ப்பை 'உள்ளிருந்தும் வெளியிருந்தும்' திரட்ட முடியும்.

உறவை, ஆதிக்க உறவை இவ்வாறு அழகு படுத்துவதற்கான காரணம் அடூரின் நிலப்பிரபுத்துவ உறவுகள் குறித்த அணுகுமுறையே காரணமாகிறது.

3. கதாபுருஷனில் கதாநாயகனில் அல்லது அவன் மாமனில் நேரும் மாற்றத்துக்கான காரணங்கள், அரசியல் அனுபவங்களின் அடிப்படையிலான அல்லது முக்தி தேடிய இந்திய ஆன்மீக மனதின் வெளிப்பாடா என்பதற்கான விளக்கங்கள் எந்தக் காட்சியிலுமே இல்லை.

மதம், பல்வேறு போராட்டம் சமூகங்களில் விடுதலை இறையியலாக வடிவம் கொள்கிறது. ஆபிரிக்க இலத்தீனமெரிக்க விடுதலை முறையியல் இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ஆனால் கேரளத்தில் அஜீதாவோடு சேர்ந்து செயல்பட்டவர்களில் ஒருவர் புட்டபர்த்தி சாய்பாபாவின் பக்தராகவும் பிரச்சாரகராகவும் ஆகியிருக்கிறார்.

மேலும் காந்தியம், மார்க்ஸீயம், ஆன்மீகம் வழி போகிற பயணம் இன்று இந்தியாவில் விடுதலை முறையியல் தன்மையை எட்டுவதற்கான ஆதாரங்கள் குறைவாகவே இருக்கிறது. இந்த தீவிரவாதமாக ஆர். எஸ். எஸ். தீவிரவாதமாக ஆவதற்கான காரணங்களே கேரளாவில் அதிகம் நிலவுகிறது. நடைமுறையும் அவ்வாறே இருக்கிறது.

தமிழ்ச் சூழலில் இத்தகைய விவாதங்களின் முக்கியமான புத்தகம் ஞானியின் இந்திய வாழ்க்கையும் மார்க்ஸீயமும் நூல். இன்று மதம் தரும் விடுதலை உணர்வும், வீரமும் மிக மிக வரையறைக்குட்பட்டதாக இருப்பது இவ்வகையில் இந்துமதம், நிலப்பிரபுத்துவம், ஜோஸ்யம் போன்ற சிந்தனைகளில் வழிபெறும் விடுதலைத் தேட்பமும் துறவறமும் மிகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைந்தளவிலேயே ஆண்மீகத் தேடு தலுக்கான சாத்தியத்தைக் கொண் டிருக்கிறது,

Sechlar Spirituality-க்கான தேடு தலை இன்று காந்தியம், மார்க்ஸீய த்தின் வழி சென்று மீள்கிற ஒருவன் இன்று மேற்கொள்ளமுடியும். அடு ரில் நிலப்பிரபுத்துவச் சூழல் அதற் கான மிகக்குறைந்த சாத்தியங்கள் கூட கொண்டதில்லை.

இம்மூன்று படங்களுமே சூழ லும், சூழலில் அழிவுபடும் மனித னும் சூழலை மீறிச் செல்லும் மனித மனத்தின் தரிசனங்கள் போன்ற வற்றையே பேசுகின்றன. ஜோஸ்யம் போன்றவை நம் வாழ்வில் எவ் வாறு விதிக்கப்பட்டதாக இருக்கிறது. அரசியல் போன்றவை கூட விதிக் கப்பட்டவழியேதான் நிறைபெறு கிறது. எனப் படம் சொல்கிறது. இயற்கை விதிக்கப்பட்டதாகவும், மனிதன் ஆக்கியவைகள் கூட விரிக் கப்பட்டதாகவும் (அரசியல்/ வன்முறை/ சித்திரவதை) அடூருக்குத் தோன்றுகி றது. விதிக்கப்பட்ட சூழலில்மனித னின் நடத்தையும் விதிக்கப்பட்ட தாக ஆகுமானால் மனிதனின் சிருட்டி மனம் இங்கு எங்கே? ரணங்களை தோல்விகளை, முரண் களை, இரத்தச் சிந்துகளை, கீழ்வரு தலை, வறுமையை எதிர்கொண்ட மனம் அங்கு எங்கே?

அடூரின் படங்களில் இவை எல லாமுமே, இரத்தமும் சதையுமான இந்த நடைமுறை / ஸ்நூல அனுபவங் கள் எல்லாமுமே மௌன இடை வெளிகளுக்குள் கிடக்கிறது. விளக் கப்பட முடியாத மனம் எதிர்க்கத் திராணியற்ற மனமாகவும், உடைத் துக் கொள்ளமுடியாத மனமாகவும் தனக்குள் மருகும் மனமாகவும் விலகி நின்று வேடிக்கை பார்த்துச் சிரிக் கும் மனமாகவும் ஆகிறது.

அடூரின் மனிதர்கள் சூழலுக்குள் விதிக்கப்பட்ட சூழல் குறித்த அதி விளக்கங்கள் கோராத தமது எதிர்ப்பு சக்தியைத் திரட்டிக்கொள்ளாத, உடைத்துக் கொள்ளாத, நிகழ்கால நடைமுறை சமூக அனுபவங்களிலி ருந்து விலகிய மனிதர்கள்.

விடுதலை நடைமுறையில் தோன் றும் அனுபவங்களிலிருந்தே எதிர்ப்பு ணர்வினின்றே வேர் கொள்கிறது.

★★★

# செய்தி சொன்னதும் பல்லி சொன்னதும்...

**செய்தி-** சரக்குக் கப்பலில் தபால் பொதி வரும்

**பல்லி -** எங்களைக் கொல்லவாற கப்பலெண் டாலும் தபால் வரட்டும் என்று ஒரு தாய் சொல்லுவது கேட்கிறது,

**செய்தி-** பாரீஸ் கொள்ளையர்கள் தாக்கிய தமிழ் இளைஞர்

**பல்லி -** இக்கரைக்கு அக்கரை சர்க்கரை என்று போனவருக்கு இந்தக் கசப் பான அனுபவம்.

**செய்தி-** சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவு ஒரு செக்கனுக்கு 803 ரூபா

**பல்லி -** பிச்சை எடுப்பவன் குண்டு துளை யாக் காரில் பவனி.

**செய்தி-** காமினியின் மகன் நவீன் அமைச் சராகப் பதிவு.

**பல்லி-** என்ன அக்கினி புத்திரனுக்கா நியமனம்.

**செய்தி-** யாழ்ப்பாணத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

**பல்லி -** கள்ளு சீசன் வந்து விட்டது. எப்படி யாழ்ப்பாணே விட்டுப் போவது என் கிறார் ஒரு சிப்பாய்

**செய்தி-** பல் துலக்க மின்ருத்பிறஷ்

**பல்லி --** இப்படியான கண்டு பிடிப்புகள் தொடருமானால் மனிதன் கொட் டாவிவிடவும். சிரமப்படுவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இந்துமா கடலின் ஒரே ஒரு விமானம் தாங்கிக் கப்பலுக்கும் அண்மையில் பிரியாவிடை கொடுக்கப் பட்டது.

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான I.N.S. Vikranth 36 வருட அயராத உழைப்பின் பின் சேவையிலிருந்து ஒதுங்கிக்கொண்டது.

இங்கிலாந்தில் 1943ம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு, இரண்டாம் உலக யுத்தத்தினால் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு பின் 1957ம் ஆண்டே கட்டி முடிக்கப்பட்டது. இதன் அப்போதைய பெயர் H.M.S. Hercules.

இக் கப்பல் 1961ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி இந்தியக் கடற்படையில் சேவைக்கு இணைக்கப்பட்டது. அப்போதைய பிரித்தானியாவுக்கான இந்தியத் தூதுவராக இருந்த விஜயலக்சுமி பண்டிட் இக்கப்பலுக்கு 'விக்ரந்த்' எனப் பெயரிட்டார். 1978ம் ஆண்டு அவுஸ்திரேலியா தன்னிடமிருந்த H.M.A.S. Melbourne என்னும் விமானம் தாங்கிக் கப்பலை சேவையிலிருந்து விலக்கிக்கொண்டதன் பின் இந்துமா கடலின் ஒரேயொரு விமானம் தாங்கிக் கப்பலாக 'விக்ரந்த்' மட்டுமே இருந்தது. 20,000 தொன் எடையும், 740 அடி நீளமும் கொண்டதுமான இக் கப்பல், 1500 பேர்கள் தங்கக்கூடியதும், 8 விமானங்கள் நிற்கக்கூடியதுமான வசதியினைக் கொண்டது.

அநேகமாக கப்பல்கள் எல்லாம் சேவையிலிருந்து விலக்கிக்கொண்டபின், அவைகள் கழிவு இரும்பாகவே கணிக்கப்படுவதுண்டு. ஆனால் 'விக்ரந்த்'தைப் பொறுத்தவரையில், இந்திய அரசு அதனை ஒரு கடற்படை நூதனசாலையாக மாற்ற உள்ளது.



அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நகரங்களின் சூழல் பெருமளவில் மாசுபட்டுள்ளன. இவற்றுள் அமெரிக்காவின் பெரும் நகரங்கள் அசுத்தமான வாயுவினால் பெருமளவில் பாதிக்கப்பட்டதை நினைத்துக் கவலைப்பட்ட 'மெல்வின் புறுாஎயிற்' என்பவர் கண்டுபிடித்துள்ள கோபுரம்தான் இது. `Smog Tower' என அழைக்கப்படும் 60 மாடிகளைக் கொண்ட சுமார் 200 மீற்றர் உயரமான இவ்வகையான பல கோபுரங்களை அமெரிக்காவின் பெரும் நகரங்களில் அமைக்க இவர் யோசனை கூறியுள்ளார். முதலாவது கோபுரம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமைக்கப்பட இருக்கிறது.

இதன் மேற்பகுதியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள காற்று உறுஞ்சிகள் மாசுபட்ட காற்றை உறிஞ்சி சுத்தப்படுத்தி, சுத்தமான காற்றை கோபுரத்தின் கீழ்ப்பகுதியினூடாக வெளியே தள்ளும்.

லொஸ் ஏஞ்சல்ஸில் அமைக்கப்படும் முதலாவது கோபுரத்தின் பயனை அடிப்படையாகக் கொண்டு இவ்வகையான நூற்றுக்கணக்கான கோபுரங்களை நாடு முழுவதிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான ஏராளமான பழைய போர் விமானங்கள் தற்போது சேவையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் Grumman A-6 ரக தாக்குதல் விமானங்களும் அடங்குகின்றன. இந்த வகையான 50 விமானங்களை என்ன செய்வது என்று அமெரிக்கக் கடற்படை மண்டையைப் போட்டு உடைத்துக்கொண்டிருந்தது. ஏற்கனவே இவற்றில் சில நூதனசாலைகளாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இவ்வகையான சில விமானங்கள் புளோரிடாவை அண்டிய கடற்பகுதியின் அடிப்பகுதியில் மீன்களின் சரணாலயமாக மாற்றப்பட்டுள்ளன. கடலின் அடிப் பகுதியில் மூழ்கிய நிலையில் உள்ள இவ்விமானங்களின் உள்ளே ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் தங்களது இருப்பிடங்களை அமைத்துக்கொண்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


WOODLANDS சர்வதேச தொலைத் தொடர்பு மையம்



மிக மிகக் குறைந்த
விலையில் உலகளாவிய
தொலைத் தொடர்பிற்கு
நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்!

WOODLANDS

70, Rue Louis Blanc, 75010 Paris. Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27



நம்பமுடியாத விலையில் மீன் வகைகள், இறால், நண்டு,
கணவாய், மரக்கறி வகைகள் மற்றும் மளிகைப் பொருட்கள்
போன்ற உங்களுக்குத் தேவையான அனைத்துப்
பொருட்களையும் ஒரே இடத்தில் நீங்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்


மக்கள் கடை

இது உங்களின் கடை

59, Rue Louis Blanc, 75010 Paris. (Metro: La Chapelle) Tel: 01 42 05 99 02


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்